

5 -NOV 1952
208415

**உங்கள் நண்பர்களை மறக்காதிருக்கின்றீர்களா?**

மறக்காதிருக்க விரும்புவோர் 2 அணு தபால் தலைகளனுப்பி எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்!

○

## பொங்கல் வாழ்த்து.

பலவித நிறங்களில் அழகாக அச்சிடப்பட்ட கவர்ச்சிகரமான பொங்கல் வாழ்த்துக்கள் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

மொத்தத் தேவைக்கு வியாபாரிகள் உடனே எழுதக்கோருகிறோம்.

*மாதிரி வேண்டுவோர் 8 அணு தபால் தலைகள் அனுப்புக.*

## பொன்னி லிமிடெட்

த. பெ. எண். 1165 :: சென்னை — 21

# தமிழ்மண மரபு

செல்வநிலை, பிறப்பு, குடி உயர்வு ஆகியவற்றை எண்ணிப் பெற்ரோர் உற்ரூர் விருப்பப்படியே இக்காலத்தில் திருமணம் நிகழ்கிறது. பண்டைத் தமிழர் முறை யாது? அல்லது பண்டைத் தமிழர் உயர்வாகக் கொண்ட முறை யாது?

நங்கை நம்பியை விரும்புகிருள். நம்பியும் நங்கையை விரும்புகிருன். அனுபவமில்லாத இளநங்கை பெற்ரோர் விருப்பம் எதுவோ என்று கலங்குகிருள். தோழி அவளுக்குத் தமிழ் மரபுப்பண்பை நினைவுறுத்துகிருள். "அவர் மீது நீ காதல்கொண்டது உண்மையானல், உன்மீது அவர் காதல் கொண்டதும் உண்மையானல், அதன் பின் நீ கவலைப்படவேண்டியது ஒன்றுமில்லை. ஏனெனில் உன் தாய் மனமே உன் மனமாக இருக்கும்" என்று கூறுகிருள்.

தாயும் இதே வகைக் காதல் மணம் புகுந்தவளாகத் தானே இருப்பாள்?

தோழியின் கருத்தைக் கலித்தொகைப் பாட்டின் மொழிகளில் காண்க!

(பாட்டு-107, வரி-21-23)

நின்வெய்யன் ஆயின்
அவன்வெய்யை நீயாயின்
நின்னைநோதக்கதோ
இல்லைமன் ; நின்நெஞ்சம்
அன்னை நெஞ்சாகப் பெறின்.

# பொன்னி

## பொருளடக்கம்

மலர் 6 | நவம்பர் 1, 1952 | இதழ் 17

திருவள்ளுவர் ஆண்டு 1983
ஐப்பசித் திங்கள் 16 நாள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
NOV 1952
MADRAS

தமிழ்மண மரபு ... 1
நவீன கும்பகர்ணன் (கார்ட்டூன்) ... 2
புதுவையின் புரவி ... 3
காலமும் கருத்தும் ... 5
விளக்கத்துக்குப் பரிசு ... 6
உலகக் கண்ணேட்டம் ... 7
டாக்டர் மு. வரதராசனர் ... 11
வளரும் இலக்கியம் ... 15
பூவைக்குப் பூவாணமோ? ... 16
காதல் பலி ... 17
இது உலகம் ... 26
வள்ளுவம் ... 33
புது நிலம் ... 41
பிரிவு ... 43
இல்வாழ்க்கை ... 44
ஒற்றை ரோஜா (தொடர்கதை) ... 47
எச். ஜி. வெல்ஸ் ... 55
தாம்பத்தியம் ... 57

★

பொன்னி சந்தா விவரம் : உள்நாடு, இலங்கை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6—0—0; ஆறுமாதம் ரூ. 3—0—0. வெளிநாடு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6-12-0; ஆறுமாதம் ரூ. 3-6-0. இலங்கைக்கு வி.பி.பி. உண்டு.

# நவீன கும்பகர்ணன்!



# புதுவையின் புரளி

வெள்ளை ஏகாதிபத்தியங்கள் இந்திய மாநிலவாழ்வில் நான்கு நூற்றுண்டுகளுக்கு முன் புகுந்தன. அவற்றுள் கடைசியாக வந்த ஏகாதிபத்தியமே இந்தியா முழுவதும் பரந்து நீடித்திருந்த பிரிட்டிஷ் ஆட்சி. கடைசி ஏகாதிபத்தியமும் வலிமைவாய்ந்த ஏகாதிபத்தியமுமான அது விலகிக்கொண்டது. ஆனல் முதலில் வந்த பழங்கால ஏகாதிபத்தியங்கள் இன்னும் நீடித்து இருந்துதான் வருகின்றன. மாறிவரும் உலகச் சூழ்நிலைகளை ஒரு சிறிதும் உணராமல், மலைகள் பறந்தாலும் குன்றுகளாகிய தாம் நிலைத்து நிற்கலாம் என்று அவை நினைத்து வருகின்றன.

கடலில் தீவுகள் நிலவுவதுபோல, இந்தியாவுக்குள் சிறு தீவு, திட்டைகளாக இருந்துகொண்டு அவைகள் விழிப்புற்ற மாநில மக்களின் அமைதியையும் அவாவையும் தடுக்கப் பார்க்கின்றன. காலத்துக்கேற்றபடி வளைந்துகொடுக்கும் திறமையுடைய பிரிட்டிஷ் சிங்கமே ஏகாதிபத்தியக் கனவை விட்டுவிட்ட நிலையில், விட்டுக்கொடுப்பு, மனித உணர்ச்சி ஆகியவற்றை அறியாது போர்ச்சுகல் போன்ற சின்னஞ்சிறு ஏகாதிபத்தியங்களின் சிறு தீவுகளும் இரண்டாம் உலகப் போரில் தன் வாழ்வுக்கே தத்தளித்த பிரஞ்சு ஏகாதிபத்தியத்தின் தீவு திடல்களும் எம்மாத்திரம்!

இந்தியக் கூட்டுறவிலிருந்து ஏகாதிபத்தியங்கள் வெளியேற்விடவேண்டுமென்று மாநில முதல்வர் நேரு, பாரிஸிலுள்ள பிரஞ்சு அரசாங்கத்துக்கு அறிவித்தபோது, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம், ஆகியவற்றின் கொடியேந்திய அந்த அரசாங்கத்துக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்ததாம்! ஏன்? சின்னஞ்சிறு போர்ச்சுகலுடன் அந்த உயர்தர ஏகாதிபத்தியத்தைச் சேர்த்து முதல்வர் நேரு கூறிவிட்டாராம்! ஏகாதிபத்தியங்களுக்கே விடை கொடுத்தனுப்பும் இன்றைய உலகிலே அந்த அரசாங்கம் இன்னும் முதல் 'கிளாஸ்' ஏகாதிபத்தியம், இரண்டாம் 'கிளாஸ்' ஏகாதிபத்தியம் என்று படிமுறைக் கணக்குப் போட்டுப் பார்க்கிறது.

அப்பன் அங்கே அப்படி இருந்தால், இங்கே பிள்ளைக்குக் கேட்பானேன்? இந்தியாவிலுள்ள பிரஞ்சு அரசாங்கம் ஒரு புறம் பொதுமக்கள் வாக்கெடுப்பு எடுக்க இணங்குவதாக அறிவித்துக் கொண்டே, அந்த வாக்கெடுப்பைத் தன்சார்பான வாக்கெடுப்பாக்கப் பார்க்கிறது. எதிராக யாரெல்லாம் வாக்குக் கொடுக்கக்கூடும் என்பதை அறியவும், அவர்களை அச்சுறுத்தி அடக்கி ஒடுக்கவும் முயன்று வருகிறது. இந்தியக் கூட்டுறவுடன் இணைய விரும்பும் இணைப்பியக்கத்தவர்கள் மீது ஓராண்டுக் காலமாக இங்ஙனம் குடியாட்சிப் பண்புக்குத் தகாத கண்ணோட்டமும் நடவடிக்கைகளும் செய்துவருகிறது.

சென்ற மாதத்தில் அவர்கள் அடக்குமுறை தம் ஆட்சி எல்லைமீறி இருக்கிறது. சென்னைக்கு வந்த முதல்வர் அதுபற்றிக் குறிப்பிட்டபோது, இந்நடவடிக்கைகளால் இந்திய அரசாங்கத்தின் அமைதியான கொள்கை மாறுதென்றாலும், அதற்கான நடைமுறைகள் மாறவேண்டிவரும் என்று எடுத்துக்காட்டினார். குடியாட்சி முறையில் நேர்மையான வாக்கெடுப்பு எடுப்பதுபற்றிய இந்தியாவின் நம்பிக்கையை அது தடுத்துவிட்டதால், இனி பிரஞ்சு அரசாங்கம் அம்முறையைக் கோரமுடியாது என்று அவர் அறிவித்தார். இம்முடிவு சரியானது என்று அரசியல் முற்போக்குக் கருத்துடைய எல்லா மக்களும் ஒத்துக்கொள்வார்கள்.

பிரஞ்சிந்தியா என்பது தமிழகத்துக்குத் தண்டமிழ்ப் புதுவையாக விளங்குவது. தெற்கே தஞ்சைப் பகுதியிலுள்ள காரைக்காலும் அதைச் சேர்ந்தது. இரண்டிடங்களும் தமிழகத்திலிருந்து எவ்வகையிலும் வேறுபிரித்தறிய முடியாதவை. அங்குள்ள தமிழர் நலங்களும் தமிழகத் தமிழர் நலங்களும் வேறல்ல. இந்த நிலையில் புதுவை அரசியலார் இந்தியாவிலிருந்து அங்கு செல்பவர்களின் கொள்கைகளைப்பற்றிக் குறுக்குக் கேள்விகள் கேட்டுஅவர்கள் அமைதியான வாழ்க்கை உரிமைகளில் தலையிடுவது போதாமல், பிரஞ்சிந்திய மக்கள் குடியுரிமைகளையும் நசுக்குகின்றனர். இந்திய இணைப்பை ஆதரிக்கும் மக்கள் பலர் அவ்வடக்கு முறைககு அஞ்சி வெளியேறுகின்றனர்.

அடக்குமுறையின் கை பிரஞ்சு எல்லைகடந்து, இந்திய எல்லையிலும் தலையிடுகின்றது என்றும், இரண்டு இந்திய காவல்துறைவர்களைத் தாக்கியுள்ளது என்றும் தெரிகிறது. அரசியல் காரணங்களுக்காக இத்தகைய நடவடிக்கை எடுக்கும் அரசாங்கம் எதுவாயினும், அது நாகரிக உலகின் அரசாங்கம் என்று கூறுவதற்குரியதல்ல. முதல்வர் நேருவின் கண்டனம் அந்த அரசாங்கத்துக்கு ஒரு எச்சரிக்கையாயிருக்குமென்றும். அவர்கள் போக்கில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்படும் என்றும் நம்புகிறோம். ★

# காலமும் கருத்தும்



## ஆர். கே. எஸ். மணிவிழா.

அரை நூற்றாண்டு தமிழகத்துக்குப் பல வகையிலும் அயராத்தொண்டு இயற்றிய. அறிஞர் ஆர் கே. சண்முகம் செட்டியார் அவர்கள் அறுபதாண்டு நிறைவைத் தமிழர் கவனிக்காது விட்டுவிட்டார்கள் என்ற அவச்சொல்லுக்கு இடமில்லாமல், அதன் நிறைவு நாளாகிய அக்டோபர் 17 அன்றே கோவைத் தோழர்கள் பலர் ஆர். கே. எஸ். அவர்களை நேரில் வாழ்த்திப் பெருமைப் படுத்தி விழாக் கொண்டாடியிருக்கிறார்கள். அதே தேதியில் வேறு இடங்களிலும் விழாக் கொண்டாடப்பட்டது என்று அறிகிறோம். ஆனால் விழாக் கொண்டாடுவோர் முன்கூட்டிப் பத்திரிகையுலக ஆட்சியாளரை அணுகாததாலோ அல்லது பத்திரிகை உலக ஆட்சியாளர் அதில் அவ்வளவு அக்கரை காட்டாததாலோ அவ்விழா திட்டமிட்ட முறையில் தலைநகரில் நடக்காது போய்விட்டது. ஆயினும் இக்குறையைத் தீர்க்கும் முறையில் சென்னையிலுள்ள பல பொதுத் தலைவர்களும் நிலையங்கள், மன்றங்கள் பேராட்களும் அக்டோபர் 26உ கூடி, விழாவை நவம்பர் 11உ சிறப்பாக நடத்துவதென முடிவு செய்துள்ளது பாராட்டத்தக்கது. உலகத்தால் கவனிக்கப்படாத தமிழகத்தில் பிறந்தும், உலகறிந்துவிட்ட ஒரு சில தமிழருள் ஒருவரான இப்பெரியார் விழா தமிழக அன்பர்கள் முயற்சியால் இனிது நடைபெறுமென நம்புகிறோம்.

## செங்கற்பட்டு மாவட்ட அரசியல் மாநாடு.

செங்கற்பட்டு மாவட்ட அரசியல் மாநாடு அக்டோபர் 19உ திரு. காமராஜர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. வி. நடேசன் வரவேற்பாளராகவும், முதல்வர் சி. இராஜகோபாலச்சாரியார் அவர்கள்மாநாட்டுத்திறப்பாளராவும் இருந்து உரையாற்றினார்கள். திரு பி. நடேசன் தம் வரவேற்புரையில் காங்கிரஸ் ஊழியர்கள் அரசாங்கத்துடன் பொதுமக்கள் ஒத்துழைப்பை வளர்த்து ஆக்கமுறைத் திட்டங்களில் ஈடுபட வேண்டுமென்றும், ஐந்தாண்டுத் திட்டம், கிருஷ்ணா பெண்ணையாற்றுத் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றி மக்கள் நல்லெண்ணப் பெருக்கத்துக்கு வகை தேட வேண்டுமென்றும் கூறினார். இராஜாஜி அவர்கள் தம் வரவேற்புரையில் காங்கிரசுக்கு வெளியிலுள்ள பிற கட்சிகளை நிரந்தர விரோதிகள் என்றும் பொறாமை, கோபம் ஆகியவை காரணமாகப் பிரிந்தும் கட்சி மாறியும் வருபவர்களே காங்கிரசைப் பலவீனப்படுத்துவதாகவும் குறிப்பிட்டார். தலைவர் தமிழகத்தில் பஞ்ச நிலை எற்பட்டிருப்பதை ஒத்துக்கொண்டு 'நல்ல மழை வந்துவிட்டால் பிரச்னையை ஒரு மாதிரி சமாளிக்க முடியும். இல்லை என்றால் கஷ்டம்தான்' என்றும் விமரிசனம் செய்தார்.

## பஞ்சமும் உணவு முடையும்.

மத்திய இந்திய அரசியலாரின் திட்டமில்லாத கருத்தற்ற உணவுக் கொள்கையினால், மக்கள் விரும்பும் உணவுக்கு முடைஎற்பட்டிருக்கிறது. மத்திய அரசியலார் இவ்வகையில் சென்னை நிலையை எண்ணி அக்கறை காட்டி உதவ முன்வருவார்களா?




# விளக்கத்திற்குப் பரிசு!

சென்ற இதழில் தீபாவளிச் சூழ்நிலை கொண்ட அட்டைப் படத்திற்குரிய விளக்கவுரைகள், பலபல கோணங்களில் நின்றியங்கும் வகையில் நிறைய வந்து குவிந்துவிட்டன. சுவை மிகுந்திருந்தன ஒருசில கட்டுரைகள். அவற்றில் பொருள் நயம் கொண்டிருந்த மூன்றில் ஒன்றைமட்டும் பரிசுக்குரியதெனத் தேர்ந்து வெளியிட்டிருக்கிறோம்.

விளக்கவுரைப் போட்டியின் பரிசுக்குரியவர் எழுத்தாள நண்பர் பி. எஸ். ராமகிருஷ்ணன். பரிசு பெற்ற கட்டுரை மற்றொரு பக்கத்தில் இருக்கிறது!

இவ்விதழ் அட்டைப் படத்தின் 'டிப்டாப்' மனிதரைப் பற்றி இங்கே ஒன்றுமே சொல்லப் போவதில்லை. ஏதாவது சொல்ல வாயெடுத்தால், படத்தின் நினைவு சிரிப்பாக வெடித்து வார்த்தைகளுக்கு 144 போட்டு விடுகிறது. நீங்கள் சிரிக்காமல் சொல்லுங்கள் பார்க்கலாம்; ஆனால் நாங்கள் சிரிக்கவேண்டும்; விழுந்து விழுந்து சிரிக்கவேண்டும்...! உங்கள் விளக்கங்களை அனுப்பிவைக்க என்று கடைசிநாள் என்றுதானே கேட்கிறீர்கள்? முடிவு தேதி 8—11—'52. பேனா பிடிக்கும் எந்தக் கை இந்தக் கடைசி விளக்கவுரைப் போட்டியின் பத்து ரூபாய் பரிசைத் தட்டிக்கொண்டு போகிறதென்று பார்ப்போம்!

1. விளக்கவுரைகளை நூலஞ்சலில் (புக்போஸ்ட்) அனுப்பினால் போதும்; அத்துடன் கடிதங்கள் இணைக்கவேண்டாம்.
2. விளக்கவுரை 'பொன்னி'யில் ஒரு பக்க அளவை மீறக் கூடாது.
3. ஒருவர் ஒரு விளக்கவுரைதான் அனுப்பலாம்.
4. கீழ்வரும் கூப்பனில் தங்கள் பெயர், விலாசங்களை எழுதி விளக்கவுரையுடன் அனுப்பவேண்டும். கூப்பனின்றி வரும் விளக்கவுரைகள் கவனிக்கப்படமாட்டா.

பொன்னி **1-11-52** இதழ் விளக்கவுரைப்போட்டி

பெயர் : ......................................

முகவரி ......................................

......................................

......................................

**தேதி** ....................

# உலகக் கண்ணோட்டம்



'வில்லன்'

## யுத்தம் வருமா?

உலகில் யுத்த பயம் இருந்துதான் வருகின்றது. 'கோல்ட் வார்' எனப்படும் பிரசார யுத்தம், யுத்தத்தை ஆரம்பித்து நடத்தக்கூடியவர்களின் பலமான யுத்த முஸ்திப்புக்கள், மும்முரமாக நடந்து கொண்டுதான் வருகின்றன. ஒருபுறம் கம்யூனிஸ்ட் ருஷியா திரைமறைவில் யுத்த சன்னத்தமாகி வருகின்றன. தான் போரை விரும்பவில்லை, சமாதானத்தையே விரும்புகின்றது என்று இடைவிடாமல் பிரசாரம் செய்து வந்த போதிலும், அமெரிக்காவே தன் எதிரியென்றும், அமெரிக்கா உலக ஆதிக்கத்தை விரும்புகிறதென்றும், அவ் ஆதிக்கத்திற்கு ஒரே தடை சோவியத் ருஷியாவே எனக் கருதுகிறதென்றும், ஆகவே தன்னைச் சமீபத்தில் அமெரிக்கா தாக்கியே யாகவேண்டுமென்றும் அஞ்சி யுத்த சன்னத்தமாகி வருகின்றது. மற்றொருபுறம் அமெரிக்கா வெளிப்படையாகவே யுத்த சன்னத்தமாகி வருகின்றது. தான் போரை விரும்பவில்லை, சமாதானத்தையே விரும்புகின்றது என்று பிரசாரஞ் செய்து வருகின்றபோதிலும், உலகெங்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் மூலமாகத் தன் ஏகாதிபத்தியத்தைப் பெருக்கி வரும் சோவியத் ருஷியாவைச் சும்மா விட்டுவிட்டால் தனக்கே ஆபத்து நேரிடுமென்றும், எங்கெங்கு கம்யூனிஸ்ட் கட்சி ஓங்குகின்றதோ அங்கங்கெல்லாம் சோவியத் ருஷியாவை மட்டந் தட்டினாலொழிய உலக ஜனநாயக நாடுகளுக்கு ஆபத்து நேரிடுமென்றும், உலக ஜனநாயகத்தைப் பாதுகாப்பது தன் விசேஷப் பொறுப்பென்றும் கூறி யுத்தசன்னத்தமாகி வருகிறது. அமெரிக்கா தன் பணப் பலத்தால் நாடுகளைத் தன் கட்சிக்கு இழுக்கின்றது. உலகெங்கும் போர்த் தளங்களை உரிய நாடுகளிலிருந்து பெற்று அரண் செய்து வருகின்றது. சென்ற இரண்டு மகாயுத்தங்கள் காரணமாகப் பலவீனமுற்ற பிரிட்டன், பிரான்ஸ் போன்ற வல்லரசுகளுக்குப் பக்கபலமாக நின்று துணைபுரிந்து வருகின்றது. இவ்வல்லரசுகள் பலவீனமுறாமல் இருக்க, குடியேற்ற நாடுகளில் சுதந்திரத்துக்காகப் போராடும் மக்களுக்கு எதிராகவும் ராணுவத் தளவாடங்கள் அளித்து உதவி வருகிறது. கம்யூனிஸத்தை ஒடுக்க ஏழைக் கொரிய மக்களின் நாட்டைச் சுடுகாடாக்கியும், நாட்டிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட ஷியாங்கேஷேக்குக்கு கம்யூனிஸ்ட் சீனாவுக்கு விரோதமாக ஆதரவளித்தும், கம்யூனிஸ்ட் சீனாவை உலக அரங்கில் சேர்த்துக்கொள்ளாமல் தடுத்தும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் தன்செல்வாக்குக்குட்பட்ட நாடுகளை உபயோகித்துத்தன்போக்குகளுக்கு ஆதரவுபெற்றும் வருகின்றது. இந்த நிலையில்தான் மக்கள் மனத்தில் யுத்த பயம் நீடித்திருந்து வருகின்றது. ஆனால் யுத்தம் வருமா? யுத்தம் வந்தால் உலகம் நாசமாய்ப்போகும் என்பதைத்தெளிவாக அறியும் கம்யூனிஸ்ட் ருஷியாவும் அமெரிக்காவும் யுத்தத்தில்

இறங்குமா? அமெரிக்கா தன்னிடமே உலகை ஒரு நொடியில் அழிக்க வல்ல அணுகுண்டின் ரகசியமுளது என இறுமாந்தது. ருஷியா தன்னிடமும் உள்ளது எனக் காட்டியபின் புதுவகையான, பன்மடங்கு நாசம் விளைவிக்கும் அணுகுண்டுகளையும் அக் குண்டுகளைத் தாங்கிச் செல்லும் புதுவகை விமானங்களையும் இதர முஸ்தீப்புக்களையும் கோடிக்கணக்கான டாலர் செலவில் அமெரிக்கா செய்து வருகிறது. கிழடு தட்டிய பிரிட்டிஷ் சிங்கங்கூடத் தானும் அணுகுண்டின் ரகசியமறியும் என ஆஸ்திரேலியா அருகில் சமீபத்தில் காட்டிவிட்டது. இங்ஙனம் ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகள்மீது அணுகுண்டுகள் எறிந்தால், உலகம், நாகரிகம் ஆகிய யாவும் சுடுகாட்டுச் சாம்பலாய்த்தானே போகும்? இங்ஙனம் அறிந்தும், அமெரிக்காவோ, சோவியத் ருஷியாவோ துணிந்து யுத்தத்தில் இறங்குமா என்பதே பிரச்சினை. அமெரிக்கா யுத்தத்தில் இறங்கத் துடிக்கிறது. கம்யூனிஸ்ட் ருஷியா ஒழிந்தால்தான் உலகத்திக்கு க்ஷேமம் என்று கர்ச்சிக்கிறது. சமாதான பீரங்கிகளில் வேட்டுவிட்டுக்கொண்டே கம்யூனிஸ்ட் ருஷியா திரைமறைவில் யுத்த சன்னத்தமாகித்தான் வருகின்றது. ஆயினும் துணிந்து இறங்குவது யார்? அதுவே பிரச்சினை. இதெல்லாம் என்ன ஆகிறது பார்ப்போம்.

## ஆசியாவில் கொந்தளிப்பு

ஆசியாவெனில், ஆப்பிரிக்காவிலுள்ள எகிப்தையும் சேர்த்துத்தான் சொல்லுகிறோம். எகிப்து விடுதலையடைந்ததும்பிரிட்டிஷ் பிடியிலிருந்து பூரணமாக விடுபடவில்லை. எகிப்திய மன்னன் பிரிட்டிஷாருடன் உறவாடினான்; சுயநலத்திலும் சுகபோகத்திலும் களித்தான். எகிப்தியப் பிரமுகர் மக்களைச் சுரண்டிச் சுகவாசஞ் செய்தனர். நல்லகாலமாக நகீப் தோன்றி அமைதியான முறையில் புரட்சியொன்று நடத்தினார். மன்னன் பரூக் மறைந்தான். அவனுக்குப் பக்கபலமாயிருந்தவர்கள் பிடிபட்டனர். சீர்கெட்ட கட்சிகள் கலைக்கப்பட்டன. இன்று எகிப்து மக்களின் பேரால் ஒரு சர்வாதிகாரம் நடக்கிறது. ஆனால் அது எகிப்திய வாழ்க்கையைப் பரிசுத்தம் செய்யும் சர்வாதிகாரம். நாட்டைப் படுகுழியில் தள்ளின பரூக் இந்தச் சர்வாதிகாரத்தைக் கம்யூனிஸம் எனத் தூற்றலாம். ஆனால், அவரை நம்புவார் எவருமில்லை. மலேயாவிலும் இந்தோசீனாவிலும் கொந்தளிப்பு நீடித்திருந்து வருகிறது. இதற்குக் காரணம் மக்களல்ல, பிரிட்டனும் பிரான்சுமே. இந்த ஏகாதிபத்தியங்கள் கலகக்காரர்களை அடக்கக் கடும் போர் புரிந்து வருகின்றன. மக்களுக்குச் சுயாட்சி அளித்து உதவி புரிவதே அவற்றின் நியாயமான வழி. ஆனால் ஏகாதிபத்திய ஆசை யாரை விடுகிறது? அமெரிக்கரின் துணைகொண்டு வியட்மினை ஒழிக்க பிரான்ஸ் நினைக்கிறது. பிரான்ஸ் எந்தக் குடியேற்றநாட்டிலும் அரசாங்கங்கள் பரிபாலன விஷயத்தில் நல்ல பெயர் எடுக்கவில்லை. வியட்நாமை நன்றாக ஆண்டிருந்தால் இன்று அங்கே வியட்மின் தோன்றியிருக்கத் தேவையில்லை. இனியேனும் உலக நலம்ஏற்படவேண்டுமானால்பிரான்ஸ் வியட்மினுடன் சமாதானம் செய்துகொள்ளும். இல்லையேல் சமீபத்தில் சீன உதவிபெறும் வியட்மினால் முறியடிக்கப்பட்டுத் துரத்தவே படும். பிரிட்டிஷார் கம்யூனிஸம் என்று அச்சுறுத்திக் கலகக்காரர்மீது கடும் போர் புரிந்து வருகின்றனர். மக்களைத் தாராளமாக நடத்தி அவர்கள் உதவியுடனேயே கலகத்தை ஒழிக்கக் கூடும் என்பதை அவர்கள் இன்னும் உணராமலிருப்பது வருந்தத்தக்கது. சீனாவில் கம்யூனிஸம் ஓங்கி நிற்கிறது. இதற்குக் காரணமாயிருப்பவர்கள் அமெரிக்கரே. சீனாவில் கம்யூனிஸ்ட்டுகள் கை ஓங்கியிருப்பினும், இதர கட்சியினருடன் கலந்தே அரசாங்கம் நடக்கிறது. ஆனால் அமெரிக்கரின் குருட்டுத்தனத்தினால் கம்யூனிஸம் ஓங்குகிறது. சீனர் இன்று சோவியத் ருஷியாவின் உதவியை நாடி நிற்கின்றனர். கம்யூனிஸத்தை ஒழிக்க

சீனக் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை ஒழிக்கக் கருதுகின்றனர் அமெரிக்கர். சீனா மக்களுடைய முழு ஆதரவுடைய அரசாங்கமாயினும், அது ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் இடம் பெறாமல் தடுத்து வருகின்றனர் அமெரிக்கர். இதனால் சீனா சோவியத்தின் உதவியையே நாடி வருகிறது. சீனா அமெரிக்காவைக் கடுமையாக எதிர்த்து நிற்கிறது. கொரியாவில் அமெரிக்கா தலையிட்டிருப்பது அந் நாட்டுக்கு மட்டுமல்ல, ஆசியாவுக்கே பெருந் தீங்காகும். கொரியாவில் கம்யூனிசம் பரவினால் அது கொரிய மக்களின் விஷயம். அமெரிக்கா என் தலையிட்டுக் கொரியாவைப் பாலைவனமாக்க வேண்டும்? சோவியத்தை ஒடுக்க வேறு வழியில்லையா? கொரியா நாட்டைச் சுடுகாடாக்கித் தானா சோவியத்தை ஒடுக்க வேண்டும்? ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் அங்கீகாரத்துடனேயே அமெரிக்கா தலையிட்டது என்பது பித்தலாட்டத்தனம். இன்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் அமெரிக்காவின் ஆதிக்கத்துள் அகப்பட்டிருப்பதை யார் அறியார்? பாரசீகமும் எகிப்தைப்போல பிரிட்டிஷாரை எதிர்த்து நிற்கிறது. சுரண்டும் காலம் போய் விட்டது என்பதைப் பிரிட்டன் இன்னும் உணரவில்லை. பாரசீகம் பிரிட்டனுடனும் தன் உறவை அறுத்துக் கொண்டுவிட்டது. சோவியத் ருஷியாவின் உதவியை அது நாடினால் என்ன தவறு? ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாகச் சொல்லும் அமெரிக்கா பிரிட்டன் விஷயத்தில் தாட்சண்யம் காட்டுவதேன்? அராபியரும் விழித்துக் கொண்டுவிட்டனர். இன்று பலவீனராக இருக்கலாம்; ஆனால் மக்களின் எழுச்சியை எத்தனை காலம் தடுக்கமுடியும்? டுனீசியாவிலிருந்து பிரெஞ்சுக்காரர் விரட்டியடிக்கப்படும் நாள் வெகு சீக்கிரமே வரும். அமெரிக்கா ஐக்கிய நாடுகள் ஸ்தாபன அசம்பிளியில் டுனீசியரை ஆதரித்துப் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு எச்சரிக்கை செய்யாவிடின், அமெரிக்கர் இனி ஆசிய மக்களின் நல்லெண்ணத்தை இழந்துவிடுவார். இனி அவர்கள் ஜனநாயகப் பாதுகாப்புக்காகவே சோவியத் ருஷியாவுடன் போராடுவதாகச் சொல்லித் திரிய முடியாது.

## இந்தியாவில் சமூக நலன் திட்டம்

இந்திய வெளிவிவகாரங்கள் விஷயமாகவும் உள்நாட்டு விவகாரங்கள் விஷயமாகவும் பல சிக்கல்களைச் சமாளிக்கவேண்டியிருக்கிறது. நம் நாட்டு விவகாரங்களைத் தலைமை தாங்கி நடத்தும் நம் நேரு அவற்றைப் பல கஷ்ட நிஷ்டூரங்களுக்கிடையே சமாளித்து வருகின்றார். அவருக்கு நம் அன்பும் வணக்கமும் உரித்தாகுக. அமெரிக்கரின் ஆதரவுடன் அவர் ஆரம்பித்துள்ள சமூக நலத் திட்டம் நம் கிராம மக்களின் வாழ்க்கையில் ஒரு பெரும் புரட்சியை உண்டாக்க வல்லது எனில் அது மிகையாகாது. இத்திட்டம்தான் என்ன? நம் மக்களில் பெரும்பாலோர் கிராமங்களில் தான் வசிக்கின்றனர். ஆயினும் கிராம வாழ்க்கை சீர்கெட்டுவிட்டது. அதில் ஜீவனே போய்விட்டது. மக்கள் பஞ்சத்தினாலும் பிணியினாலும் வருந்துகின்றனர். உழவு செவ்வனே நடப்பதில்லை; தொழில்கள் நடப்பதில்லை; கல்வியில்லை; சுகாதாரமில்லை; வைத்திய வசதியில்லை; கலை வாழ்வில்லை; ரோடுகள் இல்லை. கூட்டுறவு முயற்சிகளில்லை. இந்நிலையினின்று எழுந்து உத்தாரணமடைய வேண்டுமானால் மக்கள் தாமே ஒருங்குகூடி சுய முயற்சியால் கடைத்தேறவேண்டும். அரசாங்கமோ, வேறுஎவரோ யாவற்றையும் அவர்களுக்குச் செய்துவிட முடியாது. மக்கள் உயர்நிலையடைய அவாக்கொண்டு தாமே சுய முயற்சிகளில் ஈடுபடுவாராயின் அரசாங்கமோ பிறரோ வசதிகள் அமைத்துத் தந்து வழிகாட்டலாம். அமெரிக்க மூலதனத்துடனும், தொழில் நுட்ப வசதிகளுடனும் இன்று இந்திய அரசாங்கம் ஆரம்பித்துள்ள சமூக நலத் திட்டம் இவைகளுக்கு வழி சொல்கிறது. மக்கள் தாமே தம் உழைப்பை உத்சாகமாக அளித்து ரோடுகள் போடவும், கிணறுகள்

வெட்டவும், கால்வாய்கள் போடவும், கூட்டுறவு ஸ்தாபனங்கள் அமைக்கவும் ஊக்கப்படுகின்றனர். அரசாங்கம் தொழில் நுட்ப ஆலோசகர்களை அளித்துப் புத்தி கூறுகிறது. நீர்ப் பாசனங்கள் அமைக்கத் தேவையான இயந்திர சாதனங்களை அளிக்கிறது. புதுவகைக் கலப்பைகள் டிராக்டர்கள் அளிக்கிறது—நல்ல ரகமான விதைகள் அளிக்கிறது—பூமியின் வளத்தை அதிகரிக்க உரிய எரு வசதிகளை அளிக்கிறது—மக்களின் கல்விக்காகப் பள்ளி அமைக்கிறது—சுகாதாரப்போதனைகள் அளிக்கிறது—மக்களிடையே இவைகளைப்பற்றியெல்லாம் போதிக்கவும் வழி நடத்தவும் பல பேர்களுக்குப் பயிற்சியளித்துக் கிராமாந்திரங்களுக்கு அனுப்புகிறது. கிராம மக்கள் தம் உழைப்பாலும் அரசாங்கத்துடன் கூட்டுறவு செய்வதாலும் தம் கிராம வாழ்க்கையில் ஒரு புரட்சியுண்டாக்கித் தம் வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ளவேண்டும் என்பதே கருத்து. இத்திட்டம் வெற்றிபெறுமானால் தேங்கிக் கிடக்கும் கிராம வாழ்க்கை புத்துயிரும் புத்தெழுச்சியும் பெறும். கிராம மக்கள் பண்டுபோல் ஒன்று கூடி வாழ்ந்து தம் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்துகொள்வர். இம்மகத்தான வேலையில் அமெரிக்கரின் உதவி நமக்குக் கிடைத்திருப்பது நம் பாக்கியம். இந்தியா அமெரிக்கருடன் அரசியலில் சேராதிருந்தும் அவர்கள் நல்லெண்ணத்துடன் அளிக்க முன்வந்திருக்கும் இவ்வுதவியை ஏற்றுப் பயனடைவதில் தவறு ஒன்றுமில்லை முழு உத்சாகத்துடன் இத்திட்டம் வெற்றிபெற உதவினால் மக்கள் பயனடைவர் என்பதில் ஐயமில்லை. எத்திட்டத்திலும் சில குறைகள் இருக்கலாம். ஆனால் குற்றங் குறைகளையே வலியுறுத்திக் கொண்டிருந்தால் ஒரு நல்ல காரியமும் நடக்காது. இந்தச் சமூக நலத் திட்டத்தில் நம்பிக்கையில்லாதிருப்பவர் சிறிது காலம் மௌனமாக இருந்து தடைபோடாமலிருப்பதே அவர்கள் நாட்டுக்குச் செய்யக்கூடிய பெருஞ் சேவையாகும்! ★

# அடுத்த இதழில்

எழுத்தாளர் பேட்டி

**'ஜீவா'**

★

## தாம்பத்தியம்

(சிறுகதைத் தொடர்ச்சித்திரம்)

'அநுத்தமா'

எழுதும் கதை

★

## உலகக் கண்ணோட்டம்

'வில்லன்'

வரையும்

அரசியல் விமரிசனம்

★

ப. கோதண்டராமன்

வாணிதாசன்

நா. ஜெகநாதன்

அமரன்

புஷ்பதிலகா

சுப்ரதீபன்

ஆகியவர்கள் எழுதுகிறார்கள்

# டாக்டர் மு. வரதராசனார்

பேட்டிக்கட்டுரை :

பூவை: எஸ். ஆறுமுகம்

**"சினிமா பார்ப்பது தவறு என்ற சென்னை முதல்வர் சி. இராஜகோபாலாச்சாரியார், பெரியார் ஈ. வே. ராமசாமி ஆகியவர்கள் கருத்துக்களைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"**

"எந்தக் கலையையும் நன்மைக்கும் பயன்படுத்தலாம், தீமைக்கும் பயன்படுத்தலாம். ஆனால் சினிமா தீமை செய்கிறதே என்று அஞ்சுவதைவிட, அதைச் சீர்திருத்தி மக்களுக்குப் பயன்படும் முறையில் உபயோகப்படுத்துவதுதான் சிறந்தது என்று நினைக்கிறேன்."

'பொன்னி'யின் தமிழ் எழுத்தாளர் பேட்டி வரிசையில் இம்மாதம் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் பேட்டி நடைபெற்றபோது, அவர் 'பொன்னி' ஆசிரியர் கேள்விகளுள் ஒன்றுக்கு அளித்த பதிலே மேலே தரப்பட்டிருக்கிறது.

நாளது 25வ மாலை 6-30 மணிக்கு, பேட்டிக்காக முன்கூட்டித் திட்டப்படுத்தியிருந்தபடி, நானும் 'பொன்னி' ஆசிரியர் அவர்களும் சென்னை அமைந்தகரையில் உள்ள டாக்டர் அவர்கள் இல்லத்தை அடைந்தோம். கடந்த சில நாட்களாகப் பெரியார் அவர்கள் உடல்நலம் குன்றிப் படுக்கையில் கட்டுப்பட்டிருந்தபோதிலும், 'பொன்னி' மீதுள்ள ஆர்வத்தால் பேட்டிக்கு இசைந்ததன்றி, உடல்நிலையைக்கூடப் பொருட்படுத்தாது இன்முகத்துடன் வரவேற்றார்.

பேட்டியின்போது அவர் மேலும் கேள்விகளுக்கு அளித்த பதில்களாவன :

## நாடகம், சினிமா

**"நாடகம், சினிமா ஆகியவை ஒன்றுக்கொன்று உதவியான கலையா, போட்டிக் கலையா? அவை ஒன்றுக்கொன்று உதவ முடியுமா?"**



டாக்டர் மு. வரதராசனார்

"சினிமா நாடகக் கலைக்குப் போட்டிதான். அது நாடகத்தை அழிக்கவல்லது; அழித்தே வருகிறது. ஏனென்றால் நாடகத்துக்குப் பொருள் வளம் இல்லை என்றாலும் நாடகம் உண்மையான கலை. ஏனென்றால் அதில் பலர் பயிற்சிபெற இடமுண்டு. சினிமாவிலோ, நடிப்பும்

கலையுணர்ச்சியும் செயற்கைத் தன்மை வாய்ந்தவை. கலைஞன் கலை துண்டு துணுக்காகிவிடுகிறது. நாடகக்கலை வளர அரசாங்கமும் மக்களும் ஆதரவு தரவேண்டும்

"நாவல் எழுதுவதிலும் சினிமாவுக்கு எழுதுவதிலும் தாங்கள் பெற்ற அனுபவம் என்ன?"

"நாவல் எழுதுவது கலைஞனுக்குத் தனியின்பம் தருகிறது. கற்பனை உலகம் மனநிறைவு தருவதுடன் உலகுக்கும் வழிகாட்டுகிறது. நாம் நல்லது செய்தோம், நல்ல உலகை ஆக்கினோம் என்ற மன நிறைவு கலைஞனுக்கு ஏற்படுகிறது.

சினிமாவுக்கு எழுதுவதில் இத்தகைய இன்பம் இல்லை. ஆயினும் நாவல் சென்று எட்டாத இடமெல்லாம் சினிமா சென்று எட்டும். இவ்வகையில் சினிமாவினால் தனிப்பயன் உண்டு, தக்கபடி பயன்படுத்தப்படுமானால்"

## இந்தியும் தமிழும்

"இந்தி பொதுமொழியாவதைப்பற்றியும் அதன் பலாபலன்கள் பற்றியும் தங்கள் கருத்தென்ன?"

"தமிழ் நாட்டுப் பிரிவினை நிறைவேறுதல், தமிழ் அரசியல் மொழி ஆதல் ஆகிய இரண்டுமாகாமல் இந்தி பொதுமொழி ஆனால், பெருந் தீங்கு விளையும்"

"தமிழ் வளர்ச்சிக் கழகம் செய்த, செய்துவரும் தொண்டு யாது?"

"தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் முதல் தொண்டு கலைக் களஞ்சியம். அது நல்ல, போற்றத்தக்க முயற்சி, சிறு குறைகள் இருந்தாலும். இத்துறையில் அது நல்ல தொடக்கம் ஆகும்"

"இன்றைய அரசாங்கம் தமிழ் வளர என்ன செய்யலாம்?"

"நல்ல இலக்கிய நூல்களை அரசாங்கம் வெளியிடவேண்டும். பழைய இலக்கியங்களைப் பேணுவதில் முதன்மையான சிரத்தை கொள்ளல் இன்றியமையாதது. பம்பாய் அரசாங்கத்தார் திரு. பி. ஜி. கேரின் முயற்சியால் துக்காரம் பாடல்களை மொத்தம் 1500 பக்கங்கள் கொண்ட இரண்டு ஏடுகளாக இரண்டும் சேர்த்து ரூ 2-8-0 ஆகிய மிகமிகக் குறைந்த விலைக்கு வெளியிட்டிருப்பது போற்றற்குரியது. நம் சென்னை அரசாங்கத்துக்கும் இது எடுத்துக் காட்டாக அமைதல் வேண்டும்.

### தமிழ் அரசியல் மொழி ஆக வேண்டும்

ஆனால் ஒன்று. தமிழ் வளர அரசாங்கம் எந்த வகையான வாய்ப்புக் கொடுத்தாலும் அதை வளர்க்க முடியாது, அதை அரசியல் மொழியாக்கினாலொழிய. ராபர்ட் கிளைவ் வரும்வரை தமிழகத்தில் தமிழ் என்றும் அரசியல் மொழியாகவே வளர்ச்சி குன்றாமல் இருந்து வந்துள்ளது. அதே நிலை இன்றும் ஏற்பட வேண்டும். தமிழ் பண்பட்ட மொழி; நெடுங்காலம் ஆட்சிபுரிந்த மொழியும்கூட"

## கல்விமுறை

"தற்போதுள்ள கல்வித்திட்டத்தை அரசாங்கம் மாற்றியமைக்குமா?"

"அமைக்கும் என்று கருத இடமில்லை."

"தமிழ் மக்களுக்கு வேண்டிய கல்வி முறை எப்படி இருக்கவேண்டும்?"

"தமிழ் பாடமொழியாகவும் முதன் மொழியாகவும் ஆகவேண்டும். அத்துடன் தேர்வுக்கு முக்கியத்துவம் தரும் முறைமை ஒழிய வேண்டும். மற்றப்படி இப்போதிருக்கும் முறை அப்படியே இருக்கலாம்."

"இப்பொழுதுள்ள தனித்தமிழ் வித்துவான் தேர்வு பற்றிய தங்கள் கருத்து என்ன?"

"தனித்தமிழ்த் தேர்வுக்கான பாடப்பட்டியில் உரைநடைப்பகுதி இன்னும் மிகவும் விரிவுபடுத்தப்பட

வேண்டும், பொது அறிவு நூல்களும் சேர்க்கப்படவேண்டும்."

"தமிழுக்கெனத் தனிப்படத்துறை இருப்பதைவிட தமிழ், முதல்மொழியாகவும் பாடமொழியாகவும் ஆக்கப்பெற்ற கல்லூரி வகுப்புக்களுடன் வித்வான் தேர்வு ஒன்றுபடுத்தப் பெற்ருல் நல்லது என்ற கருத்துப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்" என்ற கேள்விக்கு டாக்டர் "அது நன்று" என விடையிறுத்தார்கள்.

## இலக்கியம்

"அயல்மொழி இலக்கியங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படும் நிலை பற்றிய தங்கள் கருத்து என்ன?"

"கலைத்துறை, கற்பனை இலக்கியங்கள் தமிழகத்தில் போதுமான அளவு இருக்கின்றன. கற்பனைக்கு நாம் வெளியே போகவேண்டியதில்லை; நாமே புதியதாகச் செய்தல் நலம். ஆனல் அறிவுத்துறைகளில் மொழிபெயர்ப்பு வேண்டும். இன்றியமையாத் தேவையுங்கூட."

## எழுத்தும் சொல்லும்

"கற்பனை மிகுந்த கதைகள் கற்கண்டுக்குழைவு; சமுதாயக் குறைகளை விளக்கும் சித்திரங்கள் கசப்பு மருந்து—இவற்றுள் இன்றைய மக்கள் மன்றத்துக்குத் தேவையானது எது?"

"பின்னது."

"பிரபல எழுத்தாளர் எவரும் பேச்சாளராக விளங்க முடியுமா? அவ்வாறு விளங்குவது நன்ரு?"

"இரண்டும் தனித்தனி கலைகள். விதிவிலக்காக இரண்டும் இணைந்திருக்கலாம். இணைந்திருந்தால் நன்மையே."

"எழுத்து, பேச்சு ஆகிய இரண்டில் இந்த நாட்டுக்கு நன்மைபுரிவதில் முன்னிலையில் நிற்பது எது?"

"எழுத்து."

"தமிழகத்துக்குத் தாங்கள் செய்துள்ள பணிகளில் எவ்வகைப்பணி மிகுதி பயன் அளித்தது?"

"எழுத்துத் தொண்டு."

## தமிழக அரசியல்

"அரசியலைப் பொறுத்தவரையில் இன்றைய மாணவ சமூகம் என்ன பங்கு எடுத்துக்கொள்ளலாம்?"

"கிராம மனப்பான்மையுடன், கிராமத்தின் ஏழை மக்களுடன் அன்பாதரவோடு நெருங்கிப் பழகவேண்டும் வறுமையை ஒழிக்க எதிர்காலத்துக்கான திட்டங்களை அங்கே உருவாக்கவேண்டும்."

"தேர்தல்கள் பற்றிய தங்கள் கருத்து என்ன?"

"நான் எழுதிய 'அறமும் அரசியலும்' என்ற நூலில் குறிப்பிட்டதையே இங்கும் குறிப்பிட விரும்புகிறேன். ஜனநாயக முறைக்குக் கட்சி அமைப்பு நல்லதன்று என்று நான் எண்ணுகிறேன். தவிர தேர்தல் முறை ஆட்சியும் பொதுவாக எனக்கு திருப்தி தரவில்லை. குறிப்பாக, ஐந்தாண்டுக்குஒருமுறை தேர்ந்துவிட்டு, பின் அவர்கள்மீது மக்களுக்கு எந்தப் பிடியும் இல்லா நிலைமை பெருத்த குறைபாடு ஆகும். இதில் முன்னேற்றம் ஏற்படவேண்டும்."

"தமிழ்நாடு தனி மாகாணம் ஆவது பற்றித் தங்கள் கருத்து யாது? அதன் எல்லைகள் எவை?"

"கட்டாயம் தமிழ்நாடு தனி மாகாணம் ஆகத்தான் வேண்டும். இல்லையெனில் தமிழுக்கு எதிர்காலம் இல்லை. தமிழர் நசுக்கப்படும் இனமாகப் போய்விடுவர்.

தமிழ்நாட்டெல்லைக்குள் சித்தூர் மாவட்டத்தின் பெரும்பகுதியும், திருவாங்கூரின் தமிழ்த் தாலுக்காக்களும் சேர்க்கப்படவேண்டும்."

"இந்தியாவுக்கு வெளியிலுள்ள தமிழர்களுடன் தமிழகம் எத்தகைய தொடர்பு கொள்ளலாம்?"

"அரசியல் வாயிலாக ஓரளவு கலைத் தொடர்பு, மொழித் தொடர்பு

கொள்ளலாம். ஆனால் அரசியல் சூழல் சிக்கல் மிக்கதுதான் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற உணர்ச்சியைத் தமிழன் மட்டும்தான் மதிக்கிறான். அயலார்கள் சிறிதும் மதிப்பதில்லை. நாம் நம்முடன் தொடர்புடைய ஏனையோர்களைக் கொண்டு அரசியலிலும் பிடிப்புக் கொடுக்கும் அளவுக்கு ஊக்கமும் ஒற்றுமையும் உயர்வும் பெறவேண்டும்."

"தமிழகத்திலும் சரி, பிற மொழி மாகாணங்களிலும் சரி, நாட்டு மொழி, நாட்டு மொழியல்லாத தாய்மொழி உடையவர் நிலை என்ன? அவர்கள் நாட்டு மொழியுடன் என்ன தொடர்பு வைத்துக்கொள்ளலாம்? அத் தாய் மொழிகளை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம்?"

"நாட்டு மொழிகளுக்குத்தான் முதல் சிறப்புத் தரவேண்டும். ஆனால் தாய்மொழிக்குத் தொடக்க வகுப்புக் களில் சலுகை தரலாம். நாட்டு மொழியல்லாத தாய்மொழிகளை அவ்வத் தாய்மொழிகளுக்குரிய அயல் நாட்டுத் தொடர்புகளுக்கு நாடு பயன்படுத்திக்கொள்வது பொருந்தும்."

"பொன்னியைப் பற்றித் தாங்கள் கொள்ளும் கருத்தை அறிய விரும்பு கிறோம். அதில் என்ன முன்னேற்றங் கள் ஏற்பட வேண்டும் என்று விரும்பு கிறீர்கள்?"

"பொன்னி தமிழுக்குக் குறிப் பிடத்தக்க தொண்டுசெய்வதை நான் அறிவேன். நான் விரும்பும் பல நலன்களை ஒருங்கே பொன்னி கொண்டு திகழ்கிறாள். மலர் களிலே பொன்னி மலர் அருஞ் சிறப்புடையது. முன்னேற்றத்துக் குரிய எல்லாப் பகுதிகளும் அதில் அடங்கியேயிருக்கின்றன. அவற்றுள் இன்னும் முனைந்து முன்னேற வேண்டுமென்றே விரும்புகிறேன்."

பேச்சு முடியும் தறுவாயில், ஒரு சிறுவன் அன்புரிமையுடன் டாக்டர் அவர்கள் கட்டிலில் வந்து உட்கார்ந் தான். அவனே தம் இரண்டாவது புதல்வன் என்று பெரியார் அவர்கள் அறிமுகப்படுத்திவைத்தனர். தனித் தமிழ்ப்பற்றுமிக்க பெரியார் தம் குழந்தைகளுக்கு அரசு, நம்பி, பாரி, என்ற அழகிய தமிழ்ப் பெயர்கள் இட்டழைக்கின்றனர் என்பது குறிப் பிடத்தக்கது.

டாக்டர் மு. வ.வை அறியாத வர் தமிழ் நாட்டில் இருக்கமாட் டார்கள். அவர் தமிழ்த் தொண்டும் தமிழிலக்கியத் தொண்டும் சாலச் சிறந்தன. பச்சையப்பன் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவ ராக மாணவ மாணவிகளுக் குத் தமிழறிவுறுத்தியும், தமிழுக்கே புத்தாக்கம் தருமுறையில் 'கள்ளோ காவி யமோ' 'மலர் விழி' 'பெற்ற மனம்' ஆகிய நாவல்களும் 'ஓவச் செய்தி' போன்ற இன் கலையாய்வு ஏடுகளும் இயற்றி யுள்ளார். 'கள்ளோ காவியமோ' 'ஓவச்செய்தி' ஆகிய இரண்டும் இரண்டாண்டுகளில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் பரிசுகள் பெற்றுள்ளன. இலக் கியம், மொழியாராய்ச்சி, வர லாறு ஆகிய பல துறைகளிலும் அவர்கள் ஏற்கெனவே எழுதிய நூல்கள் ஏறத்தாழ முப்பது ஆகின்றன.

தமிழகம், டாக்டர் வரத ராசனார் தமிழ்க்கலைத் தொண் டுக்கு என்றென்றும் கடப்பா டுடையது. தமிழகத்தின் பெர் னார்டுஷா என்று பாராட்டப் பெறும் அவர் புகழ் என்றென் றும் நின்று நிலவுக! ★

# வளரும் இலக்கியம்

'உயிர் துடிக்கும் நிகழ்ச்சி ஒன்று இருந்தாலே போதும்; ஒரு சிறு கதை பூரணத்துவம் அடைந்துவிடும்' என்கிறார் ஆங்கில ஆசிரியர் வில்லியம் வேர்ஸ்ட்வர்த்.

சிறு கதைகளின் இந்த வரம்பை அணுவும் மீறாமல் எழுதும் எழுத்தாளர்கள் இன்றையத் தமிழ்நாட்டில் மிகச் சிலரே. இந்தக் குழுவில், **'காதல் மாயை'** சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் திரு. **எஸ். ஆறுமுகம்** அவர்களும் ஒருவர்.

எளிமையான தமிழ்; எடுப்பான நடை; தெளிவான நீரோட்டப் போக்கு; ஆழ்ந்த கருத்துக்கோவை; உணர்ச்சியூட்டி உயிர் துடிக்கும் நிகழ்ச்சிப் பின்னல்கள்; உள்ளத்தைக் கவரும் உருவகங்கள்—இவை 'காதல் மாயை'யின் வெற்றிக்கான புள்ளி விபரங்கள்.

'உண்மைப் பாசத்திற்கு, உள்ளத்தின் காதலுக்கு உடலோ அல்லது உலகமோ பிணைக்கும் திருமணப் பிணைப்புத் தேவையும் அல்ல; தெவிட்டாத இன்பத்தைத் தெளிப்பதும் அல்ல' என்ற சித்தாந்தத்தைச் செயலிலே செய்து நின்ற தியாக சொரூபி நரசிம்மன்— அவனது தியாகத்தின் விளைவால் தன் வாழ்வில் திருவும் உருவும் விளங்கி நின்ற விமலா— இவர்களைப்பற்றிச் சுற்றிச் சுவைப் பின்னலிடுகிறது, தலைப்புக்குரிய கதை 'காதல் மாயை.'

'நீறு பூத்த நெருப்பு' வால்ட்டர் ஸ்காட்டின் 'சந்தேகச்சின்னம்' என்ற கதையுடன் சம எடை நிற்குமளவுக்குச் சிறப்படைகிறது.

வில்பிரட் வில்ஸன் எழுதிய 'கலங்கரை விளக்கு' கதையில் பரந்து கிடக்கும் பாசத்தின் உயர்வு 'தாய்' என்ற கதையில் பரிமளிக்கிறது; 'வாழும் காதல்' சிறந்ததொரு மனோதத்துவ விளக்க உணர்ச்சிச் சித்திரம்.

எஸ். ஆறுமுகம் எழுதும் கிராமியக் கதைகள் என்றால் அவற்றின் தரம் உயரக் கேட்கவேண்டியதில்லை. இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'ஆசைக்கனல்' 'பாசம் வென்றது' 'இளந்தென்றல்' முதலிய கதைகள் அதற்கு எடுத்துக்காட்டு.

ஆசிரியர் எழுதியுள்ள முன்னுரையில் அவர் இதயம் பேசுகிறது!

இத்தொகுப்பு, அவர் பெயர் வளர, வாழ ஓர் வெற்றி வழி வகுக்குமென்பதில் ஐயம் இல்லை.

—பார்த்திபன்
பி. ஏ. (ஹானர்ஸ்)

**காதல் மாயை**

ஆசிரியர்: **எஸ். ஆறுமுகம்**

புதுமைப்பிரசுரம், பெண்ணாடம்

**விலை ரூ 1—0—0**




# பூவைக்குப் பூவாணமோ?

தீபாவளிச் சூழ்நிலை! அழகு கொழிக்கும் அட்டைப் படத்திலே ஆனந்தம் கொழிக்கும் இன்பமயமான புள்ளி விபரங்கள்! தீபாவளி என்றாலே அப்படித்தானே...! வையத்தில் வாழ்வுக்கு ஒருநாள், பாருங்கள்!

படத்தின் கதாநாயகி அல்லவா அந்தப் பட்டிக்காட்டுப் பாவை? அவள் கிராம மோகினி.

'தீபாவளி வந்துவிட்டது; தன் ஆசை மச்சான் நேசமாகத் தீபாவளிப் பரிசுகளைத் தன் பாதங்களில் குவிக்கப் போகிறான்' என்று மட்டும் அவள் புன்னகை பூக்கவில்லை. தீபாவளிப் பரிசு என்றால் கண்டாங்கிச் சேலையும், கொட்டடி ரவிக்கையும் மட்டும் அன்று; அதைவிடப் பெருமைபெற்ற பரிசை அவள் தன் மச்சானிடமிருந்து எதிர்பார்த்திருக்கவேண்டும். அதுதான் அவனது அன்புப் போதைகொண்ட புன்னகை! நகைகளில் விலைமதிப்பற்றதல்லவா? அதுதான் இந்தப் பூவையும் பூவாணம்போல் அருவிச் சிரிப்பை உதட்டோரத்தில் இழையவிட்டிருக்கிறாள் போலும்! நாளெல்லாம் 'பழம், பழம்' என்று கூவியழைத்துக் கூட்டம் சேர்த்துப் பழமெல்லாவற்றையும் பணமாக்கி வீட்டுக்குப் பயணப்படும் நேரத்தில், அவளது அழகுக் கண்ணாளனின் இன்பநினைவு தானே அவளின் உழைப்பிற்கு ஊதியமாக அமைய முடிகின்றது! கிராமிய மண் அல்லவா? தூய உள்ளம்; தூய கனவுகள்; தூய வாழ்வ!

'அம்மணி, ஓடுங்கள்; உங்கள் மன்மதன் உங்கள் வருகைக்கு வழிமேல் விழிவிரித்துப் பார்த்திருக்கிறார் கைநிறையப் பரிசுகளுடன். ஊம், ஜல்தி......!'

ஆனால் இந்த வாண்டுப் பையன் மட்டும் 'பூவாணம் வேண்டுமா அக்கா?' என்று அவளைக் கேட்கிற மாதிரி அல்லவா வாணப்பெட்டியைத் திறந்து அழகு காட்டிக்கொண்டு நிற்கிறான்! பலே அம்பி!

தீபாவளிக் கடையின் விளம்பரப் பலகை மறைத்தாலும் அந்தக் கண்ணாடி இளைஞரின் இளநகைக் கோலம் மாத்திரம் நன்றாகத் தெரி தெரிகிறது. ஓஹோ! தலைத்தீபாவளி மாப்பிள்ளையோ...? என் மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் அவருக்குத் தெரிவிக்க வேண்டாமா? அதுதானே நம் பாரதத்தின் மண்பெற்ற மாண்பு!

பத்து ரூபாய் பரிசு பெற்றவர்

**பி. எஸ். ராமகிருஷ்ணன்**

அறந்தாங்கி



# காதல் பலி

பத்மாவதி டேவிட்

அந்தப் பிணத்தை அறுத்துப் பரிசோதிப்பதற்கு என் உள்ளுணர்வில் ஏதோ ஒன்று என்னைத் தடைசெய்தது. சிவந்த மேனி; சுருண்ட கேசம்; கடைந்தெடுத்தாற் போன்ற தேகக்கட்டு. இளமையின் பூரணப் பொலிவு அவளது ஒவ்வொரு அங்கத்திலும் பூரித்திருந்தது. யார் பெற்ற பெண்ணோ? இத்தகைய கோர முடிவுக்குத் தன்னை இலக்காக்கிக் கொள்ளக் காரணம்? பிறக்கும்போதே மனிதன் தன் முடிவைப் பற்றியா சிந்திக்கிறான்?

'டொக், டொக், டொக்' அந்த உளி அவளது விசாலமான அழகிய நெற்றியை நேர் வரிசையில் உழுதுகொண்டிருந்தது. மாவடுவைப்போல் பிளந்து கொண்டிருந்த அந்த நெற்றியையே பார்த்துக்கொண்டிருந்தேன். ஆனாலும் கடமை என்னைக் காரியம் செய்யத் தூண்டியது.

இயந்திரம்போல் பிரேதப் பரிசோதனை செய்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தேன். இரைக்க இரைக்க ஓடிவந்து கொண்டிருந்த போலீஸ் சேவகன் என்னைக் கண்டதும் 'டக்' கென்று நின்றான். ஓடி வந்த வேகத்தினால் அவனது கனத்த தொந்தி இலேசாக அதிர்ந்து கொண்டிருந்தது.

"டாக்டர் ஐயா, எசமான் உங்களைக் கையோடு கூட்டிக்கிட்டு வரச் சொன்னாருங்க" என்றான் அவன். எனக்கு வியப்பாயிருந்தது. இன்ஸ்பெக்டர் சேதுராம் மணி 'டாண்' என்று இரண்டு அடித்ததும் படுக்கைக்குச் சென்றுவிடுபவர், இரண்டரை ஆகியும் தூங்கவில்லையா? இந்த நேரத்தில் எந்த ஜில்லாக் கலெக்டர் வந்தாலும் கூட தன்னைப் பேட்டி காண ஆஹும் அனுமதிக்காதவர், என்னைக் கூப்பிட்டனுப்புவானேன்?... உடம்புக்கு ஏதாவது......?"—என் மனதில் சிந்தனைச் சிலந்தி வேகமாக வலை பின்னியது.

இன்ஸ்பெக்டர் வீட்டில் நுழையும்போது, நான் என்றைக்குமே கண்டிராத, எதிர் பார்த்தறியாத அந்தக்காட்சி என்னை என்னவோ செய்தது. உள்ளத்தில் உருவாகிக் கொண்டிருந்த சிந்தனையோட்டம், நெற்றிச் சுருக்கங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக்கொண்டிருந்தது. எப்பொழுதும் பளபளப்பாக, அலையலையாக வாரி விடப்பட்டிருக்கும் கிராப் இன்று கலைந்து அலங்கோலமாக, நெற்றியில் புரண்டு கிடந்தது. கண்களில் பொங்கி நிற்கின்ற சஞ்சலம் முடிவில் எங்கு கொண்டுபோய் விடுமோவென்ற பயங்கர வினவி னூடே முகத்தை உள்ளங்கைகளால் தாங்கி முட்டுக்கொடுத்தவாறு உட்கார்ந்திருந்தார், இன்ஸ்பெக்டர் சேதுராம். அவரது வெறித்த பார்வை வாசலிலேயே லயித்திருந்தபோதிலும், அதைக் கடந்து வந்த எனது உருவம் அவரது பார்வையில் பட்டதாகப் புலப்படக்கூடிய எவ்விதமான சலசலப்பும் அவர் முகத்தில் தோன்றவில்லை.

"இன்ஸ்பெக்டர்"—மெதுவாகத்தான் கூப்பிட்டேன் நான். ஆனால் அந்த அறையில் நிலவிய மரண அமைதியினூடே எழுந்த என் குரல் பேரிரைச்சலோடு எக்காளமிடுவதுபோல் ஒலித்தது.

தூக்கத்திலிருப்பவனைத் தட்டி எழுப்பியது·போலத் திடுக்கிட்டு என்னை நோக்கினார் இன்ஸ்பெக்டர். அடிவயிற்றிலிருந்து எழுந்த ஒரு பெருமூச்சோடு "வாருங்கள் டாக்டர்" என்று என்னை வரவேற்றார். ஆனால் அதில் வரவேற்புக்குரிய உற்சாகம் எதுவும் இருந்தால் தானே? அந்த இரண்டு வார்த்தைகளிலும் அடங்கிய ஒவ்வொரு எழுத்திலும் சோகம் சொட்டியது.

இளமையின் நிறைவில் எப்பொழுதும் கலகலப்பாக, உல்லாச மனிதராக விளங்கும் சேதுராமனா இவர்? பதவிக்கேற்ற கடமையுணர்ச்சி, இருதயத்துக்கு இளக்கம் கொடுக்கக்கூடாத நிலையிலிருப்பவரின் மனதை உருக்கிக் கொண்டிருக்கும்சம்பவத்துக்குச் சக்தி அதிகமாய்த்தானிருக்க வேண்டும்.

சுவாதீனமாக நான் சோபாவை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தேன்.

"மிஸ்டர் சேதுராம், என்னை எதிர்பார்த்தீர்களாமே! ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்? உங்கள் உடம்புக்கு என்ன?"— என்று கேட்டு இன்ஸ்பெக்டரின் கையைப்பிடித்து நாடி பார்க்க ஆயத்தமானேன் நான். ஆனால் அதை விரும்பாதது போல் கையைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டார் அவர்.

"டாக்டர், என் உள்ளத் துடிப்பை இந்த நாடித் துடிப்பின் மூலம் உணர்ந்து கொள்ள முடியுமா? விஞ்ஞானிகள் எதை யெதையோ கண்டுபிடித்து விட்டார்கள். ஆனால் மனக்கவலையைப் போக்க மருந்துமட்டும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏன் டாக்டர்! கடவுள் கவலையை ஏன் உண்டாக்கினார்? மனிதனின் அழிவுக்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கட்டுமென்றா? எத்தனை வைராக்கியமுடைய மனதையும், இரும்பு நெஞ்சத்தையுங்கூட, கவலை பிளந்துவிடுகிறதே! அதற்குமட்டும் ஏன் அவ்வளவு சக்தி?"

அவரது போக்கு எனக்குப் பிடிபடவில்லை. இன்ஸ்பெக்டருக்கு இன்று என்ன நேர்ந்து விட்டது?

"இன்ஸ்பெக்டர், ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? என்ன நடந்தது? விபரமாகச் சொல்லுங்களேன்" என்று நான் வற்புறுத்தினேன்.

"டாக்டர், என்ன நடந்துவிட்டதென்றா கேட்கிறீர்கள்? நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. என் இன்ப வாழ்வில் இருள் மூடிவிட்டது. இன்று என் கண்களுக்குத் தோன்றும் காட்சியெல்லாமே தியாகத்தின் பிரதிபலிப்பாகத்தானிருக்கிறது. டாக்டர், கேளுங்கள். 'ஏன் இன்னும் பிரம்மசாரியாயிருக்கிறீர்கள்...உங்கள் கம்பீரத்திற்கும், பதவிக்கும் நான் நீ என்று போட்டி போட்டுக்கொண்டு பெண் கொடுக்க முன் வருவார்களே' என்று சொல்லுவீர்களே. அதன் முழுவிபரத்தையும் இப்பொழுதுதான் அறியப் போகிறீர்கள்.

"அப்பொழுது நான் காரைக்குடியிலிருந்தேன். முதன் முதலாக அங்குதான் என் பதவிப் படியில் கால் வைத்திருந்தேன். அறிமுகம் இல்லாத இடந்தானென்ற போதிலும் என் தந்தையின் நண்பரான தம்புராஜ் பிள்ளையின் கூட்டுறவால் எனது சூழ்நிலையில் சிறிது மாற்றம் ஏற்பட்டது. எப்பொழுதும் கலகலப்பாகயிருக்கும் அவரது சுபாவம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ஒழிந்த நேரங்களில் நானும் அவரது பங்களாவுக்குச் செல்லுவேன். இந்தமாதிரியான ஒரு சந்தர்ப்பத்தில்தான், நான் லீலாவைச் சந்திக்க நேர்ந்தது.

நானும் தம்புராஜ் பிள்ளையும் ஹாலில் பேசிக்கொண்டிருந்தோம். மாடிப் படிகளில் யாரோ இறங்கி வரும் காலோசை கேட்டுத் திரும்பினேன். அழகே உருவான ஒரு இளம்பெண் அங்கே நின்றுகொண்டிருப்பாளென்று நான் கண்டேனா, என்ன? எதிர்பாராதவிதமாக அங்கே ஒரு பெண்ணைக் கண்டதும் அப்படியே அதிர்ந்துபோய் விட்டேன் என் நிலையை அறிந்துகொண்ட பிள்ளை, "என்னப்பா சேதுராம், பயங்கரமான கொள்ளைக்காரர்களையும்

கொலைக்காரர்களையும் கூடக் கண்டு அஞ்சாத நீ எங்கள் லீலாவைக்கண்டு ஒரேயடியாக மலைத்துப்போய்விட்டாயே" என்றார்.

என்னிடமிருந்து வெளிவந்த ஒரு அசட்டுப் புன்னகைதான் அவருக்குப் பதிலளித்தது. 'கொள்ளைக்காரர்கள்......அவர்களாவது பிறருடைய உடைமைகளைக் கொள்ளையடிக்கிறார்கள்....இவள்.....இன்ஸ்பெக்டர் என்ற பயம் கொஞ்சம்கூட இல்லாமல் என் இருதயத்தையே கொள்ளையடிக்கவல்லவா வந்திருக்கிறாள்' என்று எண்ணிக் கொண்டேன். இந்த என் மனக் குரலின் ஓலம் எனக்கே வியப்பாயிருந்தது.

"லீலா, இங்கே வாம்மா" என்றார் பிள்ளை. அவள் வந்தாள். சும்மா வரவில்லை. என் உள்ளத்தில் பெரும் புயலைக் கிளப்பிக்கொண்டு வந்தாள்.

"சேதுராம், இவள் என் தங்கையின் மகள் லீலா. திருச்சியில் காலேஜில் படிக்கிறாள். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்துவிட்ட இவளுக்கு நான் ஒருவன்தான் உறவு என்று சொல்லிக்கொள்ள ஊசலாடிக் கொண்டிருக்கிறேன். பி. ஏ. பரீட்சை எழுதிவிட்டு விடுமுறைக்காக இங்கு வந்திருக்கிறாள். லீலா, இவன்...சேதுராமன்; என் நண்பன் மாணிக்கவாசகத்தின் மகன். இங்கு சப் இன்ஸ்பெக்டராகயிருக்கிறான்......" என்று கூறி எங்களிருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தார் அவர். அவள் கைகூப்பி "வணக்கம்" என்றாள். நான் அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

எவ்வளவு நேரம் அப்படியிருந்தேனோ, தெரியாது. திடீரென அவள் கூறிய "வணக்கம்" என்ற சொல் திரும்பவும் ஒலித்தது. சுயநினைவுக்கு வந்தவனாக நானும் "வணக்கம்" என்றேன். லீலாவும், பிள்ளையும் சேர்ந்து சிரித்தார்கள். நான் விழித்தேன். "தம்பிக்கு இப்போது தான் ஞாபகம் வந்தது போலிருக்கிறது" என்று அவர் கூறிய பிறகுதான் அவர்களது சிரிப்புக்குக் காரணம் விளங்கியது. நான் தலைகுனிந்தேன். கண்கள் மட்டும் திருட்டுத்தனமாக லீலாவையே சுற்றிக்கொண்டிருந்தன.

அவசரமாகத் துடிக்கும் அவள் கண் இமைகள், அவளையறியாமல் சிவக்கும் கன்னங்கள், அடக்கமுடியாமல் இதழோரத்தில் நெளிகின்ற சிறு சிரிப்பு, இவையாவும் அவள் உள்ளத்தில் குமிழியிடும் உணர்ச்சிக் கொப்புளங்களைச் சித்தரித்துக் காட்டிக்கொண்டிருந்தன. எங்கள் மனத்தளத்தில் நட்பு விதைகள் தூவப் பட்டுவிட்டன.

தம்புராஜ் பிள்ளை தேர்தலுக்கு நின்றார். அவர் வீட்டில் தங்குவதே அரிதாயிருந்தது. இந்தச் சந்தர்ப்பம் எங்கள் சந்திப்புக்களுக்குத் தூண்டுகோலாயிருந்தது.

ஒருநாள், நான் பிள்ளையின் வீட்டிற்குச் சென்றேன். வீடு நிசப்தமாக ஆள் அரவமின்றியிருந்தது. ஹாலில் ஒருவரையும் காணோம். சப்தப்படாமல் மாடிக்கு ஏறினேன். லீலா கட்டிலில் ஒருக்கணித்துப் படுத்தவாறு, தலையை ஒரு கையால் தாங்கியபடி ஏதோ படித்துக்

கொண்டிருந்தாள். அவள் இருந்த நிலை என்னுள்ளத்தில் இதுவரை அனுபவித்தறியாத ஏதோ ஒரு புது உணர்ச்சியைக் கிண்டிவிட்டது. இளமையின் பூரிப்பும், பருவத்தின் வாளிப்பும் அவளைச்சுற்றிக் கோலமிட்டிருந்தது.

"லீலா''— உணர்ச்சியெல்லாம் உருவெடுத்தாற்போல், உள்ளக் குமுறலெல்லாம் ஒருங்கே திரண்டு வந்ததுபோல் அந்த ஒரு வார்த்தைதான் என் வாயிலிந்து வெளிவந்தது. உணர்ச்சிகளைக் கட்டி மேய்ப்பது இலேசான காரியமா, என்ன? பசியால் துடிக்கிறவனுக்குக் கஞ்சாத் தூளைக் கொடுக்கிறதுபோல, மின்னல் சுழித்தோடும் கள்ள விழிப் பார்வையொன்றை வீசிவிட்டு என்னை நோக்கி வந்தாள் லீலா.

"என்ன இன்ஸ்பெக்டர் ஸார், அரெஸ்ட் வாரெண்டோடுவந்தவர் மாதிரி நிற்கிறீர்களே!"— தலையை ஒருபுறம் சாய்த்தபடி கேட்டாள் அவள்.

"நானே அரெஸ்டாகிவிட்ட பிறகு என்னுடைய வாரெண்டுக்கு மதிப்பு ஏது, லீலா? இளமைச் செழிப்போடு, தகிக்கும் உள்ளத்துடன், குமுறும் உணர்ச்சிகளைக் கொன்று கொண்டு எத்தனை நாட்களுக்குத்தான் காத்துக்கிடப்பது? இது உனக்கே நியாயமா? என் நிலையில், நான் அனுபவிக்கும் இன்ப வேதனையில் ஆயிரத்தில் ஒரு பங்காவது நீ அனுபவிப்பாயானால் இப்படி மௌனமாயிருப்பாயா?''—என் குரலில் தொனித்த ஏக்கத் தவிப்பை உணர்ந்துகொண்டவளாக மௌனமாயிருந்தாள். கணம் விட்டுக் கணம் நெஞ்சு விம்மி எழப் பெருமூச்சுவிட்டுக்கொண்டிருந்தாள் லீலா.

"சேதுராமன், என்ன செய்யலாம்? கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். இந்த எலெக்ஷன் தொல்லை ஒருவாறு ஓயட்டும். மாமாவுக்கும் நம் நட்பின் வளர்ச்சி தெரியாமலில்லை.''

"சுலபமாய்ச் சொல்லிவிட்டாய், லீலா. இன்னும் பொறுத்துக்கொள்ளுவதா? என்னால் முடியாது, லீலா. என் உள்ளத்தில் கொட்டிக்கிடக்கும் ஆசையை, ஆவலை, ஏக்கத்தை, ஆர்வத்தை இனியும் பொறுத்துக்கொண்டிருக்கமுடியாது.''

"அவசரத்தைப் பார்'' என்று கூறியபடியே செல்லமாக என் கன்னத்தில் இடித்தாள் லீலா. அந்த உணர்ச்சியால் நரம்புகள் படபடத்தன. இரத்த ஓட்டத்தில் ஒரு புது கிளுகிளுப்பு. சடக்கென்று லீலாவை அப்படியே அணைத்துக் கொண்டேன். அந்நிலையில் எவ்வளவு நேரம் லயித்து நின்றோமோ!...

திடீரென எங்கள் பின்னால் கனைப்புச் சத்தம் கேட்டு விலகி நின்றோம். தம்புராஜ் பிள்ளை எங்கள் பிணைப்பைப் பார்த்தும், பாராதவர்போல் நடந்துகொண்டார்.

நான் நினையாதவிதமாக எனக்கு இந்த ஊருக்கு மாற்றல் உத்தரவு வந்துவிட்டது. நான் துடிதுடித்தேன், லீலாவைப் பிரிய. அவள் விம்மினாள், தனிமையிலிருக்க. யாரை யார் தேற்றுவது?

"சேதுராம், இப்படித் திடீரென நீங்கள் என்னைப் பிரிந்து விடுவீர்களென்று நான் நினைக்கவில்லை. தயவுசெய்து மாமாவிடம் சொல்லி நம் மணத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டுப் போங்களேன்; நம்மைக் கூட்டி வைக்கும் அந்த நாளை எண்ணிக் கொண்டாவது கொஞ்சம் நிம்மதியாயிருப்பேன்" என்ருள் லீலா. அவளது அகன்ற கருவிழிகள் கண்ணீரைக் கக்கிக் கொண்டிருந்தன.

"லீலா, நீ படித்தவள். சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மனதைத் திருப்பிச் சொல்ல வேண்டியிருக்கிறது லீலா! பொறுத்துக் கொள். நான் வேலையில் சேர்ந்து எனது வேலையை நிலைப்படுத்திக் கொண்ட பிறகு, முதலில் செய்யக்கூடிய காரியம் இது தான். கவலைப்படாதே" என்று அவளைத் தேற்றினேன்.

"ஆமாம், இந்த ஆண்களுக்கு வரட்டுக் கௌரவத்துக்கு மட்டும் குறைச்சலில்லை. நேரிலேயே கேட்டுவிட்டால் என்னவாம்? நான் கற்பித்தபாடத்தை எனக்கே திருப்பிப் படிக்கிறீர்களாக்கும், மிஸ்டர் சேதுராம். எனக்கென்னமோ விபரமறியாத திகிலாயிருக்கிறது. இந்தப் பிரிவு நம்மிடையே நிரந்தரமாக நிலைத்துவிடுமோ?"—இதைச் சொல்லும்பொழுது ஏனே அவள் குரல் நடுங்கியது. கண்களில் அமிழ்ந்து நின்ற பீதி என்னைத் திடுக்கிட வைத்தது.

"சீ அசடே, நீயாக எதையெதையோ கற்பனை பண்ணிக் கொண்டு வேதனைப்படாதே. பிரிவும் சேர்க்கையும் எல்லாருடைய வாழ்க்கையிலும் சகஜம் தானே! காதல் பூங்காவிற்கு ஒற்றையடிப்பாதை உண்டா?"

ஆழ்ந்த ஏக்கத்தின் எதிரொலியைப்போல் நீண்ட பெருமூச்சு விட்டாள் அவள். அவளது அமைதியற்ற மனதைப் போலவே, நெற்றியில் விழுந்து அலையாடிக் கொண்டிருந்த சுருண்ட கேசத்தை நான் மெதுவாக ஒதுக்கிவிட்டேன். லீலா என் கரங்களைப் பற்றி அதில் முகத்தைப் புதைத்துக்கொண்டு இருதயமே கரைந்துவிடுவதுபோல் கேவிக் கேவி அழுதாள். என் கண்களில் நீர் முட்டி நின்றது.

நான் வேலையை ஒப்புக்கொண்டேன். லீலாவுக்கும் எனக்கும் நாள் தவறினாலும் கடிதங்கள் பறக்கத் தவறவில்லை. திடீரென, சென்ற பதினைந்து தினங்களாக எனக்கு லீலாவிடமிருந்து கடிதமே வரவில்லை; என் மனம் துணுக்குற்றது. எலெக்ஷன் சம்பந்தமாக எனக்கும் வேலை கெடுபிடியாக இருந்தபடியால் காரைக்குடிக்குப் போய் அவளைச் சந்திக்கவும் முடியவில்லை. ஆனல் இன்று லீலாவிடமிருந்து வந்த கடிதம் என்னை உலுக்கிவிட்டது. இனி நான் எப்பொழுதுமே பிரம்மச்சாரி!...என்றைக்குமே தனிக்கட்டை."

"இன்ஸ்பெக்டர், என்ன சொல்லுகிறீர்கள்? லீலாவுக்கு என்ன? ஏன் அழுகிறீர்கள்?" என்றேன் நான்.

அவர் மௌனமாக மேஜையின்மேல் பிரித்தபடி கிடந்த ஒரு கடிதத்தை என் பக்கம் நகர்த்தினர்.

"அன்புமிக்க சேதுராம்
அவர்களுக்கு,

எனது மௌனம் உங்களுக்கு வியப்பை அளித்திருக்கலாம். வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல், நொந்து கிடக்கும் உங்கள் உள்ளத்தில் சிந்தனையைப் புரட்டிவிட்டு வேதனையை வளர்க்க விரும்பாததுதான் காரணம்.

மாமா எலெக்ஷனில் வெற்றி பெற்றுவிட்டார். வெற்றி தெரிந்த அந்த நாளில் விருந்துக்கு ஏற்பாடு பண்ணியிருந்தார்.

மேல் மாடியில் நானும் மாமாவும் எதிரெதிரே உட்கார்ந்திருந்தோம். நீல நிற வானில் நீந்துகிற நிலவு — நெகிழ்ந்தோடும் தென்றல்—காற்றில் கலந்து வந்த மலர் மணம் இவையெல்லாம் என் நரம்புகளில் ஒரு எரியுணர்ச்சியை எழுப்பிக்கொண்டிருந்தன.

"லீலா, இவ்வளவு அதிகமான ஓட்டுக்களால் நான் வெற்றியடைவேன் என்று எதிர்பார்க்கவே இல்லை. என் வாழ்வின் வருங்கால வெற்றிகளுக்கு இது வெறும் அச்சாரம் தான். இன்னொரு விஷயம். உன் கலியாணத்துக்கு ஏற்பாடு பண்ணிவிட்டேன்"

"நிஜமாகவா, மாமா? இதை நான் எதிர்பார்க்கவேயில்லையே. என் மனமறிந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறீர்களே! இதற்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன்!" நன்றிப் பெருக்கால் என் நாத் தடுமாறியது.

"என் மனம்போல் நடந்தால், அதுவே நீ எனக்குச் செய்யும் கைமாறு. ஆமாம் முகூர்த்தம் எப்பொழுது வைத்துக் கொள்ளலாம்?"

"என்னிடம் கேட்பானேன், மாமா. நான் என்ன சொல்ல இருக்கிறது. அவரைக் கேட்டு எழுதிவிட்டீர்களா?"

"எவரை?"—மாமாவின் எதிர்க் கேள்வியில் பொங்கிய வியப்பு எனக்கும் வியப்பை அளித்தது.

"என்ன மாமா, தெரியாதவர் மாதிரி பாசாங்கு பண்ணுகிறீர்கள்! இன்ஸ்பெக்டர் சேதுராம் தானே தங்களுக்கு வரப் போகும் மாப்பிள்ளை?"

மாமாவின் குளிர்ச்சியான பார்வை பயங்கரமாக மாறியது; கண்களில் வெறியும் வெறுப்பும் பொங்கி வழிந்தது. நெஞ்சு வெடிக்கப் பேய்ச் சிரிப்பொன்றைச் சிரித்தார்.

"ஓ, சேதுராமனை மணாளனாக வரித்துவிட்டாயா? உங்கள் ரகசியக் காதல் நாடகத்தைக் கவனித்துவிட்டுத்தானே அவனை இந்த ஊரைவிட்டே கிளப்பினேன். இன்னும் நீ அவனை மறக்கவில்லையா? பேஷ். உன்னை வளர்த்து ஆளாக்கியதற்கு நீ செய்யும் கைமாறு அழகாகத்தானிருக்கிறது. உன்னை மணக்கப்போகிறவன் நான்! ஏன் விழிக்கிறாய், லீலா? ஒரு எம். எல். ஏ.... செல்வந்தன்...உன் நலத்தில் அக்கறைகொண்டவன்........."

"போதும், நிறுத்துங்கள்! எங்கள் உள்ளங்களை அறிந்த நீங்கள், ஐம்பது வயதைத் தாண்டிவிட்ட நீங்கள், ஒரு படித்த இளம் பெண்ணிடம்

இப்படிப் பேச உங்களுக்கு வெட்கமாயில்லையா? உங்களிடம் எனக்கிருந்த மதிப்பு, மரியாதை யாவற்றையும் ஒரே கணத்தில் மண்ணோடு மண்ணாக்கிவிட்டீர்களே?...... நான் உங்களை மணக்கமுடியாது.''—

"என்ன சொன்னாய்? என்னை மணக்கமுடியாதா? பார்த்துவிடுவோம் அதையும். அடுத்த முகூர்த்தத்திலேயே நீ என் மனைவியாகிறாயா, இல்லையா பார்!''— கோபாவேசத்தோடு சவால் விட்டுச் சென்றார் அவர்.

அவர் சென்ற பிறகுதான் என் தவறை உணர்ந்தேன். வாய் மூடி மௌனியாயிருந்தாலும், காரியத்தைச் சாதகமாக்கிக்கொண்டிருக்கலாம். ஆத்திரம் விம்மலாக வெடித்து, அழுகையாகத் தேய்ந்து, கண்ணீராக ஓடி உலர்ந்தது.

சேதுராம், என் ஆசை தீய்ந்தது. அழகு அழிந்தது. மாசு மறுவற்றுத் தூய்மையாகப் பூட்டிக்கிடந்த மாமாவின் உள்ளம் எந்தக் குப்பையும் செத்தையும் வந்தடையும் திறந்த வெளியாகிவிட்டது. இந்நேரம் மாமாவின் நினைப்பு எரிமலையாகி, என் வாழ்வுப் பாதையில் ஒரு விபரீத நிழலாட்டம் விரித்திருக்கும். நாட்களும், வாரங்களும் அவர் மன மாறுபாட்டை, உறுதியை, வெறிக் குணத்தைக் கெட்டிப்படுத்திவிடும். நம் காதல் கோட்டைகள் கற்பனையோடு நின்றுவிட வேண்டியதுதான் போலும். ஆனால் நான் என் மாமாவின் மனைவி ஆக விரும்பவில்லை. இருதலைக்கொள்ளி எறும்பின் நிலைதான் என் நிலை. நான் மாமாவின் வீட்டிலிருந்தால், அவரது நிர்ப்பந்தத்திற்கு ஆளாக நேரிடலாம். சுண்ணும்புத் தண்ணீரோடு சுத்தமான பாலைக் கலக்க முடியுமா?

நான் வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டேன். உங்களை, உங்கள் முகத்தை மறைவிலிருந்து கடைசியாக ஒரு முறை தரிசித்துவிட்டுத் தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்துவிட்டேன்.

சேதுராம், என் பிணம் தங்கள் பார்வைக்குத்தான் வரும். காதலில் ஏமாற்றமடைந்ததற்காகக் கதறி அழாதீர்கள். மறுமையில் இன்பம் காணுவோம்! உங்களுக்கு என் இறுதி வணக்கம்.

லீலா''

நான் கடிதத்தைப் படித்துவிட்டு இன்ஸ்பெக்டரைப் பார்த்தேன். அவர் இன்னும் விம்மிக்கொண்டிருந்தார்.

"இன்ஸ்பெக்டர், லீலாவின் பிணத்தைக் கண்டுபிடித்தீர்களா?''

"டாக்டர், அந்தப் பாக்கியம் கூட எனக்குக் கிடைக்கவில்லை. எலெக்ஷன் சம்மந்தமாக வெளியூர் சென்று இன்றுதான் வந்தேன். இக்கடிதம் இன்று தபாலில் வந்தது. கடிதத்தைக் கண்டதும், இதில் ஊர் பெயர் குறிப்பிடப்படாததால், முத்திரையைப் பார்த்தேன். இரண்டு முத்திரைகளிலும் உள்ளூர்ப் பெயரே காணப்பட்டது. நான் லீலாவைத் தேடி அலைந்தேன். தற்செயலாக ராயல் ஹோட்டலில் தங்கியிருந்த ஒரு பெண் பிணமாகக் கிடந்ததாகவும்; சவம் சோதனைக்கு வந்திருப்பதாகவும் கேள்விப்பட்டு போலீசை அனுப்

பிச் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள எண்ணினேன். அதைப் பரிசோதனை செய்த டாக்டர் நீங்கள்தான் என்று தெரிந்து உங்களை அழைத்துவர ஆள் அனுப்பினேன். ஆனால் நீங்கள் உங்கள் கடமையை நிறைவேற்றி விட்டீர்கள். டாக்டர், அந்த இளம் பெண்ணின் அங்க அடையாளங்களைச் சொல்லுங்கள். அவள் என் லீலாதானா ?''— இன்ஸ்பெக்டர் பேசிக்கொண்டே போனார்.

என் மனதில் ஒரு சலனம். அவள்......அந்தப் பிணம்...... லீலாவா ? யோசித்துக்கொண்டிருந்தேன்.

"டாக்டர், ஏன் மௌனமாயிருக்கிறீர்கள் ? அவள் என் லீலாவேதானா ? ஐயோ, லீலா ! நம் ஆசைக் கனவுகள் கனவாகவே நின்றுவிட்டனவா ? காதலுக்காக உன்னையே பலியாக்கிக் கொண்டாயா, லீலா ? என்னைத் தனியாக விட்டுவிட்டுப் போய்விட்டாயா ? என் புலம்பல் ஒன்றும் உன் செவிகளில் விழவில்லையா? அழியாத பொற்சித்திரம் போன்ற உன் மேனி இப்படியா உருக்குலைந்து அலைக்கழிக்கப்பட வேண்டும் ? லீலா, நான் மட்டும் உன்னைப் பிரிந்து உயிரோடிருப்பேன் என்று நினைத்துவிட்டாயா ? கண்ணுக்கெட்டாத தூரத்துக்குப் போய்விட்டாயே ! நான் உன்னைக் காண்பது எப்போது லீலா ?''—கதறிக்கதறிப் புலம்பினார், இன்ஸ்பெக்டர். நானும் அவரைத் தேற்ற இயலாதவனாகி மௌனமாகக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தேன்.

பைத்தியம் பிடித்தவர்போல் திடீரென்று 'ஹஹ்ஹா' என்று சிரித்தார் இன்ஸ்பெக்டர். நான் திகைத்தேன்.

"உங்களுக்கு........''

"பைத்தியம் பிடிந்துவிடவில்லை, டாக்டர். நீங்கள் ரொம்பவும் பயந்துவிட்டீர்களா ?'' என்று கூறி மீண்டும் 'கடகட' வென்ச் சிரித்தார் அவர்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. கலவரத்துடன் "இன்ஸ்பெக்டர், உங்கள் போக்கு எனக்குப் பிடிபடவேயில்லையே. உங்கள் உடம்புக்கு என்ன ?'' என்றேன் நான்.

"டாக்டர், உங்களை மிகவும் கலவரப்படுத்திவிட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள். நான் இதுவரை சொல்லிவந்ததெல்லாம் உண்மையில் நடந்த சம்பவங்களில்லை. எங்கள் போலீஸ் இலாகாவால் நடத்தப்படவிருக்கும் 'காதல் பலி' என்ற நாடகத்தில் எனக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பகுதியை அப்படியே தங்களிடம் நடித்துக் காட்டினேன், அவ்வளவுதான். என் நடிப்பு எவ்வளவுதூரம் சபையோரின் உணர்ச்சியைத் தூண்டிவிடும் சக்தி பெற்றிருக்கிறதென்று அறிய ஆவல் கொண்டேன். இந்த நாடகத்தில் திறமையாக நடிப்பவருக்கு டி. எஸ். பி. யால் அளிக்கப்படவிருக்கும் விசேஷப் பரிசு எனக்குக்கிடைக்குமல்லவா ? அந்தப் பெண்ணின் பிணமும் தற்செயலாக வந்து சேர்ந்த நேரமும், என் கற்பனையும் தங்களுக்கு என் 'கதை'யில் நம்பிக்கையை ஊட்டிவிட்டது—'' என்று கூறி எக்களிப்போடு சிரித்தார் இன்ஸ்பெக்டர் சேதுராம்.

# இது உலகம்

வீர. பழனியப்பன்

பாதை என்னவோ பாம்புமாதிரி வளைந்து வளைந்து நீண்டுகொண்டே போயிற்று. சின்னதும் பெரிதுமாகச் சரளைக் கற்கள் அந்தப் பாதை முழுவதும் பரவிக் கிடந்தன. பாதையில் கிடந்த புழுதியையெல்லாம் உருட்டித் திரட்டிக்கொண்டு சுருள்வாணம் விட்டுக்கொண்டிருந்தது காற்று.

‘டக்...டக்...டக்...டக்...டக்...’— குதிரையின் குளம்படிச் சப்தம் போலக் கேட்டது.

தூரத்தில் ஒரு நொண்டி இரண்டு நீண்ட மரக் கட்டைகளை ஊன்றிக்கொண்டு நடந்து வந்துகொண்டிருந்தான். அவனது இடதுகால் முழங்காலோடு துண்டிக்கப்பட்டிருந்தது. அவனது முதுகிலே ‘ஜோல்னா’பை ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது.

வெய்யில் கோரமாகப் பொசுக்க ஆரம்பித்தது.

நொண்டியின் முகத்திலிருந்து வேர்வைத் துளிகள் கிளம்பி, அவனது தாடிப்புதரிலே ஓடி, முத்துமுத்தாகக் கீழே கசிய ஆரம்பித்தது. அவன் அதைப்பற்றி ஒன்றும் கவலைப்படுபவனாகக் காணோம். நடந்து போய்க்கொண்டே இருந்தான்.

நடந்தான்...நடந்தான்...நடந்துகொண்டே இருந்தான். காலம் ஒவ்வொரு மணியாக விழுங்கிக்கொண்டு வந்தது. இலேசாக வெய்யில் தணிய ஆரம்பித்தது. காற்றுக்கூடப் பழைய தெம்பு குறைந்துவிட்டது.

ஆகாயத்தில் ஒரு ஒலி கிளம்பியது. அவன் அண்ணாந்து பார்த்தான். மேய்ச்சலுக்குப் போய்விட்டுத் திரும்பிவரும் புறாப் பட்டாளம் கும்மாளம் அடித்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தது.

அவனுக்கே ஒரு அலுப்பு வந்தது. நெற்றியைத் துடைத்துக்கொண்டான். சற்றுநேரம் நின்றான். ‘விண்...விண்’ என்று அவனது வலது கால் வலித்தது. அதுதான் என்ன செய்யும்? இரண்டு கால்கள் சுமக்கவேண்டிய உடலின் பாரத்தை ஒரே கால் எவ்வளவு நேரந்தான் சுமக்கும்!

அவன் சுற்றுமுற்றும் பார்த்தான்; கொஞ்சதூரத்தில் ஏதோ ஒன்று பசுமையாகத் தெரிந்தது. அவன் முகத்திலே ஒரு மலர்ச்சி. அங்கிருந்து நடந்தான்.

அங்கே ஓங்கி வளர்ந்த மாமரம் ஒன்று இருந்தது. அதற்கு அருகில் ஒரு தாழைப்புதர். அதை ஒட்டினாற்போல ஒரு குளம். குளத்துப் படிக்கட்டுகள் இடிந்துபோய்க் கிடந்தன. ஆனாலும் அந்தக் குளத்துத் தண்ணீர் மட்டும் பால்போல இருந்தது.

மெதுவாக அந்த நொண்டி படிக்கட்டில் வந்து உட்கார்ந்தான். தோளில் தொங்கிக்கொண்டிருந்த ‘ஜோல்னா’ பையைக் கழற்றிப் பக்கத்தில் போட்டான். அவனுக்கு ஒரே ஆயாசம், ஒரே அலுப்பு. மேல் துண்டினால் முகத்தில் அரும்பின வியர்வையை ஒற்றி எடுத்தான்.

பசி வயிற்றைக் கிள்ள ஆரம்பித்தது. அவன் பைக்குள் கையை விட்டு ஒரு தகரக்குவளையை வெளியே எடுத்தான். அந்தத் தகரக் குவளையில் முக்கால்பாகம் சோறு அமுக்கி வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சோற்றின் மேலே ஏதோ

கறுப்பும் சிவப்பும் கலந்த நிறத்திலே உருண்டையாக உருட்டி வைக்கப் பட்டு இருந்தது.

அவனுடைய கை கால்களெல்லாம் ஒரே புழுதியாக இருந்தது. குளத்தில் இறங்கிக் கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டான். பிறகு குவளையில் இருந்த சோற்றோடு போராடத் தொடங்கினான். ஒவ்வொரு உருண்டைச் சோற்றுக்கும் ஒவ்வொரு துளி அந்தச் 'சுண்டல் குழம்பு வெஞ்சனம்' உள்ளே போய்க்கொண்டிருந்தது.

"என்னண்ணே...... சாப்புடுறீங்களா?"—ஒரு குரல் கேட்டது. அவனுக்குப் பக்கத்தில் பஞ்சத்தில் அடிபட்ட ஒரு உருவம் பல்லை இளித்துக் கொண்டு நின்றது.

"ஆமாம்..."— அலட்சியமாக அவனிடம் பதில் சொல்லிவிட்டு மறுபடியும் தன்னுடைய போராட்டத்தில் கவனத்தைச் செலுத்தினான்.

"ரொம்பப்பசியாஇருக்குதண்ணே. எனக்கும் ஒரு உருண்டை போடண்ணே?"—மெதுவாக அந்தப் பஞ்சை மனிதன் கேட்டுக்கொண்டே அவன் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"போடா பொசகெட்டவனே, மனிசன் அலுத்துச் சலித்துத் துன்ன உக்காந்தா இவன் வேறே பல்லைக் காட்டிக்கிட்டு வந்துடுறான்"—சோற்றுக்கையால் அவனை அடிக்க முயன்றான். அவன் கொஞ்சம் நகர்ந்து கொண்டான்.

"என்னண்ணே கோவிச்சுக்கிறே! கொஞ்சூண்டு தாண்ணே!" மீண்டும் கெஞ்சினான். நொண்டி அவனை ஆத்திரத்தோடு பார்த்தான். ஆனால் 'சட்'டென்று அவன் முகம் மாறியது. அவன் மனதுக்குள்ளே என்ன நினைத்தானோ?

"இந்தா தொலைச்சுக்கோ"—தகரக் குவளையை அவன் பக்கம் நகர்த்தி விட்டு, கை அலம்புவதற்கு எழுந்தான். அந்தப்பஞ்சை உருவம் தகரக் குவளையில் இருந்த மீதிச் சோற்றை 'லபக்...லபக்' என்று விழுங்கலாயிற்று. அவனுடைய பசி அவனுக்குத்தானே தெரியும்.

கையை அலம்பிவிட்டு வந்து நொண்டி தன் மடியிலிருந்து ஒரு துணுக்குப் பீடியை எடுத்துப் பற்ற வைத்து, சுருள் சுருளாகப் புகை விடலானான். உண்ட களைப்புக்கு அந்த 'சஞ்சீவி' சுரத்து ஏற்றியது. அவனையும் அறியாமல் ஒரு தில்லானாப் பாட்டு அவன் வாயினின்று கிளம்பியது!

'ஏவ்வ்...'—ஒரு ஏப்பம். அந்த மனிதனும் சாப்பிட்டுவிட்டு எழுந்து அவன் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"என்ன, நீயும் பொகைச்சல் போடுறீயா?"—நொண்டி தன்னுடைய மடியிலிருந்து இன்னொரு பீடித்துண்டை எடுத்து அவனிடம் நீட்டினான்.

"வேணாண்ணே"—அவன் தலையை ஆட்டினான். அவன் அந்தப் பீடியை மடியில் வைத்துக்கொண்டான். அவனுக்கு லேசாக ஒருமயக்கம் வந்தது. துண்டை உதறிப்போட்டு, பையைத் தலையணையாக வைத்துக்கொண்டு தன் 'கட்டை'யைப் படுக்கையில் கிடத்தினான். ஆனால் அந்த மனிதனோ மாமரத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் முகத்தில் ஏனோ ஒரு பிரகாசம் தோன்றியது.

"அண்ணே, அதோ பாத்திங்களா?—ஆச்சரியத்தோடு கூவினான்.

"என்னப்பேன், அங்கிட்டு ஆச்சர்யம் முளைச்சு இருக்கு!" என்று சுவாரஸ்யம் இல்லாமல் கேட்டான் அந்த நொண்டி.

"தேன் கூடு கட்டியிருக்கு, அண்ணே"—அவன் எழுந்தான்.

நொண்டி மரத்தைத் துளாவிப் பார்த்தான். ஒரு கிளையில் தேன்கூடு தொங்கிக்கொண்டிருந்தது. அடுக்கடுக்காக சிறு வீடுகள். அந்தவீடுகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தேனீ ஊரோடு சேர்ந்தது இருந்தாலும், ஊரோடு ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கும் பட்டணத்துச் சேரிகள்

போல அந்தத் தேன்கூடு அவன் கண்களுக்குப்பட்டது!

அதற்குள் அவன் மனம் தேனீக்களைப்பற்றி எண்ண ஆரம்பித்துவிட்டது.

'ஊரிலே இருக்கிற பூவிலே இருந்தெல்லாம் எவ்வளவோ கஷ்டப்பட்டுத் தேனைச் சேகரம் பண்ணிக்கொண்டு வந்து இங்கே சேர்த்து வைத்திருக்கின்றன, இந்த தேனீக்கள்! அடேயப்பா அந்த தேனுக்குத்தான் எவ்வளவு பாதுகாப்பு! என்ன தான், வாயில்லாப்பிராணியாய் இருந்தாலும், தானே கஷ்டப்பட்டுச் சேகரம் பண்ணியதுஎன்கிறபோது ஒரு கரிசனம் தோன்றத்தானே செய்கிறது?'

அவன் மனம் பழைய நினைப்பு ஒன்றில் முட்டிக்கொண்டது. அந்த மோதுதல் ஏற்படுத்திய வலி அவன் உள்ளத்தை உறுத்த ஆரம்பித்தது.

ஒரு பெரிய பனந்தோப்பு. அந்தத் தோப்பை ஒட்டி ஒரு நீண்ட தரிசு நிலம். அந்தத் தரிசு நிலத்திலே கள்ளியும் காட்டாமணக்கும் தவிர, வேறு புல்லைக்கூடப் பார்க்க முடியாது!

அந்தபனந்தோப்புக்குள் பத்துப் பதினைந்து குடிசைகள். ஒவ்வொரு குடிசையிலும் சில உயிர்கள் தொத்திக்கொண்டு கிடந்தன.



மழையும் வெய்யிலும் மாறி மாறி அடித்துக்கொண்டு வந்தது. அந்தத் தரிசு நிலம் நனைந்தது. காய்ந்தது.

மலர் இருந்தது. மலரிலே மகரந்தத் தூள் இருந்தது. மலருக்கருகில் வண்டும் வந்தது. ஆனால் வண்டு மலரைத் தீண்டவே இல்லை. மலர் காயாக மாறவில்லை. கருகி வாடி விழுந்தது. இயற்கை சிரித்தது.

நிலம் இருந்தது. நிலத்திலே சத்தும் இருந்தது. அந்த நிலத்து கருகில் ஆறறிவு படைத்த வண்டுகளும் வலம் வந்துகொண்டே இருந்தன. ஆனால் அந்த வண்டுகள் நிலத்தைப் பண்படுத்தவே இல்லை. நிலத்தில் பயிர் வளரவில்லை. இந்த நிலைமை ஏற்பட்டது என்? ஒரு கேள்வி! அந்தக் கேள்வியைத் தொடர்ந்து ஒரு பெரிய சிந்தனை!

அந்த நிலம் யாருக்குச் சொந்தம்? மறுபடியும் ஒரு கேள்வி.

இதுபோலெல்லாம் கேள்வியைக் கிளப்பிக்கொண்டு அந்தப் பனந்தோப்புக்குள்ளே ஒரே ஒரு ஆள் மட்டும் சுற்றிச் சுற்றி வந்தான். அவனுக்குக் கேள்விகளைக் கிளப்புவதற்குமட்டும் தெரிந்ததே ஒழிய, அதற்கு விடையை அறிந்துகொள்ள முடியவில்லை.

முதலில் குழப்பம்...பிறகு கொஞ்சம் தெளிவு.

ஆனால் ஏதோ ஒரு பயம்...அதற்குப் பிறகு பயம் பறந்தது. அவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்.

பெற்ற தாயாக இருந்தாலும் பிள்ளையைக் கைவிட்டுப் போய்விட்டால், பிறகு அவளுக்குப்பிள்ளையின் மீது என்ன உரிமை இருக்கிறது?

அவன் மண்ணைக் கிளற ஆரம்பித்தான். அவனைத் தொடர்ந்து அந்தப் பனந்தோப்பிலே இருந்த செம்மறி ஆட்டு மண்டையினரும் உழைத்தனர்.

இயற்கை கண் திறந்தது. மழையை ஏற்ற மண் பச்சையைப் பரப்பியது! உழைத்தவர்களின் உள்ளத்திலே உவப்பு பொங்கி வழிந்தது. பரந்த வெளி அவர்கள் உழைப்பு ஏற்றிய மெருகிலே ஒயிலாக விளங்கியது.

* * *

ஏதோ ஒரு சலசலப்பு. நொண்டியின் நினைவு அறுந்தது. நொண்டி சப்தம் வந்த திசையை நோக்கினான். அவனுடைய சகா—அதுதான் அவனுடைய பிச்சைச் சோற்றுக்குப் பங்குக்கு வந்த அனுமார். அந்த மாமரத்தின் கிளைகளிலே தொத்திக் கொண்டு மெல்ல மெல்லத் தேன் கூட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தான்.

"எய்...எய்...எய்..."—ஏதோ ஒரு வெறி நொண்டியின் நரம்புகளை முறுக்கியது.

"என்னண்ணே"—மரத்திலிருந்தபடியே அவன் கேட்டான்.

"உனக்கு ஏனப்பா இந்த வேலையெல்லாம். கீழே எறங்கி வாப்பா."

"நீ சும்மா இருண்ணே. இந்தத் தேன் கூட்டை எடுத்தா எதுவும் நாலு காசுனச்சும் கிடைக்கு மண்ணே."

அவன் பேச்சு நொண்டிக்கு ஆத்திரத்தைக் கிளப்பியது.

"மகா மனுசரு இவரு. போப்பா. ஏதோ உனக்கே சொந்தம்மாதிரில்லே ரொம்ப அவசரமாத் தேன் கூட்டை எடுக்கப் போறே."

நொண்டியின் ஆத்திரத்தை அவன் ஒன்றும் சட்டை செய்யவில்லை! ஒரு கேலிச் சிரிப்பு அவன் உதட்டில் மின்னியது. அந்தக் கிளை அசைந்தது.

நொண்டி தன் கண்களை அகல விரித்துப் பார்த்தான். அவன் உள்ளத்தில் ஏதோ ஒரு அசைவு. அந்த அசைவின் நிழலிலே...

பசுமை படர்ந்திருந்த அந்தப் பனந்தோப்பை வெளியே இரண்டு கண்கள் எக்காளத்தோடு பார்த்தன. அந்தப் பார்வையில் ஒரு பயங்கரம் கலந்து இருந்தது! இமைகள் செருகப்பட்டன...சில ஆட்கள் கைகளிலே அரிவாள் ஏந்தி விளைந்த கதிரை அறுக்க ஆரம்பித்தனர்.

"இது என்ன அக்கிரமம். உழைக்கிறது நாங்க......அறுத்துக்கிட்டுப் போறது நீங்களா"—ஒரு குரல் நெருப்புக் கக்கிக்கொண்டு வெளி வந்தது.

"ஏய்...என்னடா கத்துறே? இது என்னூட்டு நெலம் தெரியுமுல்ல!"—ஒரு முண்டாசுத் தலை வீறாப்புப் பேசியது.

"நெலம் இருந்த லெச்சணம்தான் எங்களுக்குத் தெரியுமே. எவனும் நல்லாப் பயிராக்கி வச்சு இருந்தா இவுரு அறுக்கிறதுக்கு வந்துடுவாரு..."—அந்தக் குரல் அழுத்தமாகவே பேசியது.

"உங்களை எவண்டா இதுலே பயிரிடச் சொன்னது? பேசவந்துட்டான் ஆளெப் பாரு. மரியாதையாப் போறீயா...இல்லே..."—ஒருஉறுமல்.

"உழுது பயிராக்கிய நாங்க உன்னுடைய மிரட்டலைக் கண்டு போயிடணுமா? அந்த தந்தரமெல்லாம் இப்போ பலிக்காது...ஆமாம்..."—அவனுடைய உதடுகள் கடுங்கின. அவன் முகத்தில் இரத்தம் ஏறியது.

"என்னடா எதுத்து எதுத்துப் பேசுறே!"—அந்த 'முண்டாசு' கையை ஓங்கியது—அவ்வளவுதான் அவன் கையில் ஏதோ ஒன்று பளபளத்தது!

"நீங்க அறுக்கறதை இப்போ நான் பார்க்கிறேன்!"—அவன் வய

-வில் குதித்தான். வயலிலே நின்றவர்கள் எல்லாம் கரையேறி ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தனர். 'முண்டாசுத் தலை' மருட்சியோடு 'டன்கர்க்' செய்ய ஆரம்பித்தது

அவனுடைய கையிலே இருந்த அரிவாள், முண்டாசுத் தலையின் அகம்பாவத்திற்கு ஒரு சரியான சம்மட்டி அடிகொடுத்தது. அவன் முகத்தில் ஏறி இருந்த சிவப்பின் மத்தியிலே ஒரு சிரிப்பு மின்னியது!

* * *

இங்கே......

அவன் தேன்கூட்டை நெருங்கிவிட்டான். அவன் முகத்திலே ஒரு அகம்பாவச் சிரிப்பு, அவன் தேன்கூட்டைத் தீண்டினான்...

தேனீக்கள் விழித்துக்கொண்டன.

"ஆ..."—அவன் அலறினான். அவனுடைய உடலெல்லாம் பதறியது. அவன் தலையைக் கவிழ்த்துக்கொண்டு பின்வாங்க ஆரம்பித்தான்.

நொண்டி சிரித்தான்.

"என்னண்ணே...சிரிக்கிறே? தேனீ கொட்டிப்புட்டதாண்ணே?" அவன் குரல் மிகவும் சோர்ந்திருந்தது.

"கொட்டாம என்ன செய்யும்? அந்தத் தேனை சேகரம் பண்ணின கஷ்டம் அதுக்குல்ல தெரியும். அது தான் ஒனக்கு முதல்லேயே சொன்னேன்...கேட்டியா...?" நொண்டி அவனைப் பரிகாசம் பண்ணினான். அவன் முணுமுணுத்துக்கொண்டே மரத்திலிருந்து இறங்கினான். அவனுக்கு நொண்டிமீது ஆத்திரமாக இருந்தது. ஆனால் நொண்டி அதைச் சட்டைசெய்ய இல்லை!

அவன்தேன்கூட்டை ஒருமுறைப்பு முறைத்தான். மனதுக்குள்ளே ஏதோ ஒரு பொருமல்; தேனீ கொட்டிய இடம் கடுத்தது. அவன் பல்லைக் கடித்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பினான்.

நொண்டி அவனை அலட்சியமாகப் பார்த்துவிட்டுப் படுத்தான்.

அவன் கண்விழித்துப் பார்க்கையில் நிலவு கிளம்பிவிட்டது. அன்று பௌர்ணமி; மேலே வானத்திலே பூசியிருந்த செந்நிறத்தின் பிரதிபலிப்பு சந்திரனைப்பொன்னிறமாக்கியிருந்தது. அந்தக் குளத்துத் தண்ணீர் உருகி நிற்கும் வெள்ளிபோலப் பளபளத்துக்கொண்டிருந்தது.

நொண்டியின் கண்கள் கூட்டைப் பார்த்தன. அது இருந்த இடத்திலேயே இருந்தது. அவன் மனதுக்குள்ளாகவே ஏனோ சிரித்துக்கொண்டான்.

ஒரு கனைப்புச் சத்தம் கேட்க நொண்டி திரும்பிப் பார்த்தான்.

போனவன் கையிலே ஒரு தீப்பந்தம், ஒரு ஏணி, ஒரு தகரக் குவளையில் எண்ணெய், ஒரு காவிச்சட்டி ஆகிய உபகரணங்களோடு நொண்டியை ஒருமாதிரியாகப் பார்த்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தான்.

"என்னப்பா ரொம்ப முஸ்திப் போடத்தான் வந்திருக்காப்போல இருக்கு?" என்று நொண்டி அவனை நோக்கிக் கேட்டான். ஆனால் அவன் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. அவன் உடம்பிலே எண்ணெயைப் பூசிக்கொண்டு தீப்பந்தத்தைக் கொளுத்தினான். தீ மூண்டுவிட்டது. ஏணியை மரக்கிளையில் சார்த்தி, கையிலே தீப்பந்தத்தைப் பிடித்துக்கொண்டு மேலே ஏறினான்.

அவன் கையிலிருந்த தீப்பந்தம் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. அதன் மத்தியிலே தேன்கூடு 'பளபள' வென்று பிரகாசித்தது. நொண்டியின் உள்ளத்தில் நினைவுத் தீ தன் நீண்ட நாக்குகளை நீட்டிக்கொண்டு சக்கரவட்டமிட்டது! அந்த வட்டத்தின் மத்தியிலே...போலீஸ் லாரிகள் வந்து பனந்தோப்பு வயல்வெளிக்கருகில் நின்றன முண்டாசுத் தலை முதலில் இறங்கியது. அதைத் தொடர்ந்து பல இரும்புத் தலையர்களும் இறங்கினர்.

அந்த வயலிலே வேலை செய்துகொண்டிருந்த பறட்டைத் தலை

யர்கள் அவர்களைப் பயத்தோடு பார்த்தனர்.

“ஏய்...நீங்க இந்த வயலைவிட்டு உடனே வெளியேறணும். இந்த நிலம் இவருக்குச் சொந்தம்” என்று முண்டாசுத்தலையைச் சுட்டிக் காட்டி உத்தரவிட்டது ஒரு இரும்புத்தலை. பரட்டைத் தலையர்கள் பயத்தினால் வாயடைத்துப் போய் நின்றனர்.

“இந்த நிலம் அவருக்குச் சொந்தமில்லை. நாங்கள் உழுதோம். பயிரிட்டோம். உழைச்சோம். உழைக்கிற எங்களுக்கு இல்லாத உரிமை சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிற அவருக்கு எங்கேருந்து கிடச்சுது”—ஒரு தனிக்குரல் கேட்டது.

“பட்டா அவர் பேரிலே இருக்குது. சட்டமும் நிலம் அவருடையதுன்னு சொல்லுது. உன்னுடைய பேச்சிலே அர்த்தமே இல்லே!?”—இரும்புத்தலை கொக்கரித்தது.

“காற்றையும், மழையையும் ஒருத்தருக்கென்று உரிமையாக்கி வைக்காத சட்டம் நிலத்தைமாத்திரம் ஒருத்தருக்கென்று உரிமையாக்கி வைத்ததுமாத்திரம் ரொம்ப அர்த்தமான செய்கையோ, உழுபவனுக்குத்தான் நிலம்...உழைப்பவனுக்குத்தான் உரிமை...” அந்தக் குரலில் ஆவேசம் ஏறிக்கொண்டேபோனது!

“எய் இவனுகளையெல்லாம் அடிச்சு விரட்டுங்க!”

கருணைக்குக் காக்கிச்சட்டையையும், மூளைக்கு இரும்புக் குல்லாயையும் போட்டுச் சிறை செய்திருக்கும் அந்தச் சட்டத்தின் காவலர்களுக்குப் பரட்டைத் தலையர்களின் பரிதாப ஓலம் காதில் விழவே இல்லை. அவர்கள் அடித்துக்கொண்டே இருந்தார்கள். ஆயுத மேந்தித் தாக்கும் அவர்களுடைய எதிர்ப்பைப் பஞ்சைகள் எவ்வளவு நேரந்தான் தாங்கிக் கொண்டிருக்க முடியும்? அவர்கள் ஓட ஆரம்பித்தனர். சுழன்ற கம்புகள் உரிமைக் குரல் கிளப்பிய அந்த நிமிர்ந்த நெஞ்சினை நெருங்கின.

அவன் ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றுகொண்டிருந்தான். அவன் கண்களிலிருந்து நீர் கசிந்துகொண்டிருந்தது.

அவன் முழங்கால்களைப் பிடித்துக்கொண்டு கீழே விழுந்தான்.

நொண்டி தலையை உலுக்கிக் கொண்டான். அவனுடைய நினைவு கலங்கியது. தேன்கூட்டிலிருந்த ஈக்கள் பொசுங்கிக் கீழே விழ ஆரம்பித்தன.

நொண்டி மரக்கட்டைகளை எடுத்து ஊன்றிக் கொண்டு எழுந்தான். அவன் கண்கள் கலங்கி இருந்தன.

மரத்திலே இருந்தவனுக்கு வேலை முடிந்துவிட்டது. தேன் கூட்டை எடுத்துக்கொண்டு கீழே இறங்கி வந்தான். அவன் முகத்திலே வெற்றிப் புன்னகை மின்னியது.

“இவர் மனசு வைச்சா எதா இருந்தாலும் நடத்தாம வுடமாட்டாரு. ஞாபகம் வைச்சுக்க, அண்ணே” நொண்டியைப் பார்த்து அலட்சியமாகக் கூறினான்.

நொண்டி பதில் பேசவில்லை. அவனுடைய பார்வை, இறகு பொசுங்கிக் கீழே விழுந்து கிடந்த தேனீக்களின் மீது பதிந்திருந்தது. அந்தத் தேனீக்கள் சுருண்டு, சுருண்டு கும்பலாக விழுந்து கிடந்தன! குனிந்து ஒரு தேனீயைக் கையில் எடுத்தான். அந்தத் தேனீ பறப்பதற்கு ஒரு துடிப்புத் துடித்துக்கொண்டு கிளம்பியது! ஆனால், அதனால் பறக்க முடியவில்லை. காரணம் அதற்கு இறக்கைகள் பொசுங்கிப்போய் விட்டன; அவன் தன்னுடைய நொண்டியான காலைப் பார்த்தான்.

ஒரு பெருமூச்சு அவனது நெஞ்சைப் பிளந்துகொண்டு வெளிக் கிளம்பியது. நொண்டியின் பார்வை திரும்பியது.

தேனடையை எடுத்தவன், அதைச் சட்டியில் பிழிந்துகொண்டிருந்தான்.

“தம்பி, நல்ல வேலை செஞ்சே நீ...”—நொண்டி ஏகத்தாளமாகப்

பேசினுன். அவன் நொண்டியை விறைத்துப் பார்த்தான்.

"இந்தத் தேனீக்களெ எவ்வளவு சிரமப்பட்டு இந்தத்தேன் கூட்டைக் கட்டியிருக்கும் தெரியுமா? நீபாட்டுக்கு வந்தே, தீப்பந்தத்தாலே தேனீக்களைப் பொசுக்கினே. தேன் அடையை எடுத்துப் புழிஞ்சுட்டே! இம்..."

"ஆ...மாம்..."—அவன் அலட்சியமாகத் தலையை அசைத்தான்.

"ஒவ்வொரு சொட்டுத் தேனு நீ சேகரம் செய்திருந்தால்ல உனக்கு இதோட அருமை தெரியும்? திகிலடியாக் கெடைச்சதுதானே. உனக்கு அலட்சியமாகத்தான் இருக்கும். ஒன்னைச் சொல்லி ஒரு குத்தமுமில்லே..."—மேலே அவன் வாயினின்று வார்த்தைகள் கிளம்பவில்லை.

ஆனல் நொண்டியின் வார்த்தைகளை அவன் ஒற்றைக் காதில் வாங்கிக் கொண்டு அலட்சியமாக நாக்கை நீட்டினுன்.

நொண்டி அவன் பக்கத்தில் அவிக்கப்பட்டுக் கிடந்த தீப்பந்தத்தைப் பார்த்தான். அவன் கண்களில் நீர் பரவியது!

'பணக்காரர்களைப் பாதுகாப்பதற்காகப் படைகளும், சட்டங்களும் இருப்பது போல, பலமுள்ள இவனுக்குத் துணையாக இந்தப் பந்தம் வேறேயா இருக்கவேண்டும்?'—நொண்டியின் மனதுக்குள்ளே ஒரு சலிப்புப் பிறந்தது.

பாவம், அவன் ஒருவன்மட்டும் சலித்துக்கொண்டு என்ன பயன்? வலியோர்கள் எளியோர்களை என்னதான் வாட்டினுலும், கேட்பதற்கு நாதி எங்கே இருக்கிறது? வலியோர்களின் வாலைப் பிடித்துக் கொண்டு போவதற்குச் சட்டமும் படையும் வேறு இன்னும் இருக்கிறது. என்ன செய்வது, இதுதான் உலகம்! ★

---


# மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறுமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

# கர்ப்பதடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பாவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

கிளை 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82 MAIN ST. கொழும்பு-11.

# ★ வள்ளுவம் ★

[கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினர் நடித்த இந்த இசைநாடகம், சென்னை 'அகில இந்திய ரேடியோ'வில் ஒலிபரப்பப்பட்டது; உரிமைபெற்று வெளியிட்டிருக்கின்றோம்]

**ஆண் :** பூங்கோதை, பூங்கோதை, இப்படி வா.

**பெண் :** அடடடா, கொஞ்ச நேரம் வேலை செய்ய விடமாட்டேங்கிறீங்களே.

**ஆண் :** நீ பக்கத்தில் இருந்தால் தான் கற்பனை ஓடும். இந்தாப் பாரு, நீ அந்தப் பக்கம் போனே, பேனா ஓடமாட்டேங்குது; எழுத்து நின்னுட்டுது.

**பெண் :** சரிதான்; கற்பனையும் ஓடி அதன் பின்னுடிப் பேனாவும் ஓட ஆரம்பிச்சுடுத்துன்னா என்ன செய்யறது? சும்மா இருங்க.

**ஆண் :** இந்தா, சும்மாவா பாரதியார் பாடியிருக்காரு.

> "காதலினால் மானுடர்க்குக் கல்வியுண்டாம்,
> கல்வியிலே மானுடர்க்குக் கவலைதீரும்!
> காதலினால் மானுடர்க்குக் கவிதையுண்டாம்,
> கானமுண்டாம் – சிற்பமுதற்கலைகளுண்டாம்!"

பாட்டைக் கவனிச்சியா? அதுனாலே தான் நீ பக்கத்திலேயே இரு என்கிறேன்.

**பெண் :** ஆஹா! காதலிலே எல்லாம் இருக்கு என்கிறீங்க

**ஆண் :** நானா சொல்றேன்–பாரதியாரே சொல்றாரு,

**பெண் :** அப்படியா...அதுமாத்திரமா? 'காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' அப்படின்னும் சொல்லியிருக்கே!

**ஆண் :** அதுதான் சரி.

**பெண் :** அப்படியானால் நம்ம ரெண்டு பேருடைய கருத்தும் வெவ்வேறேயாச்சே! கருத்து ஒருமித்து ஆதரவு பட்டாத்தானே இன்பம்னு சொல்லியிருக்கு?

**ஆண் :** அப்போ ரெண்டுபேர் கருத்தும் வெவ்வேறேயா, அதென்ன?

**பெண் :** என்னவா? சொல்றேன்.

**கருத்து வேற்றுமைதான்–நம் இருவர் (கருத்து)**

**கடவுள் பக்தி உடைய எனக்கும்**
**கனவிலுங் கருதாத உமக்கும் (கருத்து)**

பணத்தைச் சேர்த்துக் குடித்தனத்தை
நடத்தச் சொல்லுகிறேன் ஒழுங்கா
நடத்தச் சொல்லுகிறேன்—தர்ம
குணத்தைப் பெரிதாய் மனத்தில் எண்ணியே
பணத்தைத் துலைக்கும் உமக்கும் எனக்கும் (கருத்து)
பீயே எம்மே படிக்கப் பிரியப்படுகிறேன்
பெருமையாக தொழிலைக்கற்றுப் பிழைக்கச் சொல்லும்
உமக்கும் எனக்கும் (கருத்து)

எனக்குத் தெய்வ பக்தியுண்டு; உங்களுக்குக் கடவுள் என்றாலே பிடிக்காதே! இது கருத்து வேற்றுமையில்லியா?

ஆண்: உனக்கு மட்டுந்தான் கடவுள் பக்தி, இல்லியா! எந்தக் கடவுள் மேலே பக்தி வச்சிருக்கே? கொஞ்சம் சொல்லு.

பெண்: உம்மை இவ்வளவு உயரத்துக்குப் படைச்சிவிட்டிருக்கானே, அந்தக் கடவுள் மேலே.

ஆண்: என்னை இவ்வளவு உயரத்துக்குப் படைச்சது எங்க அம்மா அப்பா. அவுங்கமேலேயா உனக்கு பக்தி?

பெண்: நான் ஏன் அவுங்க மேலே பக்தி கொள்றேன்?

ஆண்: அதுதானே கேக்கறேன். மனுஷாளிடம் பக்தியாயிருக்கமாட்டே; கடவுள்களிடத்திலே தான் பக்தி, இல்லையா? நீ எந்தக் கடவுள்கிட்ட பக்தியாயிருக்கேன்னு எனக்குத் தெரியணும். ஆயிரம் கடவுள்களைச் சொல்றேன் அப்புறம் நீ சொல்லு.

எந்த தெய்வத்தின் மேலம்மா, உனக்கு பக்தி?
சைவரெல்லாம் போற்றிவரும் சாத்திர புராணம் சொல்லும்
சக்தியும் சிவனும் தெய்வமா—இல்லே அவங்க
பெத்துவிட்ட ரெண்டும் தெய்வமா?
நல்லாரைக் காத்ததுவும் நாதனென்று சிலர் சொல்லும் (எந்த)
அல்லாவே தானும் தெய்வமா—இல்லே அவரு
அல்லாமல் வேறு தெய்வமா?
சத்தியத்தைக் காப்பதற்கு தங்கமுடிதான் துறந்த
புத்தபிரான் தானும் தெய்வமா?—அல்லாமல் பல
சித்து விளையாடும் தெய்வமா?
மாசடைந்த மக்கள்குலம் வாழவே வழிவகுத்த
ஏசுகிருஸ்து தானும் தெய்வமா?—அல்லாமல் பணங்
காசுவாங்கும் வேறு தெய்வமா? (எந்த)
கோவர்த்தனகிரியை
கொடையாய் பிடிச்ச அந்த
கோபால கிருஷ்ணன் தெய்வமா—அல்லாமல் பஜ
கோவிந்த சாமி தெய்வமா?
காட்டேரி மோட்டேரி
கருத்தவயல் வீட்டேரி
கூட்டோட மோட்சந் தரும்
குண்டுவயல் சங்கரியும்

கின்னரர்கள் கிம்புருடர்
அட்டதிக்குப் பாலகர்கள்
கேட்டவரம் தான் கொடுக்கும்
கீழ்க்கோட்டை மாடசாமி
கண்ணுச்சாமி பொன்னுச்சாமி

அதுமட்டுமா?

ஆலமரத்திலே சப்பாணி
அரசமரத்திலே பேயாண்டி
வேப்ப மரத்திலே மாகாளி
வௌக்கு மரத்திலே மலையாண்டி
அங்குமிங்கும் கணக்கில்லாமெ
எங்கும் நிறைஞ்சிருக்கும்
ஆயிரக் கணக்கிலிங்கே
ஆட்டம் போடும் தெய்வங்களில்

எந்த தெய்வத்தின்
மேலம்மா—உனக்கு பக்தி? (எந்த

கேட்டாயா? இப்பச் சொல்லு, எந்தக் கடவுள்மேலே பக்தி?

பெண்: சொல்ல முடியலையே, யாரைக் கும்பிடறதுன்னு! எனக்கே திகைப்பாயிருக்கு.

ஆண்: அதுக்காகத்தான் திகைப்பில்லாத தெய்வம் ஒண்ணு இருக்கு, அதை வணங்குன்னுரு வள்ளுவர்.

பெண்: அது எந்தத் தெய்வம்?

ஆண்: முதல்லே மனைவி வணங்கவேண்டிய தெய்வம் யார், தெரியுமா?

பெண்: யாரு?

ஆண்: கணவன்.

"தெய்வந் தொழாள்
கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

பெண்: அப்போ எனக்கு நீங்க தெய்வம்; உங்களுக்கு ஒரு தெய்வம் வேணுமே அது யாரு?

ஆண்: அதுதான் தாய்.

பெண்: அப்போ உங்கம்மாவுக்குத் தெய்வம்?

ஆண்: எங்க அப்பா.

பெண்: அடடே, சரியாத்தான் வருது. இருங்க, இப்போவிலே இருந்து உங்களைத்தான் வணங்கப்போறேன். மாலையிட்டு என்னை மகிழவைத்த மணவாளரே, உமது பொற்பாதகமலங்களைத் தண்டனிட்டு நமஸ்கரிக்கின்றேன்.

ஆண்: மங்களமுண்டாகட்டும்! எழுந்திரு, எங்கே போறே?

பெண்: இருங்க—கொஞ்சம் மழையைப் பெய்யச் சொல்லிட்டு வர்ரேன், மழையேபெய், பெய்! என்னுங்க...மழை பெய்யமாட்டேங்குது? புருஷனைக் கும்பிடுகிற பொண்ணு—மழை பெய்யின்னு பெய்யும்னு சொன்னீங்களே.

ஆண்: அப்படியா?...

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே"

என்று பாட்டு இருக்கு. தேன் வந்து காதிலே பாஞ்சா என்ன ஆகும்? உயர்வுக்காக அப்படிச் சொன்னல் குறும்புத்தனமா அர்த்தம் பண்றியே? சரி, சரி, கொஞ்சம் சும்மா இரு. இதை எழுதி முடிக்கணும்.

பெண்: அது என்னுங்க அது?

ஆண்: வள்ளுவம்கிற நாடகம்.

பெண்: வள்ளுவமா, அது என்ன?

ஆண்: வள்ளுவருடைய கொள்கை வள்ளுவம். காந்திக் கொள்கை காந்தியம்! மார்க்ஸ் கொள்கைமார்க்ஸீயம், அதைப்போல வள்ளுவம்—ஆ...ஆ...நேரமாச்சு—நாடகம் ஆரம்பிக்க வேண்டியது தான்! வா—வா.

(நாடக ஆரம்பம்—மணியடித்தல்)

அகரமுதல எழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே உலகு நவிலும் (அகர)
அறம் பொருள் இன்பம்
அவனியில் தழைக்க
அறிவுத் தெய்வமாம்
வள்ளுவர் வகுத்த (அகர)

பொறுமை: பேராசை, பேராசை!

பேரா. யாரு, பொறுமையா? உள்ளே வா, அண்ணே!

பொ: இந்தப் பொறுமையை மனசார வரவேற்கிறது பேராசை அண்ணே, நீ ஒருத்தன் தான். என்ன அண்ணே, எழுதிட்டு இரு ?

: எழுத்துப் போட்டி.

: எழுத்துப்போட்டியா? எதுக்கெல்லாம் தான் போட்டி? ா இருக்கிற எழுத்து என்ன பண்ணிச்சு உன்னே! பாவம், அதோட போயி ஏன் அண்ணே போட்டி போடறே?

பேரா: தம்பீ பொறுமை! அதிலே விஷயமிருக்கு. போஸ்டரைப் பாத்தியா 50,000–60,000 முண்ணு சப்பாதிக்கிறதுக்கு சுளுவான வழி.

பொ: நல்லாயிருக்கு—உழைப்பில்லாமே சம்பாதிக்கிறதுக்குச் சுளுவான வழி இப்படிச் சப்பாதிச்சு, நீ சுகமாயிருக்கலாமுண்ணு நெனேக்கிறே!

பேரா: ஏ பொருமை, சத்தம்போட்டுப் பேசாதே!

பொரு: பேசினல் என்னவாம்?

பேரா: கோபம் வருது.

பொ: எங்கே?

பேரா: அதோ!

(சாமான்கள் உருளும் சப்தம்)

பொரு: கோபம் வந்தாலே அது தனியாத்தான் தெரியுது. வாங்க அண்ணே! கோபம், என்ன இப்படி தனியா வந்திருக்கீங்க

கோ: என்ன கேள்வி இது?

பொரு: இல்லே, கோபம் இருக்கிற இடத்திலே குணமும் இருக்கும்ணு சொல்லுவாங்களே! உங்க மனைவி குணத்தைக் கூட்டிக்காமல் வந்திருக்கீங்களே.

கோ: அவள் எப்பவுமா கூட இருப்பாள்? தம்பி, ஒரு சங்கதியில்லே! அவள் கூடவே இருந்தால் கோபத்துக்கு ஏது பெருமை?

பேரா: சரி, குணம் எங்கேதான் போயிருக்காள்?

கோ: அறத்தைப் பார்க்கப் போயிருக்காள்.

பொ: யாரு? அந்த அயோக்யனையா? அவன் நமக்குப் பரம விரோதியாச்சே! அவன்தான்—கோபம், பெருமை, இன்னுசொல், பேராசை எல்லாத்தையும் கிட்டவே் வரக்கூடாது என்கிருனே; அந்தக் கொள்கையுடையவனுச்சே—அவனையா பாக்கப் போயிருக்கிருள்?

கோ: ஆமாப்பா, பொருமை! இப்பத்தான் தெரியுது—குணத்துக்கு அறத்துமேலே அதிகப் பிரியமுண்ணு. அதனலேதான் அங்கேயே போய்விடுகிருள். அடிக்கடி—உம்—போகட்டும். அவளை என்ன செய்கிறேன் பாரு; அவளை மட்டுமில்லே—அந்த அயோக்யப் பயல் அறம் இருக்கானே, அவனை எலும்பை நொறுக்கிப் போடுகிறேன்!

பொ: வள்ளுவத்துக்குப் பிறந்தவனல்லவா அறம்! அப்பன் குணம்தானே இருக்கும்?

பேரா: அவன் கிடக்கிருன்! அவன் தங்கை இருக்காளே பொருள்—அதுதானண்ணே செல்லமா பணம் பணம்ணு கூப்பிடுவாங்களே, அவளை—எப்படியாவது வசப்படுத்தணும்ணு பாக்கறேன்; முடியல்லே.

கோ: முடியலியா? நேராப்போயி கையைப்பிடிச்சு கரகரண்ணு இழுத்து வந்தாப் போகுது.

பொ: அண்ணே கோபம், ஆபத்து; பேசாமலிரு நான் சொல்றேன். அறத்துக்குத் தங்கை, பொருள் இருக்குதில்லே—அது இரட்டைக் குழந்தைகள்—பணத்துக்கு சகோதரி கல்வியிருக்காளே, அவளைப் பிடிச்சுக்கிடுவேன்.

பேரா : கல்வியா ? அது நமக்குப் பொருத்தமில்லை; ரொம்பக் கஷ்டம். அந்த ஆசை நமக்கு வேண்டாம்; பணம் அவதான் நமக்குத் தேவை.

பொரு : என் அப்பா பொறுமை, தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி மெய்வருந்தக் கூலி தருமுண்ணு இருக்கே.

கோ : மண்ணுங்கட்டி முயற்சி! சூழ்ச்சி-சூழ்ச்சியாலே நாட்டைக்கூடப் பிடிக்கலாம். உம், எழுந்திருங்க, போகலாம்-ஏய், இன்னுச்சொல், நீ என்ன பேசாமலிருக்கிறே?

இன்னுச்சொல் : நீங்க எல்லாரும் பேசி முடிச்சபிறகு சொல்லலாமுண்ணுதான்.

பொரு : சரி, நாங்க முடிச்சாச்சு. உன் அபிப்பிராயத்தைச் சொல்.

இன்னு : அறத்துக்குப் பக்கத்திலே நம்மாலே நெருங்க முடியாது. ஆனல் ஒரு வழியிருக்கு. வயலு 'வைக்கப்போரு—உணவுப் பொருள்கள் இவை யெல்லாவற்றையும் தீயை வைச்சுப் பொசுக்கிப் போடணும்-அறம் அதைப் பார்த்து 'ஆர்ட்பெயி'லாகி அழிந்து போவான்.

பேரா : சரியான யோசனை! சம்மதிச்சோம் உன் மூளையை! புறப்படுங்க.

அறம் : ஈதல், இசைபட வாழ்தல், அது வல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு! அதாவது, தாராளமாகத் தருமம் செய்து இந்த உலகத்தாராலே புகழுக்குரியவனுக நடந்து கொள்ளுண்ணு வள்ளுவஞ் சொல்லுது. அதையேதான் குடுத்துவச்சவன் அனுபவிப்பான்னு சோல்றேம். எதைக் குடுத்து வச்சவன், எப்போ குடுத்துவச்சவன்...போன ஜன்மத்திலேண்ணு சொல்லுவாங்க— இல்லை, அதல்ல அர்த்தம். நம் உழைப்பிலே கிடைக்கிற பணத்தைப் பலருக்கு தர்மமாகக் கொடுத்து வைக்கணும். அப்படி தருமம் கொடுத்துவச்சா அந்தப்பலனை நாம் பின்னல் அனுபவிக்கலாம். பாட்டைக் கேளு.

கொடுத்து வைத்தவர் அனுபவிப்பார்—எனும்
கொள்கையை வள்ளுவம் சொல்லுதுபார் (கொடுத்து)

நாட்டில் பசிப்பிணி அகல—நற் கருமம் செய்ய
தருமமென்ற பேங்கில் (கொடுத்து)

அறிவுப் பசிக் களையை அகற்ற
அறநிலையம் பல அமைத்திட—தருமம் (கொடுத்து)

நிலவளம் எங்கும் நிலவ
நீர்பாசனமுறை நிறைவேற—பொருளை (கொடுத்து)

பகுத்துண்டு வாழ் என மொழிந்தார்
பாரில் சிறந்த தர்மம் பசித்தவர்க்கு—அன்னம் (கொடுத்து)
கல்வி !

கல்: என்ன, அண்ணு!

அறம்: என்ன, பேசாமலிருக்கே!

கல்: அண்ணு, உங்கள் பாட்டின் கருத்து அப்படியே என்னை இருக்க வைத்துவிட்டது. ஆஹா, செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம், அச் செல்வம் செல்வத்துளெல்லாம் தலை.

அறம்: ஆமாம், அம்மா. படிப்பதைவிடக் கேட்டுப் பலது தெரிந்து கொள்ளலாம்—இதுதான் நம்ம அப்பா வள்ளுவத்தின் கொள்கை. சரி பணம் எங்கே போருள்?

கல்: அவள் சொன்னுலும் கேட்கமாட்டேங்கிருள்—எங்கெங் கெல்லாமோ போருள்.

அறம்: என்ன செய்வது? அம்மா கல்வி, பணம் வந்தால் அவளுக்குக் கொஞ்சம் புத்தி சொல்லு. நான் ஓரிடத்தில் வள்ளுவத்தைப்பற்றிப் பிரசாரம் செய்யப் போறேன்.

கல்: சரி, அண்ணு!

கல்: தங்கை பணம், இந்த நேரத்திலே எங்கே போய் வருகிருய்?

பணம்: எங்கே போனுல் உனக்கென்ன?

கல்: எனக்கென்னவா? நாமிருவரும் ஒன்ருய்ப் பிறந்தவர்கள்—என்னை விட்டு நீயும், உன்னை விட்டு நானும் பிரியவே கூடாது என்று அப்பா வள்ளுவம் சொன்னது ஞாபகமில்லையா?

பணம்: அப்பா ஏதோ கிழட்டுத்தனமாச் சொல்லிவிட்டுப் போனுர்; அதைக் கேட்டு நடக்கணுமிண்ணு சட்டமா என்ன?

கல்: அப்படிச் சொல்லாதே, பணம்.

பணம்: புத்தி சொல்றியா எனக்கு? என் புத்தியைக் கேட்டு நடக்கக் கோடி கோடியாக் காத்துக்கிட்டு இருக்கிருங்க; நீ வந்து என்னை விடப் பெரியவ்ளா நினைச்சிக்கிட்டு இருக்கேபோலிருக்கு.

கல்: நான் பெரியவளில்லையா, பணம்?

பணம்: வயசிலே—முதலிலே பிறந்தவள் பாரு—அதுலே மட்டும்! சாமர்த்தியத்திலே நான்தான் பெரியவள், கேளு. இந்தப் பணம் மனசு வச்சால்,

செல்வத்துக்கு நிகரில்லை மற்ருென்று
சொல்லத் தடையே கிடையாது! (செல்)
பல்வகையான புகழ் மதிப்பைத்தரும்
பாரிலுள்ளோர்கள் எல்லாரும் போற்றப்பெறும்
செல்வத்திற்கு நிகரானது
வேறென்ன இருக்கிறது?
பணமில்லாத ஒருவன் பிணமாக
மதிக்கப்படுகிருனன்றி
அவனுக்கு மதிப்பு யார்
கொடுப்பார்கள்? உலகத்தில்

செய்யாத தொழில்களைச்
செய்வதும்—ஆடுவதும்,
பாடுவதும்—கப்பல் யாத்திரை
செய்வதும், போர்சேவகராகி
உயிரிழப்பதெல்லாம் பணத்
துக்காகத்தானே—முடிவா
சொல்றேன், கேளு.

“ பொருளில்லார்க்கின்பமில்லை...என்றும்
அருளறக் கீர்த்தியில்லை
மாந்தரிற் பெருமையில்லை
கதிபெறவழியுமில்லை
பெருநிலத்திடை நடக்கும்
பிணமெனப்படுவரென்றே ”—

அதனலே இந்தப் பணத்துக்குத்தான் மதிப்பு, தெரிஞ்சுக்கோ! உன்னைப்போலப் படிச்ச நாவலர், பாவலர், பிரசங்கியாரெல்லாம் பணத்தை அடைய எவ்வளவு பாடு படருங்க தெரியுமா? ஏட்டுச் சுரக்காய் கறிக்காகாது, தெரிஞ்சுக்கோ.

கல்வி: அம்மா பணம், கல்வியும் பணமும் ஒண்ணு இருந்தால் தான் உலகத்திலே இன்பமாயிருக்க முடியும். நம்ம ரெண்டுபேரும் கூடப்பிறந்த சகோதரிகள்; பிரிந்தால் மதிப்பில்லை; ஞாபகத்தில் வைத்துக்கொள்.

கல்வியை யல்லாது நல்ல பயன் தர
வல்லது சொல்ல உண்டோ? (கல்)
செல்வமொழிந்திடும் தேகம் அழிந்திடும்;
சேதம் விளைந்திடும்— (கல்)

அனுபவத்திலே தான் பாரேன், ஒருவனுக்குக் கல்விதானே அவசியம். படிப்பில்லாதவன் மிருகத்துக்குச் சமானமாக மதிக்கப் படுகிறான்.

கண்ணுடையோ ரென்போர் கற்றோர்
முகத்திரண்டு புண்ணுடையோர் கல்லாதார்

என்றபடி அவனைக் குருடனென்றே கூறுகிறார்கள். அதனலே கல்வியினுடைய அருமை பெருமைகளை நீ அறியாமல் பேசறீயே, நான் சொல்லறதைக் கேளு.

பணம்: அப்படியா? உன்கூட இருந்தாத்தான் மதிப்பா, பாப்போம். நான் தனியாப் போய் வாழறனு இல்லையா பாரு. நீ எதுக்கெடுத்தாலும் ஏதாவது சொல்லிக்கிட்டேயிருக்கே. இனிமே உன்னேடே ஒரு நிமிஷங்கூட இருக்கமுடியாது. இப்பவே இந்த வீட்டைவிட்டுப் போறேன்.

கல்வி: அம்மா பணம், போகாதே. நான் சொல்றதைக் கேளு. மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்—நில்லு.

பணம்: அட சீ! உன் முகத்திலேயே முழிக்கமாட்டேன்.

(அடுத்த இதழில் முடியும்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

# புது நீலம்

வி. ரா.

## 3

உலகமே புரளுவதுபோல நீலாம்பாளுக்கு இருந்தது. இதயம் சோகத்தால் விம்ம, துக்கத்தையும் அழுகையையும் அடக்கமுடியாதவளாக நேரே அறைக்கு வந்தாள் நீலம். அந் நேரத்திலும் அங்கே தனக்காகக் காத்துக்கிடந்த நீலாம்பரியைக் கண்டதும் அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

புன்னகை தவழும் வதனத்துடன், அழகுக் குவியலாகக் கட்டுக்குலையாமல் நின்றுகொண்டிருந்த நீலாம்பரி, "என் வாழ்த்துக்கள், நீலம். நீ போனால் வெற்றியில்லாமல் இருக்குமா? சுந்தரம் அப்படியே கண்ணீர் விட்டுக் கதறிக் கொண்டே ஓடிப்போயிருப்பானே?" என்றாள்.

"ஆமாம், ஓடினான் நீலா! இது என்னடி கேலி? உன்னுடைய பேச்சைக் கேட்டு, நான் போனதுதான் மிச்சம். அவன் பேசுகிற பேச்சு என்ன? ஆடுகிற ஆட்டம் என்ன? நான் விட்டேனா அவனை! வந்து...வந்து..."

"ஓ, அப்படியா? நல்ல வேலை. அந்தக் காதல் கடிதம் பத்திரமாயிருக்கிறதா? அவன் இன்னமும் வாலாட்டினால் நாம்..." என்று நீலாம்பரி இழுத்த போதுதான், நீலத்துக்கு, நீலாம்பரியின் காதல் கடிதத்தை நடுத்தெருச் சண்டையில் தவறவிட்டுவிட்டது ஞாபகம் வந்தது.

"நீலம், அந்த லெட்டரை நீ அந்தச் சுந்தரத்தின் கையிலேயே கொடுத்து விட்டாயா? நல்ல பெண்! நீ இப்படி அவனோடு சேர்ந்து கொண்டு என்னைக் கெடுத்துவிடுவாயென்று முன்பே நினைத்திருக்க வேணும். நான்—நான்" என்றாள், கோபமும் துக்கமும் அவமானமும் பொங்கக் கலங்கிக்கொண்டே. நீலத்தின் பதிலுக்குக்கூடக் காத்திருக்காமல் புறப்பட்டுவிட்டாள்.

இதைக் கண்ட புதுநீலம் பேசவே நாக்கில்லாமல், அப்படியேசோபாவில் சாய்ந்துவிட்டாள். பேசவோ நினைக்கவோ மனதில் இடமே இல்லை. சிநேகிதியின் அவமானத்தைத் தள்ளினாலும், தன்னுடைய நிலை, அவளைக் குமுற வைத்தது.

## 4

சுந்தரம் ஆனந்தமாகச் சீட்டி அடித்துக் கொண்டே, வேலியோரம் வந்தவன் நந்தியாவட்டைச் செடிகளுக்கு நடுவே புதுநீலம் நிற்பதைக் கண்டதும் திடுக்கிட்டான்.

நீலாம்பாள் தன்னை நிதானப்படுத்திக்கொண்டு, "மிஸ்டர், இன்று சாயங்காலம் உங்களிடம் ஒரு காதல் கடிதம் காட்டினேனே, அதைப் பெரிய மனசு பண்ணி என்னிடம் திருப்பிக்கொடுத்துவிடுகிறீர்களா?" என்று துக்கம் தோய்ந்த குரலில் கேட்டாள்.

"காதல் கடிதமா? இது என்ன வேடிக்கை? முதலில் 'நீங்கள் எழுதினீர்களா' என்று என்னோடு சண்டைக்கு வந்தாய். இப்பொழுது நான் கொடுத்த காதல் கடுதாசியைக் கொடு, என்று தகராறு பண்ணுகிறாய். இது என்ன வேடிக்கையாக அல்லவா இருக்கிறது?"

"நீங்கள் என்ன நேரம் தெரியாமல் விளையாடுகிறீர்கள்? அப்பா தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கிறார். இன்னும் இரண்டு நிமிஷத்தில் வந்துவிடுவார். அதற்குள்..." என்று நீலம் இழுப்பதற்குள், "நீலம், யார் அம்மா அது?" என்ற குரலைக் கேட்டதும், இரண்டுபேரும் நடுங்கிப் போய்விட்டார்கள்.

நீலம் சமாளித்துக்கொண்டு, "இவர் நம் நீலாம்பரிக்குச் சொந்தம்; இவரும் என் வகுப்பிலே படிப்பவர். வழியில்கண்டார்; பேசிக் கொண்டு..." என்று இழுத்தாள்.

"அதுக்காகத் தெரிஞ்சவங்களை வழியோடேயே பேச விடுகிறதா? நீ வாப்பா உள்ளே. அந்த 'ரோமியோ'வைப் பார்த்துப் பயந்து போயிட்டியாக்கும்! கட்டச் சொல்ல றேன்."

"அது யாரு ரோமியோ, நீலு." என்ருன் சுந்தரம் சிரித்துக் கொண்டே.

நீலம் எரிச்சலும் ஆவலும் ததும்ப, "அந்த ரோமியோ எங்க நாய்! இப்படி வாங்க; அப்புறம் அப்பா சந்தேகப்படுவார்" என்று சைகை காட்டினுள்.

நாசுக்காகப் பட்டும் படாமலும் பேசிக்கொண்டிருந்த சுந்தரம் அடிக்கடி நீலத்தின் மேனி அழகை ரசித்த வண்ணம் சன்னமான குரலில், "தெரியாமலா 'மேட்'ஸ் எல்லாரும் புது நீலம், புது நீலம் என்று சொல் கிருர்கள்?" என்ருன் குறும்பாக.

## 5

இரண்டு நீலங்களும் ரிக்ஷாவில் நெருக்கியடித்து உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

"நான் இப்போது என்ன செய்வது என்றே தெரியவில்லையே. அந்தக் கடிதத்தையும் வேறு அவனிடம் கொடுத்து விட்டிருக்கிருய் போலிருக்கிறதே!"

"நான் என்னடி செய்வது? அவன் அன்றைக்கு, யார் உனக்குக் காதல் கடிதம் எழுதுவான் என்று கேலி பண்ணுட்டா, விஷயம் ஒரு வழியா முடிந்திருக்கும். அவனுக்கு எவ்வளவு வாய்த்திமிர்...?" என்ருள் நீலம்.

"நீலம், அப்படிக் கேட்ட அவனை நீ என்ன பண்ணினுய்?"

"என்ன பண்ணுகிறது! எங்க வீட்டுக்குக்கூட நேத்திக்கு வந்து அப்பாவோடு ரொம்ப நாழி பேசிக் கொண்டிருந்தான்..."

"அவ்வளவுதானு! நீ என்னமோ அவனை அப்படிப் பண்ணிப் போடுவேன், இப்படிச் செஞ்சு போடுவேன்னு குதித்தாயே,...ஹி...ஹி!"

"போ...டி! அப்படித்தான் நீயும் சொல்லுவாய். அப்புறம் தெரியும். அந்தக் களையான முகத்தைச் சிவக்கச் சிவக்கப் பார்த்ததுமே, நான்......"

"அப்படியானுல், நீ..." என்று இழுத்தாள் நீலாம்பரி.

"உஸ்! உனக்குக் கூடச் சுந்தரம் உறவு என்று அப்பாவிடம் சொல்லி இருக்கிறேன். அதுதான் அப்பா அவ்வளவு சகஜமாக இருக்கிருர்; பெரும்பாலும் சம்மதம் என்றுதான் வையேன்?"

"போ நீலம், போ! உண்மையாகவேதான், என் அத்தான்டி, அவர்! எனக்கு அவர் ஒன்றும் காதல் கடிதம் எழுதவில்லை. நானுகக் கிறுக்கி, இப்படித் தமாஷ் பண்ணினேன்! நிஜமாகவே காதல் கடிதம் எழுதி இருந்தால், பேசாமல் பிரின்ஸ்பாலிடம் அதைச் சேர்த்திருப்பாய், இல்லையா?" என்று நாவல் பழங்கள் நீரில் உதிருகிற மாதிரி, கலகலவென்று சிரித்தாள் நீலாம்பரி.

"அடி கள்ளி! நீயா இத்தனை ஆட்டம் காட்டினே? உன்னை—வந்து...வந்து..." என்று கிள்ளினுள் புது நீலம்.

"ஐயோ...போதுமடி—நிறுத்திக் கொள்...இல்லையானுல்... அத்தான், நீங்க ஓடிவாங்க" என்று கத்தினுள் லேசாக.

திரும்பினுள் நீலம், நீலாம்பரியைத் தள்ளிக்கொண்டு.

"என்னதான் ஆசையோ நீலா?... இவரைத்தான் வெளுத்துக்கட்டுறேன் என்று ஜம்பம் பேசினுயோ?..." என்ருள் சிரித்துக் கொண்டே. புது நீலத்தின் கணவனுகப் போகும்—பழைய நீலத்தின்—நீலாம்பரியின் அத்தான் சுந்தரம் வந்துகொண்டிருந்தான்.

அன்றையத் தீபாவளித் திருநாளில் பூத்துச் சிரித்துக்கொண்டிருந்த பூவாணங்களுக்கிடையே, புத்துடைகள் அணிந்த அந்தப் புதுக் காதலர் கண்கள் எதேதோ இன்ப ரகசியம் பேசிக்கொண்டிருந்தன! ★




நீ எனைப் பிரிந்த பிறகிருந்தே—இந்த
நெஞ்சம் என்னிலை மறந்ததடி ;
தாயினைப் பிரிந்த சேயினைப்போல்—நெஞ்சு
தன்னிலை மறந்து தவிக்குதடி !

நோக்கும் பொருள்கள் யாவிலுமே—நெஞ்சு
நோக்கித் தவிக்கு(து) உன் எழிலைப்
பார்த்துத் தனிக்க முடியாத—உயிர்ப்
பாசம் வாட்டு(து) என்னுடலை !

சிரித்த சிரிப்பின் ஒலிகேட்கும்—இளஞ்
சிட்டுப் பண்ணொலி முழக்கிவிட்டால்
பறித்த முல்லை மலரெல்லாம்—உன்
பல் வரிசைதனை நினைவாக்கும் !

பூத்த மலரின் புன்னகையில்—உன்
புதுமுக அழகு தோய்ந்திருக்கும் ;
வார்த்திடும் பொன்னொளி வட்டநிலா—அதில்
வந்து தோன்றும் உன்முகந்தான் !

மின்னல் மின்னி ஒளிகாட்டும்—உன்
மெல்லுடல் என்றன் முன்தோன்றும் ;
பொன்னொளித் தாரகை கண்சிமிட்டும்—உன்
புன்னகை கண்முன் முறுவலிக்கும் !

தென்றல் வந்து மேல்தவழும்—என்
தேகம் உன்றன் உயிர்தழுவும்;
நன்று துயில எண்ணிடிலோ—உன்
நினைவென் கனவிலும் தோன்றிவிடும் !

கண்ணெழில் பெற்ற துன்வரவால்—என்
கற்பனை வளர்ந்ததும் உன்னுறவால்
என்னத் தொலையாப் பெருந்துயரம்—நீ
எனைப் பிரிந்த பிறகெல்லாம் !

திருக்குறள் விளக்கம்:

# இல்வாழ்க்கை

கலைவாணி

**திருக்குறள் விளக்கக் கட்டுரைகள் புதிய பகுதி; தமிழ்க் குடும்பங்களுக்குப் பெரிதும் பயன்படுபவை. இப்பகுதிதொடர்ந்து இடம்பெறும்.**

மலர்களிலே சிறந்தது மணரோஜா; மணத்திலே சிறந்தது மல்லிகை. இதுபோல வாழ்வின் வகைகளில் வளம்பெற்றது, இல்வாழ்வு.

எனினும் இத்தகைய சீரும் சிறப்பு முற்றுச் செம்மாந்து நிற்கவேண்டிய இல்லற வாழ்க்கையைக் குறித்து இன்று மக்களிடையே மனம் வெதும்பிய தீர்ப்புகளே மலிந்து கிடப்பதைப் பார்க்கிறோம். அத்துடன் இந்த ஒரே பொருள் குறித்து வெவ்வேறு பருவத்தினர், வெவ்வேறு கருத்துக்களை விளம்புவதையும் காண்கிறோம்.

'இல் வாழ்க்கை என்பது இன்ப மலர்க்கொடியும், கொடி படரும் கொம்பும் நிறைந்த அன்புப் பூங்கா' என்று காதல் நெஞ்சங்களும்; 'அது கள்ளியும், முள்ளும் கலந்த பள்ளத்தாக்கு' என்று குடும்ப வாழ்வில் குலைந்த கணவனும் மனைவியும்; 'அது நோவும், நலிவும் நிறைந்த நச்சு மண்டபம்' என முதியவர்களும் கருதும் வேறுபட்ட எண்ணங்கள் கொண்ட விசித்திர நிலைதான் இன்று நாட்டிலே உலவுகிறது.

ஆனால், செங்கரும்பின் சுவை போன்ற கருத்துக்களை உதிர்க்கும் செந்நாப்போதாரின் சிறந்த குறள் கொடுக்கும் தீர்ப்பு இதுதான்:

'அரும்பும் அன்பு, அது மலர்ந்து காதல், காதல் கனிந்து கடிமணம், மணங்கொடுக்கும் இன்பம், இன்பம் தரும் எழிற் சின்னம், சின்னம் சிந்தும் சிறுமழலைச் சிங்கார மொழிகள், சிறந்த அறம், சீரிய தவநெறி ஆகிய அனைத்தையும் அடக்கியதுதான் இல் வாழ்வு!'

'இறுதி வரையிலும் இன்பமே நிறைந்தது இல்வாழ்வு' என்று குறள் கூற, அதற்கு நேர்மாறான நிலையையே பெரும்பாலான குடும்பங்களிலே நாம் காண்கிறோம். அவ்வாறானால் குறளின் கருத்துத்தான் தவறோ? தவறு குறள்மீதல்ல; ஆனால், வாழும் வகை தெரியாது தவறி, வாடி வதங்கும் நம் வாழ்க்கை முறைகளின்மீதுதான்.

மருந்து கசக்குமே என்று அதை கற்கண்டுக்குழைவில் வைத்துக் குழந்தைகளுக்குக் கொடுக்கிறோம். இரண்டையும் சேர்த்து நன்றாக விழுங்கி விட்டால் கசப்பின் தன்மை அதிகமாகத் தெரியாது. ஆனால், இனிக்கிறதே என்பதற்காகக் கற்கண்டை மட்டும் தனியே முதலில் சுவைத்துவிட்டால், மீதமிருக்கும் கசப்பு மருந்தை மட்டும் உண்பது மிகவும் கடினமாகத்தான் இருக்கும். இது போல்தான் இன்பமும், துன்பமும் கலந்த வாழ்வில் வாழும் நெறி தவறி வாழ்ந்திடுவோர் வாடுகின்ற நிலையும்.

'இல் வாழ்வே நல்வாழ்வு; அது இன்பமளிக்கும் தொல்வாழ்வு' என்று ஏடுகள் கூறும் உண்மையும் உயர் தத்துவமும் மாந்தருக்குப் புதிதோ, புரியாததோ, அல்லது புரிந்துகொள்ள முடியாத புதுமையோ அல்ல. இருப்பினும் ஏடுகளில் அழகு மிகுந்துள்ள இந்த அறிவுரை, நாட்டின் நடைமுறையிலே அனுசரிக்கப்படுகிறதா? 'இல்லறம் நல்லறந்தான்' என்று இன்றைய சமூக நிலைமை தீர்ப்பளிக்குமா என்று நாம் வினவினால், 'இல்வாழ்வு நல்வாழ்வல்ல. அது மாந்தருக்குப் பொல்வாழ்வு, அவர் தம்மைக் கொல் வாழ்வு' என்பவைகளையே நாம் விடைகளாகக் காண முடிகிறது.

என் இந்த இழிவு? என்று எழும்பியது இது? எவ்வாறு நேர்ந்தது இது? இவை குறித்து என்றாவது நாம் சிந்தித்ததுண்டா, அல்லது சிந்திக்க எண்ணியதாவது உண்டா?

இந்த இழிவுகளை ஒழித்து, இல் வாழ்வை இன்பப் பூங்காவாக்க, இயன்ற செயல்களை, வாட்டந் தவிர்த்து வளம் பெருக்கும் வழிகளை அருமைக் குறள்மூலம் நமக்கு அளித் திருக்கிறார் வள்ளுவர். 'இல் வாழ்க்கை என்பதுதான் அறம்; அத்தகைய அறநெறியும், அயலார் பழிக்கும் வகையில்லாது அமைந் திருந்தால் மிகவும் மேலானது' என்று அதன் தன்மைக்கு முதற் குறிப்பு அளிக்கிறார். பின் குடும்பத் தில், குலையாத அன்பும், கூடியுள் ளோரிடம் குன்றாத அறமும் செலுத் துவதே வாழ்வின் தன்மையும், நன் மையும் என வரையறுக்கிறார்.

இல்லறத்தின் தன்மையை எடுத் துரைத்தாகிவிட்டது. பின்னர் எவ் வாறு வாழுவது? 'பழியஞ்சிப் பாத் தூண் உடைத்தாயின்—வாழ்க்கை வழியஞ்சல் எஞ்ஞான்றும் இல்.' பழிக்கும், பாவததிற்கும் மட்டும் பயந்து, பகிர்ந்து உண்டு வாழுங்கள்; உங்கள் வாழ்வில் வருத்தமும் வாட்ட மும் என்றுமே ஏற்படாது என்று வழிதனையும் விளக்குகிறது குறள்.

இறுதியில், இவ்வாறெல்லாம் வாழ்ந்தால், 'வையத்துள் வாழ் வாங்கு வாழ்பவன், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'— வாழ்க்கை நெறிதவறாது வாழ்பவனை வள்ளுவர் மனிதருள் மாணிக்கம் என்றுகூட அல்ல, அதற்கு மேலாக 'அவன் தெய்வம்' என்று வாழ்த்த வும் தயங்கவில்லை.

இந்த வகையில் வாழ்பவனுக்கு இந்த வையகம் என்றுமே ஒரு வறண்ட பாலைவனமாகத் தோன் றாது; கல்லும் முள்ளும் கலந்த காடாகவும் காணப்படாது. வாழ்க்கை, அவன்வரையில் ஓர் அழகிய சோலையாகத் தோற்ற மளிக்கும். அங்கே அன்புத் தென் றல் தவழும்; அவனது இல்லறச்செடி இன்பமலர்களையும், இளங் குழவிக் கனிகளையும் ஈன்றெடுத்து என்றும் குன்றாத எழிலோடு இருக்கும்!

'பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசு' என்ற பெரிய(!) உண்மை, 'காயமே இது பொய்யடா' என்ற கருத்து, 'மண்வேண்டுமாயின் விண்ணை விடு, விண்ணை விரும்பின் மண்ணை மற' என்ற மனப்பான்மை ஆகியவைதான் மண்டிக்கிடந்தன, மற்றையப் பெரும்பாலான நூல் களிலே. ஆனால் இதனை மாற்றி யமைத்து, முள்ளுங் குத்தாது, மல ரையும் பறிக்க வழி வகுப்பதுபோல மணவாழ்வை மாண்புற நடத்து வதன் மூலமே விண்ணின் பேறும் பெறலாம்; பற்றறுத்த துறவியை விட பற்றும் விடாது பண்பும் தவ றாது வாழ்பவனே பாரில் சிறந்த வன் என்று பறைசாற்றிய பெரு மையும் பெரு நாவலர் வள்ளுவருக் குத்தான்.

இல்வாழ்க்கை என்ற உடலில் இதயம் போன்றது கற்பு நெறி. கற்பு பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்குக் கூட அவசியமானது தான்!

கோவலனுக்குக் கொடுமை புரிந்த கொற்றவன் மயங்கி வீழ்ந்து மடிந் தான். 'என் கோமகன் வீழ்ந்தார், குவலயமே என்னையும் விழுங்கு' என்று கதறி உயிர் துறந்த கோப் பெருந்தேவி, 'பொலிவளித்த என் நாதன் மறைந்தார்; இனி ஏன் எனக்குப் பொன்மணியும் மின்னு டையும்' எனத் துறவுபூண்ட நெஞ்சந்தாள் மாதவி, கனி பெற்றும் கணவனைக் களிப்பித்த காரைக்கா லம்மை, காற்சிலம்பை விற்றேனுங் கணவனைக் காக்க நினைத்த கற்பரசி கண்ணகி—இவர்களைப்பற்றிய கதை களைச் சரித்திர ஏடுகள் என்றென் றுமே கூறிக்கொண்டுதான் இருக் கும்! ★

# தீபாவளி ஸ்பெஷல் பம்பர்!

# Rs. 66,000

*Tele: 'GOODLUCK'*
*Phone: 29*

*முழுதும் சரியாக உள்ள 20 பரிசுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்*

எல்லாப் பரிசுகளுக்கும் உத்தரவாதம்

**எல்லாம் சரியாக உள்ள ஒவ்வொன்றுக்கும் ரூ. 3,300. இரண்டு வரிசைகள் சரியாக உள்ள ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,050. முதல் ஒரே ஒரு வரிசை மட்டும் சரியாக உள்ள ஒவ்வொன்றுக்கும் ரூ. 80. முதல் இரண்டு எண்கள் சரியாக உள்ளதற்கு ரூ. 20. பரிசுகள் நிச்சயம் வழங்கப்படுகின்றன.**



8-லிருந்து 23 வரையுள்ள எண்களைத் தந்திருக்கும் கட்டங்களில் மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் அல்லது எல்லாப் பக்கங்களிலும் எப்படிக் கூட்டினாலும் 58 வரவேண்டும். ஒரு எண்ணை ஒரு முறைதான் உபயோகிக்கவேண்டும்.

முடிவு தேதி: **6–11–52.** விடை: **15–11–52**

**பிரவேசக் கட்டணம்:– கூபன் 1-க்கு ரூ. 1. 4 கூப்பன்களுக்கு ரூ. 3. 8 கூப்பன்கொண்ட செட் 1-க்கு ரூ. 5.**

*முந்திய விடை மொத்தம் 58*

| | | | |
|---|---|---|---|
| 13 | 21 | 16 | 8 |
| 7 | 15 | 22 | 14 |
| 20 | 10 | 11 | 17 |
| 18 | 12 | 9 | 19 |

**விதிகள்:** வெள்ளைத் தாளில் விதித்துள்ள பிரவேசக் கட்டணத்துடன் எவ்வளவு கூபன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். கூப்பன்களுடன் M. O. ரசீது, போஸ்டல் ஆர்டர், பாங்க் டிராப்ட் மூலமாகவோ கட்டணத்தைச் செலுத்தலாம். புலந்த்ஷாரிலுள்ள பெரிய பாங்கியில் சீல் செய்திருக்கும் எங்கள் விடைகளுக்குச் சரியாக உள்ளவையே சரியான விடையுள்ளனவாக கொள்ளப்படும். ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதவேண்டும். M. O. கூப்பனில் உங்களது பெயர், விலாசம் வேண்டும். முழுதும் சரியான விடைகளுக்குத் தக்கபடி பரிசுத் தொகை அமையும். ஆனால் உத்தரவாதம் செய்யப்பட்ட பரிசுகள் மாறமாட்டாது. விடை தேவையானால் தபால் தலையுடன் கூடிய விலாசமிட்ட கவர் அனுப்பவேண்டும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானதாகும்.

*கூப்பன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:*

**PHOENIX CORPORATION REGD. (P. M.)**
**BULANDSHAHR, U. P.**



# ஒற்றை ரோஜா

எஸ். ஆறுமுகம்

## எட்டாம் அத்தியாயம்

## புயல்

**பு**யல்!

ஆம்; புயல்!

புயல் என்று மூன்று எழுத்துக்களிலே உச்சரித்து நழுவவிட்டுவிடும் அளவுக்கு அவ்வளவு சாதாரணமானதொரு புயல் அல்ல அது; புயல் என்றதும் நெஞ்சில் ஒருவகைத் திகில் விளிம்பு கட்டிப் படருமே, அதன் எல்லைக்கு எல்லையே இருக்கமாட்டாது; இருக்கவும் முடியாது. அப்படிப்பட்ட புயலும் அல்ல; அதைவிட மிகமிகப் பயங்கரமான, கொடுமையான, இதயமற்ற புயல் அது! ஒட்டிய உள்ளங்களை, இணைசேரவிருந்த இரு மனத்தை வெந்துருகும் உலைக்களமாக்கும் அளவுக்குச் சம்பவங்கள் மூண்டெழும் நிலைக்குக் கொண்டுவந்த இந்தப் பாழும் புயலை வேறு எப்படித்தான் பெயரிட்டு அழைக்கமுடியுமோ?

ராஜேந்திரன் சற்று முன் விளையாடச் சென்ற சமயம், அவன் மனம் எவ்வளவு இன்பமாகத் துள்ளி விளையாடி அமைதி கொண்டிருந்தது! புயலுக்கு முன் அமைதி என்பது இதைத்தானா......? புயல்—அமைதி!— மாறுபட்ட இரு துருவங்கள், ஒன்று சேரத் தழுவும் துருவங்களாக மாறிவிட்ட நிலைபோலத்தான்!

"அண்ணா"

அழைக்கும்போதே ராஜேந்திரனுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டுகிளம்பிவந்தது. இனம் விளங்கமாட்டாத திகிலும், புயலும் அவன் நெஞ்சத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருந்தன. புயலில் சிக்கிய சருகாக அவன் சுழன்று கொண்டிருந்தான்—காடு மேடெல்லாம் சுழற்றி

யடிக்கப்படும் சருகைப்போல அல்ல; நின்ற இடத்தையே மையமாக்கி, நின்ற நிலையையே மறந்துபோய், நின்ற நினைவையும் இழந்தவனுக அவன் சுழன்றுகொண்டிருந்தான். புயல்—அதில் தத்தளிக்கும் சருகு! சருகின் நிலை புயலுக்கு எங்கே தெரியப்போகிறது? ஆனால் புயலைப்பற்றிய முடிவும் சருகுக்கு எங்ஙனம் தெரிந்திருக்க முடியும்? அப்படியென்றால் இந்தப் புயலும் சருகும்... இவ்விரு வெவ்வேறு புள்ளிகளின் நிலை, கதி, முடிவு...!

"அண்ணு"

............

பதில் இல்லை.

படுக்கையில் கிடத்தப்பட்டிருந்த ஆனந்தன், தன் நினைவற்றுப் படுத்துக் கிடந்தான். பக்கத்துத் தெரு டாக்டர் வரவழைக்கப்பட்டார்; மருந்துகள் வந்தன. பணம் கைமாறியது. சிகிச்சை நடந்தது.

"கேஸ் அப்படிப் பிரமாதமானதாக இல்லை; ஏதோ அதிர்ச்சி அடைந்திருக்கிருர். அதிர்ச்சி கொடுக்கும் செய்தி ஏதாகிலும் கேட்டிருக்கவேண்டும். அதுதான் இப்படிப்பட்ட மயக்கத்திற்குக் காரணம். கொஞ்ச நேரத்திற்குள் குணமாகிவிடும்."

டாக்டர் திரும்பினர்.

புயல் வீசிக்கொண்டிருந்தது!

கையெழுத்து மறையும் நேரம். கையால் கன்னத்தை ஏந்தியவாறு மங்களம், அவள் கணவன் அருகே அமர்ந்திருந்தாள். கல்யாணத்திற்கு மதுரைப் பயணத்திற்கான ஏற்பாடுகள் அப்படியே அறை குறையாயின. அவள் கணவனையும் மைத்துனனையும் சிறு குழந்தை போல ஏக்கம் தேங்கிய கண்களால் பார்த்துக்கொண்டிருந்தாள். ராஜேந்திரன் தன் அண்ணனையே தொடுத்த கண் எடுக்காமல் விழித்து நோக்கியவாறு இருந்தான்.

ஆனந்தனின் இமைகள் உருண்டு விலகி நிலைத்தன. திறந்த இமைகளை நீக்கி விழி வெள்ளம் சுழித்தோடியது.

"ராஜா"

தம்பியை அழைத்தவன், வார்த்தைகளை அத்துடன் நிறுத்திவிட்டு, அவனை ஏற இறங்கப் பார்க்கலானான்.

அடுத்த இரண்டு நிமிஷங்கள் அண்ணனும் தம்பியும் கண்ணீர்சோரச் சிலை நிலையில் இருந்தனர்.

"அண்ணு"

"தம்பி, விதி விதி என்று பலர் பேசக் கேட்டிருக்கிறேன். எழுதிய எழுத்துக்களை வாசித்துமிருக்கிறேன். ஆனால் விதி என்ற ஒன்றைமட்டும் நான் நம்பமாட்டேன்; நம்பினதில்லை. இன்று விதியை நம்பும்படி ஆகிவிட்டது. விதி இத்தகைய விபரீதமானதென்பதை இன்றுதான் நான் உணர்கிறேன்—அதுவும் உன் விஷயத்தில், உன் கல்யாண விஷயத்தில்..."

ஏதோ ஒரு எதிர்பாராத அதிர்ச்சிச் சேதியை உள்வைத்துப் பேசும் தன் அண்ணனின் வார்த்தைகள் ராஜேந்திரனுக்கு இடிபோலப் பயம் தந்தன. அதே தருணம் 'அதிர்ச்சி கொடுக்கும் செய்தி ஏதாகிலும் கேட்டிருக்க வேண்டும்' என்ற டாக்டரின் வாய்மொழியையும் நினைவுபடுத்திக் கொண்டான்

அவன். அவனது இதயம் அதிர்ந்தது.

"எதையோ ஒன்றை உள்ளடக்கிப் பூடகமாகப் பேசுகிறீர்களே, என்ன அண்ணா? அதுவும் என் திருமண விஷயத்தில் என்று வேறு இடியை வீசுகிறீர்களே... அண்ணா"

"ராஜா, பூடகமில்லை. விதியின் புன்னகை இது. ஆமாம்; இடி! மின்னாமல் முழங்காமல் இடித்துவிட்ட இடி இது. கல்யாணத்திற்கு நின்ற மல்லிகாவுக்குப் பெரிய அம்மை பூட்டிப் பிழைப்பதே அரிதாகிவிட்டதாம். எல்லாம் கடந்த சில நாட்களுக்குள்..."

இடிவிழுந்த நாகம் என்பதாக உவமை கூறுவது உண்டு. அதன் அதிர்ச்சியைவிட, அச்சத்தைக்காட்டிலும் ராஜேந்திரனுடைய அதிர்ச்சி அதிகரித்தது; அச்சம் வளர்ந்தது; உயிர்க்கூட்டினின்றும் இரத்த வெள்ளம் பூராவும் தளும்பி மூளைக்கு வந்து தேங்கி உறைந்துவிட்டாற் போன்று அவன் மண்டை கனத்து வந்தது; மூளை குழம்பியது; உடல் புல்லரித்தது; அங்கங்கள் நடுங்கின; ஊற்று நீரெனக் கண்ணீர் வெள்ளம் கன்னங்களில் பாதை வகுத்துப் பாய்ந்தோடியது.

இப்படிப்பட்ட இடியை அவன் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்?

புயல் வீசியது; இடி இடித்தது; மின்னல் கீற்றுகள் பளிச்சிட்டன; காற்றும் மழையும் கலந்தடித்தன.

வாசற் கதவுகள் 'படீர் படீ'ரென்று அடித்துக்கொண்டன. கதவுகளைச் சாத்த அங்கு அப்பொழுது யாருக்குமே உணர்வில்லை.

மூன்று உள்ளங்கள் அந்நேரத்தில் வெடித்துக் கொண்டிருந்தன. ஒன்று ராஜேந்திரன்; இரண்டு, ஆனந்தன்; மூன்று, மங்களம்.

அம்மை பூட்டப்பட்ட மல்லிகாவைப்பற்றி எண்ணினான். எண்ணக்கூடத் திராணி ஏற்படவில்லை, ராஜேந்திரனுக்கு.

"அண்ணா, மல்லிகாவை நீங்கள் பார்த்தீர்களா?"

"பார்த்தேன்; அம்மன் ஆசை தீர விளையாடிவிட்டாள். ஊசி குத்தக்கூட இடம் விட்டு வைக்கவில்லை. முழுதும் அம்மை வடுக்கள்தாம்..."

மனமொருமித்த ராஜேந்திரன்—மல்லிகா திருமணத்தை விழாப்போல நடத்திவைக்க மங்களம் எவ்வளவு கனவு கண்






டாள்? ஆனந்தன் எவ்வளவு கனவுகண்டான்? அப்படியென்றால்...!

“அப்படியென்றால் ராஜாவின் கல்யாணம்...” என்றாள் மங்களம்.

“அண்ணி, எதற்கும் நான் போய் எப்படியும் மல்லிகாவைப் பார்த்துத்தான் என் கல்யாணத்தைப்பற்றித் தீர்மானம் செய்யவேண்டும்” என்று தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தான் ராஜேந்திரன்.

ஆனந்தனுக்கும் அவன் மனைவிக்கும் இந்த யோசனை சரி என்றே பட்டது.

அடுத்த நாள் மதுரைக்குப் புறப்பட்டான் ராஜேந்திரன். வழியெல்லாம் மாளாத சிந்தனையில் மீளாமல் தவித்தது அவனது தளர்ந்த நெஞ்சம்.

மல்லிகாவை முதன் முதலாகச் சந்தித்த அந்த நாள்; நட்பு, காதலாக உருமாறிய அந்த நாள்; காதல் கல்யாணத்திற்குக் கொணர்ந்த அந்த நாள்— இப்படி எல்லா நாட்களையும், அந்த நாட்களுக்கெல்லாம் உயிர்ப்பாக நின்ற மல்லிகாவையும் எண்ணினான் அவன். எண்ணமெல்லாம், கனவெல்லாம், மூச்செல்லாம் மல்லிகாவாக அழகுக் கோலமாகக் கோலாகலமாகக் காட்சி தந்த விந்தை நேரங்களையும் எண்ணினான். ஒவ்வொரு விநாடிக்கும், ஒவ்வொரு எண்ணத்துக்கும் அவன் இதயத்தின் பெருமூச்சும், உடலின் ரத்தக் கண்ணீரும் தான் கண்ட பலனாக முடிந்தது. ஒருகால் அதுவேதான் முடிவாக...?

மதுரை வந்தது. ராஜேந்திரன் மதுரைக்கு வந்தான். அவனுக்குச் சிந்திக்கும் உணர்வே அற்றுப் போய்விட்டதோ என்றுகூடச் சந்தேகம் வந்தது; அப்படிக் கனத்திருந்தது தலை. ஆனால், அன்று மல்லிகாவைப் பெண்பார்க்க வந்த அவன் எத்தனை எத்தனை ஆசைக் கனவுக் கோட்டைகளைப் படைத்துவிட்டிருந்தான்! அந்த ஆசைக் கனவுக் கோட்டைகள் என்றென்றும் நிலவி நிற்கும் இன்பக் கோட்டைகளாக அமைய வேண்டுமே! அமையுமா?...

மூன்றும் பேருக்குத் தெரியா வண்ணம் எப்படியோ மல்லிகாவை ராஜேந்திரன் பார்த்தான். பார்த்த அவனுக்குத் தன் கண்களையே நம்பக்கூடவில்லை.

‘மல்லிகாவா இது? அழகுப் பாவையாக, அழகுக் குவியலாக, அழகே உருவாகக் கண்ட என் ஆசைக் கிளியா இது? பார்க்கக்கூடக் கண் கூசுகிறதே.

பெண்ணுக்குப் பெண் இரக்கமிருக்கும் என்பார்களே!...அந்த அம்மனுக்கு மல்லிகா மீது ஏன் தான் இத்தனை வஞ்சனையோ?..... இத்தகைய கோலத்திற்குத்தான் விதி என்று பெயரா? விதி என்று தான் பெயரிட்டு அழைப்பதா? அழைக்க வேண்டுமா? விதி! வாழ்க்கையின் விதியா இது? அல்லது விதியின் விதியா இது? விதியே, உனக்கு நெஞ்சமே கிடையாதா? என் மல்லிகாவை ... என்ன? உரிமை பாராட்டுதலா? அப்படியென்றால் மல்லிகாவை நான்... மறந்துவிட வேண்டியதுதானா... என்ன, மறந்துவிடுவதா ...... என் மல்லிகாவையா?...'



பலவாறாகச் சிந்தித்து மூளையைக் குழப்பிக்கொண்ட ராஜேந்திரன், இரவுடன் இரவாக வீடு வந்தான். திரும்பும்பயணத்தில் உருவாகியிருந்த தன் 'முடிவை' வெளியிட்டதும், ஒருகணம் ஆனந்தனும் மங்களமும் அடித்துவைத்த பொம்மைகளாயினர்.

முடிவு!

ஆரம்பமே முடிவான அந்த முடிவு!

அடுத்த நாள் மதுரைக்குக் கடிதம் பறந்தது. அதை ஆனந்தன் எழுதியிருந்தான். ராஜேந்திரனது மனமாற்றம் காரணமாக மல்லிகாவுடன் நடக்கவிருந்த மணவினைக்கு அவன் இசையவில்லை என்பது அதில் குறிக்கப்பட்டிருந்தது.

நாட்கள் வந்தன; இருந்தன; போயின.

ராஜேந்திரன், பழைய ராஜேந்திரனாக இல்லை. படங்களில் காதலியை இழந்து தவிக்கும் காதலனைச் சித்தரித்துக் காட்டுவார்கள் பாருங்கள், அம்மாதிரி அவன் காணப்பட்டான். உண்ணவில்லை; உறங்கவில்லை. உயிர் தன் போக்கிற்கு உடலுடன் இழைந்திருப்பதைப் போலத்தான் அவன் தோன்றினான். ஆனந்தனும் மங்களமும் அவனைக் கண்டு பயப்பட்டனர்; அழுதனர்.

கலியாணத்திற்கு வந்திருந்த அன்பளிப்புக்கள், ஆசிச்செய்திகள் எல்லாம் மதுரையிலிருந்து திருப்பியனுப்பப்பட்டிருந்தன. ராஜேந்திரன் அனைத்தையும் பார்த்தான்; ஆனால் அவற்றில் குறிப்பாக இரண்டைமட்டுந்தான் படித்தான்.

பூங்குழலியின் சாதாரண வாழ்த்துத் தந்தி ஒன்று.

அடுத்தது, பூமாவின் வாழ்த்துக் கடிதம். அதைப் படித்த

தும் ராஜேந்திரனுக்கு அழுகை பிறிட்டது. என்ன நினைவோடியதோ? அன்று பூமாவும், உடல் நலம் பெற்ற அவள் தந்தையும் அவனைத் தேடி வீடு வந்து போனதும் அப்போதுதான் நினைவில் பட்டுத் தெறித்தது.

இமைகொட்டும் நேரம் ராஜேந்திரன் தன்னை மறந்த லயந்தன்னிலே வீற்றிருந்தான் சோபாவில். அவன் கண்ணோட்டத்தில் ஏனோ அப்பொழுது பூங்குழலியும் பூமாவும் மாறி மாறிச் சுழல்வட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள், மாறாத நினைவாக—மாற்ற இயலாத நினைவாக!

அன்று இரவு ராஜேந்திரனது மேஜையில் ஆனந்தன் பெயருக்கு ஒரு துண்டுக் கடிதம் இருந்தது.

“அண்ணா,

நான் போகிறேன் கால் போனதிக்கிலே. மல்லிகாவை மறந்துவிட்டேன்; மறக்க முடியவில்லை. நான் புறப்பட்டுவிட்டேன் கால் போன திசையிலே.

ராஜேந்திரன்”

புயல் இன்னமும் வீசிக்கொண்டுதான் இருந்தது. அதன் சுழல்வீச்சில் அங்கு கிடந்த ஏதோ ஒரு புத்தகத்தின் ஏடு காற்றில் பறந்தது. அதில் கீழ்கண்ட வார்த்தைகள் புன்னகை புரிந்தன.

‘காதல் பிறப்பதென்னவோ பூந்தென்றலில்தான்; ஆனால் அதனை அடையும் வழியோ புயலும் சூறாவளியும் வீசிச் சுழலும் பயங்கரப் பாதை; எரிமலையும் பூகம்பமும் வெடித்தெழும் பயங்கரப் பூமி! அந்தப் புயல், சூறாவளி, பூகம்பம், எரிமலை எல்லாம் என்றோ ஒருநாள் அமைதி காணுகையில், தென்றல் படருகையில், அன்று பிறந்த காதல் கடைசியில் கனவாகப் போய் விடுவதுதான் மிகமிகப் பயங்கரமானது.’

(தொடரும்)

## உயிருள்ள தமிழ்

உயிருள்ள தமிழ் எது? அதை எங்கே காணலாம்?

பண்டைத் தமிழ் இலக்கியம் உயிருள்ள தமிழ் ஆகாது. அதற்கு உயிர் தந்து உலவ வைப்பவர் தமிழ் மாணவர், தமிழ்ப் புலவர், தமிழாசிரியர்கள்!

வருங்காலத் தமிழ் இலக்கியம் உயிருள்ள தமிழாயிருக்கவேண்டும். ஆனால் பழந் தமிழின் மொழிப் பண்பும் இலக்கியப் பண்பும், மொழி மரபும், மாறுபடும் உடல்களாகிய தலைமுறைதோறும் தொடர்ந்து நின்று வளரும் உயிராக உலவவிடப்பட வேண்டும்.

உயிருள்ள தமிழ், பத்திரிகைத் தமிழன்று. அதில் உலக அறிவு ஊடாடலாம்; ஆனால் அது தமிழன் அறிவாகவேண்டும்.

உயிருள்ள தமிழ் பழமை எழுத்தாளர் தமிழன்று; அதை இயங்க வைக்குமுன் தூக்கி நிறுத்த ஆள் வேண்டும். அதே சமயம் புதுமை எழுத்தாளர் தமிழ் உயிருள்ள தமிழன்று. அதில் உயிர் உண்டு; ஆனால் உயிருக்குப் பற்றுக்கோடான உடலில்லாமல், தமிழ் மரபும் இலக்கிய இலக்கண மரபும் இல்லாமல், அது ஆவியாய் அலறித் துடிக்கிறது.

உயிருள்ள தமிழுக்கு உயிர் பிறக்குமா?

இலக்கிய விமரிசனம்

# எச். ஜி. வெல்ஸ்

கா. அப்பாத்துரை

**இளமையும் கல்வியும்.**

புகழும் தகுதியும் எவருக்கும், எந்த வகுப்புக்கும் தனி உரிமையல்ல. சூழல் காரணமாகவும் தன் முயற்சி காரணமாகவும் சிலர் அத்தகுதியைப் பெறுகின்றனர். பலர் பெறாமலே போகின்றனர். ஆங்கில மொழியாட்சியின் எல்லையைக்கூடக் கடந்து உலகக் கலைஞனாக விளங்கிய எச். ஜி. வெல்ஸ், இதைத் தம் தலைசிறந்த புனைகதைகளில் சித்திரித்துக் காட்டியிருக்கிறார். ஆனால் அவர் வாழ்வே அதற்குத் தக்க சான்றாக அமைந்துள்ளது.

எச். ஜி. வெல்ஸின் முழுப் பெயர் ஹெர்பர்ட் ஜார்ஜ் வெல்ஸ் என்பது. அவர் தந்தை ஒரு கடை வியாபாரி. வியாபாரத்தில் அவர் ஆதாயம் எதுவும் காணவில்லை. ஆனாலும் அவர் தம் மதிப்பை விடவில்லை. மதிப்புக்காகக் கடையைத் தொடர்ந்து நடத்தினார் அவர். தம் மனைவியைக் கடையில் வைத்துவிட்டு, மரப்பந்து (கிரிக்கட்) ஆட்டத்தின் மூலம் தமக்குப் பேரும் மதிப்பும் தேடினார். ஆனால் மனைவியால் கடையின் உதவியால் கூட வாழ்க்கை நடத்த முடியவில்லை. அவர் ஒரு பெரிய மனிதர் வீட்டில் வேலை பார்ப்பதன்மூலம் சிறிது பணமும் மதிப்பும் பெற்றார்.

இத்தகைய தாய் தந்தையரின் உரிமைச் செல்வமாகவே எச். ஜி. வெல்ஸ் 1866-ல் பிராம்லி என்ற சிற்றூரில் பிறந்தார். தொடக்கப் பள்ளிகள் இரண்டில் அவர் ஒரு சில நாட்களே படித்தார். படிப்பில் அவரும் கருத்துச் செலுத்தவில்லை; தாய் தந்தையரும் அதுபற்றிச் சட்டைசெய்ததாகத் தெரியவில்லை. சில காலம் அவர் தாய் வேலைசெய்யும் பெரிய வீட்டில் வேலைக்காரர்கள், ஏவலர்களுடன் ஊடாடித் திரிந்தார். ஏழை நடுத்தர வகுப்பினர் வாழ்க்கைப் போக்குகளையும் மன நிலைகளையும் பிற்காலத்தில் அவர் நன்கு சித்திரிப்பதற்கு இச் சோம்பேறி வாழ்வுக்காலமே அனுபவப் பயிற்சியாயிருந்தது.

**வறுமைச் சூழல்**

பன்னிரண்டாவது வயதில் தாய் தந்தையர் வாழ்க்கைக்கு உதவியாக அவர் தொழில் செய்ய அனுப்பப்பட்டார். முதல் முதல் வேலை பார்த்த கடையில் அவர் கணக்குப் புத்தகத்தின் கீழ் 'கல்லிவர் பயணங்கள்', டாம் பெயனின் 'மனித உரிமைகள்' ஆகியவற்றை வைத்துக்கொண்டு, ஒளித்துப் படித்தார். பள்ளியில் படிப்பதற்கென்றே அனுப்பப்பட்ட காலத்தில் ஏற்படாத அறிவார்வம் அவருக்கு இப்போது ஏற்பட்டது விசித்திரமே. ஆனால் இத்தகைய வேலையாளை எந்தக் கடைக்காரன் வைத்துக்கொள்ள முடியும்? அவர் அதைவிட்டு விலகும்போது எஜமானும் மகிழ்ந்தார்; அவரும் மகிழ்ந்தார்.

குடும்பநிலை காரணமாக அவர் தம் அறிவார்வத்தைஅடக்கிக்கொண்டே மருந்துக்கடை, ஜவுளிக்கடை எனப் பலவிடங்களில் வேலை பார்த்தார். படிப்பதும் எழுதுவதும் அவருக்கு உள்ளார்ந்த ஒரு 'நோயா'யிருந்தன. ஒருதடவை தன் வாழ்க்கைமுறை மீதுள்ள வெறுப்பால் தொழில் நிலையத்தையே தீயிட்டு எரித்துவிடலாமா என்றுகூட நினைத்ததாகப் பிற்காலத்தில் கூறினார்.

**மீண்டும் கல்வித் துறை**

நல்லகாலமாக விரைவில் அவர் தம் விருப்பத்துக்குரிய வாய்ப்புப்

# பொன்னி

வருட சந்தா ரூ. 6—0—0

ஆறுமாத சந்தா ரூ. 3—0—0

தனிப்பிரதிக்கு 0—4—9 தபால் தலை அனுப்பவேண்டும்.

16, சேணியம்மன் கோவில் தெரு
தண்டையார்ப்பேட்டை
சென்னை — 21


பெற்றார். அவர் மிட்ஹர்ஸ்ட் இலக்கணப் பள்ளியில் சேர்ந்து மும்முரமாகக் கல்வித் தேர்ச்சி பெற்று அங்கேயே ஆசிரியராய், தம் நிலையை உயர்த்திக்கொண்டார். இதுமுதல் தம திறமையால் உபகாரச் சம்பளம் பெற்றே தென்கென்ஸிங்டனிலுள்ள மன்னர் அறிவியல் கல்லூரியில் உயர்தரக் கல்வி பயின்றார். 1888-ல் அவர் நன் மதிப்புடன் பி. எஸ். ஸி. யில் முதல் வகுப்புரிமையுடன் தேர்ச்சி பெற்றார்.

கல்லூரி ஆசிரியராகவும், பல்கலைக்கழக மாணவர்களுக்குத்தேர்வாசிரியராகவும் இருந்துகொண்டே கல்வித் துறைக்கான ஒன்றிரண்டு அறிவியல் பாடப் புத்தகங்களில் அவர் கைகொடுத்தார். கல்விமுறை முன்னேற்றம் பற்றி அவர் அக்கறை எடுத்துக்கொள்ள இது தூண்டுதலாயிருந்தது.

இச் சமயம் வெல்ஸ் ஒவ்வொரு கணத்தின் ஒவ்வொரு நொடியையும் கொடாக்கண்டன் போல விடாமல் உழைப்பில் ஈடுபடுத்தி, அடிக்கடி உடல்நலத்தைக் கெடுத்துக்கொண்டார். ஆனால் தளரா உள்ளமும் சலியா ஊக்கமும் வெல்ஸின் தனிப் பண்புகளாயிருந்தன. அவர் தம் படிப்பு, மாணவர்க்கான போதனை ஆகியவை தவிர, கல்லூரியின் பத்திரிகையின் பொறுப்பும் எற்று நடத்தினார்.

பால்மால் செஜட்டிற்கு அவர் நகைச்சுவை வாய்ந்த கட்டுரைகள் எழுதி இலக்கிய உலகில் கருத்துச் செலுத்தினார். கல்லூரி இதழிலும் மற்ற இதழ்களிலும் அவர் கட்டுரைகள் அவர் அறிவியல் துறை ஆர்வத்தையும், மக்கள் முன்னேற்றத்தில் அவர் காட்டும் துடிப்பையும் புலப்படுத்தின. இக்கட்டுரைகளைத் தொகுத்து 1895 ல் 'மாமனுடன் நடத்திய உரையாடல்கள்' என்ற பெயருடன் அவர் வெளியிட்டார். இது அந்நாளைய இள எழுத்தாளரிடையே அவருக்கு ஒரு நல்விடந் தந்தது.

ஆனால் அதே ஆண்டில் அவர் தம் முதல் புனைகதையை வெளியிட்டார். அது 'காலப்பொறி' என்பது. கிட்டத் தட்ட வெல்ஸின் முதல் முயற்சியாகிய இக் கதை அவர் முதன்மையான நூல்களிலும் ஒன்று எனத் தக்க சிறப்புடையது. அது அவருக்கு உடனடியாகப் புகழ் தந்ததில் வியப்பில்லை. அது நல்ல கதைமட்டுமல்ல. இதுவரை யாரும் பயன் படுத்தாத ஒரு புதுவகைக் கதைமுறையையும் அது வெல்ஸின் புகழுக்குஉரிமையாக்கிற்று. அறிவியலறிவையும், அறிவியலின் வருங்கால வளர்ச்சிபற்றிய கற்பனையையும் சேர்த்துப் புனைகதைகளாக்குவது வெல்ஸின் தனித் திறங்களுள் ஒன்று. இதனைத் திறம்படக் காட்டும் வெல்ஸின் எடுகள்பல. அதில் 'காலப்பொறி' தலைசிறந்த ஒன்றாக அமைந்தது.

(மேலும் கட்டுரைகள் வரும்)

**சிறுகதைத் தொடர்ச் சித்திரம்**

# தாம்பத்தியம்

எழுதியவர் : **'எல்லார்வி'**

**அவர்களது தாம்பத்தியத்திலே எதிர்பாராத சலனமொன்று நிகழ்ந்துவிட்டது; என்றோ ஒரு நாள் எதிர்பாராத அமைதியும் ஏற்பட்டது, அந்தத் தம்பதிகளிடையே. அதில்தான் அமுதகீதம் பண்பாடுகின்றது. சுவைமிகுந்த குடும்பக் கதை! —**

'**போ**ஸ்ட்...சுந்தரராஜன்!'... அடுப்பங்கரையில் ஏதோ அலுவலாக இருந்த கருணா வேகமாக வாசற்புறம் வந்தாள். தபாற்காரன் போட்டுவிட்டுப் போன கடிதம் நடையிலே கிடந்தது. கருணா அதைக் கையில் எடுத்துப் பார்த்தாள். ஸ்ரீரங்கத்திலிருந்து அது வந்திருக்கிறது என்பது முத்திரையிலிருந்து தெரிந்தது. 'மன்னி போட்டிருக்கிறாள். என்ன எழுதியிருக்கிறாளோ!' என்று எண்ணிக் கொண்டாள்.

'...உம்! என்னத்தை எழுதியிருக்கப் போகிறாள்? 'அப்பா அம்மா எல்லாருக்கும் இன்னும் ஆசை தணியவில்லை; இன்னும் ஒரு மாதம் இருந்துவிட்டு வருகிறேன்' என்று எழுதியிருப்பாள். இங்கே கணவன் வா, வா என்று வற்புறுத்த, அவளுக்கென்ன? இங்கேயும் பட்டுக்குட்டி, அங்கேயும் முத்துக்குட்டி. இல்லாவிட்டால் என்னைப்போலேயா, யாருக்கும் பிடிக்காத இடறு கட்டை போல!......'

அவளிடமிருந்து ஒரு நீண்ட பெரு மூச்சு வெளி வந்தது, உள்ளக் குமுறல் கண்ணிலே நீரை வருவித்தது. முன்தானையால் கண்ணைத் துடைத்துக்கொண்டாள்.

'...உம். ஊர் உலகத்தாரைப் பார்த்து இப்படியெல்லாம் எண்ணுவதுகூடப் பாவம். நான் செய்த வினைக்கு யார் பிணைப் படுவார்கள்? கொடுத்துவைத்த மகாராஜிகள் சந்தோஷமாக, உல்லாசமாக வாழ்கிறார்கள். வாழட்டும். என் தலைவிதி என்னோடு இருக்கட்டும்....'

வேகமாக ஓடிவந்த குதிரை வண்டி எதிர்வீட்டு வாசல் முன் 'டக்' கென்று நின்றது. எல்லோரும் வெளியே வந்தார்கள். வண்டியிலிருந்து நடுத்தர வயதுடைய ஒருவர் இறங்கினார். வராந்தாவிலே சிறுவர் இருவர் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் வண்டியிலிருந்து இறங்கினவரைக் கண்டதும், "அப்பா!" என்று கூவியபடி தாவிக்கொண்டு ஓடினான்.

அவரும் சிரித்த முகத்துடன் "கண்ணு!..." என்று ஆர்வமுடன் அவனை வாரி எடுத்து அணைத்துக் கொண்டு முத்தங் கொடுத்தார். மற்றொரு பையன் இந்தக் காட்சியைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டே நின்றிருந்தான். அவன் கண்களில் வியப்பு, ஏக்கம், துயரம் முதலிய உணர்ச்சிகள் பிரதிபலித்தன. அதற்கேற்பத் தகப்பனாரிடம் ஏறிக்கொண்ட சிறுவன் மற்றவனை அதிகக் கர்வத்துடன் உதாசீனமாக ஏறிட்டுப்பார்த்தான். அதோடு நில்லாமல், "டேய்! நீ உங்க வீட்டுக்குப் போடா. எங்கப்பா வந்துவிட்டார். எனக்கு எல்லாம் வாங்கி வந்திருப்பார். நான் இனிமே உன்னோடே விளையாட வர முடியாது, போ" என்றான். அந்தச் சிறுவன் ஏமாற்றத்துடன் தலைகவிழ்ந்தான். அவன் அப்பா அவனுக்கு வாங்கிவந்திருக்கிற எல்லாவற்றையும் பார்க்கவேண்டும் என்று அவனுக்கும் ஆசை. அதனால் சட்டென்று போய்விட மனமின்றி அங்கேயே நின்றிருந்தான்.



"டேய்! போ என்றால் ஏனடா நிற்கிறாய்?..."

இதற்குள் வண்டிக்காரன் சாமான்களை இறக்கி உள்ளே கொண்டுபோய் வைத்துவிட்டானாகையால், வந்தவர் அவனுக்கு வண்டிவாடகையைக் கொடுத்துவிட்டு மகனுடன் உள்ளே சென்றார். வராந்தாவிலே நின்ற சிறுவனுக்கு அழுகை குமுறிக்கொண்டு வந்தது. கண்ணைக் கசக்கிக்கொண்டே அடிமேல் அடிவைத்து நடந்து எதிர் வீட்டை நோக்கிச் சென்றான்.

இத்தனை காட்சிகளையும் கருணாவும் கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டேதான்

இருந்தாள். எனவே சிறுவனை விட அவள் மனம் அதிகத் துயரங்கொண்டது. வந்த அழுகையைப் பாடுபட்டு அடக்கிக் கொண்டாள். வாசற்குறடு ஏறி வந்த பாலகன் நடையிலே தாயைக் கண்டதும் 'ஓ'வென்று அழ ஆரம்பித்துவிட்டான். 'ஏன், என்ன' என்றெல்லாம் கேட்கவேண்டிய அவசியமே இல்லாததால், மகனைச் சட்டென்று தூக்கித் தோளிலே சாய்த்துக் கொண்டாள் கருணை.

வாசற்கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே சென்றாள். 'அழாதேடா கண்ணு, அழாதே' என்று மக சமாதானம் செய்ய முயன்றாள். அவனுக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது.

"அம்மா, எதிர் வீட்டுக் கண்ணனோடே அப்பா ஊரிலிருந்து வந்திருக்கார் அம்மா. அவனுக்கு எல்லாம் வாங்கிவந்திருக்கார் அம்மா. அவனுக்கு எத்தனை கர்வம் தெரியுமா? என்னைப் போடா, போடா என்று விரட்டிவிட்டான் அம்மா."

"போனால் போகிறான் போ. அவன் அசடு."

'அது சரி அம்மா. எனக்கும் ஏன் அம்மா அதுமாதிரி அப்பா எல்லாம் வாங்கிக் கொண்டு வரலை?"

"வருவார், வருவார்"

"போ அம்மா. வருவார், வருவார் என்று சொல்கிறாயே தவிர வரவே இல்லையே!..."

"சுவாமியை வேண்டிக் கொள். வருவார்"

"தினமும் வேண்டிக் கொண்டும் வரவே இல்லையே"

"பாரேன், ஒரு நாள் திடீரென்று வந்து சேருவார். அது இருக்கட்டும். உன் 'புஷ்கோட்' எங்கே காணோம்?" என்று



ஏதோ கேட்டுப்பேச்சை மாற்றி னாள், கருணா. சிறுவனும் துயரை மறந்து வேறு வழிகளில் புத்தி மாறினான். கருணா தன் அலுவல்களில் ஈடுபட்டாள். ஆனால் சிறுவனைப்போல் அவள் உள்ளம் உடனடியாக நிலைமையை அறவே மறந்துவிடவில்லை. திரும்பத் திரும்ப அவள் புத்தி ஒரே இடத்தைச் சுற்றித்தான் வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

★

'கருணாவைப் போன்ற அழகுடைய பெண்ணைக் காண்பது அரிது,'— 'கருணாவைப்போல் குணவதியான பெண்கள் அபூர்வம்,'—'கருணா நல்ல புத்திசாலி,'—என்று இப்படி எல்லோரும் அவளைப் புகழ்வார்களே தவிர, அவளை அறிந்து ஒருவராவது அவளைப் பற்றிக் குறை கூறினது கிடையாது.

அவளுக்கு வாய்த்த கணவனோ சகல அம்சங்களிலும் அவளுக்கு ஏற்றவன். இருதரப்பிலும் பொருளாதார நிலைமையிலும் ஒரு குறைவும் இல்லை. அவன் அவள் மீது உயிரை வைத்திருந்தான். அவளுக்கு அவன் மீது காற்றுக்கூடச் சற்றுப் பலமாக வீசப் பொறுக்காது. அவர்களின் அன்பின் அறிகுறியாக, காலத்தில் பிறந்தான் கல்யாணம். அவர்கள் வாழ்க்கைத் தேர் வெகு உல்லாசமாக ராஜவீதியில் ஓடிக்கொண்டிருந்தது.

அப்படிப்பட்ட அந்நியோந்நிய தம்பதிகளின் வாழ்க்கையிலே எங்கிருந்தோ திடீரென்று வந்து விழுந்தது ஒரு முட்டுக்கட்டை.

காரணம், மிகமிகச் சாமானியமானதுதான். இருவரில் ஒருவர் விட்டுக் கொடுத்திருந்தால் அவர்கள் தாம்பத்தியம் இன்று இந்நிலையை எட்டி இராது. இருவரும் விட்டுக் கொடுக்கவில்லை. அதன் விளைவு?

வாழ்க்கை நரகமயம்!

வேணு, வாசுதேவ்னின் ஆப்த நண்பன். சமீப காலத்திலேதான் நட்பு ஆரம்பமாயிற்று என்றாலும், வெகு சீக்கிரத்தில் நன்கு கனிந்து, குடும்ப யோக க்ஷேமத்தில் கஷ்டம் சுகம், லாப நஷ்டம் ஆகிய வற்றில் ஒருவருக்கொருவர் பகிர்ந்து அநுபவிக்கக்கூடிய நிலையை எட்டி விட்டனர். வாசு பரம உத்தமன். உத்தமர்களிடம் மட்டுமேதான் நட்பு உடையவன். ஒருவரிடம் நட்புக் கொண்டுவிட்டால் அவர்களிடம் அபார நம்பிக்கை கொண்டு விடும் சுபாவம் உடையவன். அதன் பலன்களைப் பற்றிச் சிந்திக்கவே மாட்டான்.

வாசுவுக்கும் வேணுவுக்கும் உள்ள நட்பின் தன்மையைக் கருணா நன்கு அறிந்தே இருந்தாள். இருப்பினும் அவள் வேணுவிடம் மிக்க மரியாதையோடுதான் எட்ட இருந்து அளவோடு உறவாடி வந்தாள். அதைக் கெடுத்துக் குட்டிச்சுவ்ராக்கினவன் வாசுதான். "இது என்ன கட்டுப்பெட்டித்தனம் வேண்டிக் கிடக்கிறது!" என்று இடித்து இடித்துக் கூறி அவள் வாயைப் பெருக்கி அவளை வேணுவோடு வெகு சரளமாகப் பேசவைத்துச் சிரிப்பு,விளையாட்டுப் பேச்சு முதலியவைகளில் கலந்துகொள்ளச் செய்தான்.

கருணா மிகவும் தயங்கினாள். மறுத்துப் பின்வாங்கினாள். அதைப் பெருங் குறையாகக் கருதிய வாசு அவளைக் கடிந்து பிராணனை வாங்கினான். தலைவிதியே என்று கணவனின் விருப்பத்திற்கு இணங்கினாள் மனைவி.

'நீண்ட கை நில்லாது' என்ற மொழி வீண்போவதில்லை. வேணு ஒரு தமாஷ் பேர்வழி. வேடிக்கையாகப் பேசி எல்லோரையும் சிரிக்க வைப்பதில் சமர்த்தன். அசடுபோல நடித்து அனைவரையும் சிரிக்க வைப்பதில் தேர்ந்தவன். அவன் செயலைக் கண்டு கருணா சிரித்தால், அதைக் கண்டு வேணு, வாசு இருவரும் பூரித்துப் போவார்கள். காலப்போக்கிலே வேணுவும் கருணாவும் வெகு சரளமாக, வேடிக்கையாகப் பேசிக்கொள்வதும், சிரித்துக் கொள்வதும் வெகு சகஜமாகி விட்டது. அந்தக் குரல் ஏற்பட்ட பிறகுதான் வாசுவின் உள்ளத்திலே குறை நீங்கி நிம்மதி ஏற்பட்டாற்போல் இருந்தது.

வாசு இருக்கிற சமயம், இல்லாத சமயம், எப்பொழுது வேண்டுமானாலும் வேணு, வாசு வீட்டுக்கு வருவான். முக்கியமான காரியம், வெறும்பொழுது போக்கு என்ற பேதமின்றிக் கருணாவுடன் மணிக் கணக்கில் பேசிக்கொண்டிருந்து விட்டுச் செல்வான். அவன் வந்து போனதையும் பேசிக் கொண்டிருந்த விவரத்தையும் கருணா வாசுவுக்குச் சொல்வாள்; வேணுவும் சொல்வான். வாசு அவற்றை யெல்லாம் வெகு சகஜமாகப் பாவிப்பான். வீட்டிலே எது செய்தாலும், 'வேணுவுக்கு எடுத்து வை' என்று வாசு சொல்வான். 'வைத்திருக்கிறேன்' என்று கருணாவிடமிருந்து பதில் வரும்.

இப்படி அந்தக் குடும்பத்திலே தவிர்க்கமுடியாத நபராக ஆகிவிட்டான் வேணு. காலம் ஓடிக்கொண்டிருந்தது.

எதற்கும் ஓர் எல்லை உண்டு. இதை வெகு சீக்கிரத்தில் மேற்குறித்த மூவரும் அறியும் சந்தர்ப்பம் வாய்த்தது. அதன் பலன்....

ஒரு நாள் வாசுவின் வீட்டிலே வாசு, கருணா, வேணு இவர்களோடு இன்னும் இரண்டு மூன்றுபேரும் உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். பேச்சின் நடுவே எங்கோ அண்மையில் நடந்த துக்ககரமான ஒரு செய்தி, வந்து புகுந்தது. அதைப் பற்றி வாசு உணர்ச்சி பொங்கத் தன்னை மறந்து பேசிக்கொண்டிருந்தான். எல்லோரும் மிக்க கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தனர்.

பேசிக்கொண்டே இருந்த வாசு திடீரென்று அசப்பிலே கருணாவின் பக்கம் திரும்பினான். அவள் வேணுவைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள். வாசு சட்டென்று வேணுவின் பக்கம் திரும்பினான். அவனும் கருணாவைப்பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான். நல்லவேளையாக இதை யாரும் கவனிக்கவில்லை. வாசு கவனிப்பதைச் சிறிது நேரத்திற்குப் பிறகே உணர்ந்த வேணுவும் கருணாவும் அவன் முகபாவத்தைக் கண்டு

சட்டென்று சிரிப்பை அடக்கிக் கொண்டனர். வெவ்வேறு திசைகளிலே முகத்தைத் திருப்பிக் கொண்டனர்.

வாசுவுக்குப் பேச்சு மேலே ஓடவில்லை. எனினும் சமாளித்துக் கொண்டு ஒருவாறு பேச்சை முடித்தான். பிறகு திடீரென்று எதையோ நினைவு கூர்ந்தவன் போல் கைக் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, "நான் கொஞ்சம் அவசரமாக வெளியே போய் வரவேண்டும்" என்று சொல்லிக் கொண்டே எழுந்தான். மற்றவர்களும் எழுந்தனர். கூட்டம் கலைந்தது.

"திடீரென்று எங்கே வாசு?" என்றான் வேணு. வாசு ஒன்றும் பதில் சொல்லவில்லை. தலையைக் கூட வாரிக் கொள்ளாமல் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு கிளம்பினான். "காபி சாப்பிடாமல் போகிறீர்களே!" என்றாள் கருணா. அதற்கும் வாசு பதில் சொல்லவில்லை. வேகமாகக் கிளம்பி வெளியே சென்று விட்டான்.

இரவு ஒன்பது மணிக்கு வீடு திரும்பிய வாசு எப்போதும் போல சகஜமாகவே இருந்து வந்தான். மாலையில் நடைபெற்ற விஷயத்தை அறவே மறந்தவன்போன்றிருந்தான். கருணாவோ அடியோடு அதை மறந்தே போனாள். அவளுக்கு அந்த நினைவே இல்லை. காலம் எப்போதும்போல் ஓடிக் கொண்டிருந்தது.

கனிந்துகொண்டிருந்த தீ ஒரு வாரத்திற்குப் பின் ஒரு நாள் குபீரென்று ஜ்வாலை விட்டு எரியத்தொடங்கிற்று. பேச்சுவாக்கிலே எக்கச் சக்கமான ஒரு சந்தர்ப்பம் சிக்கிக்கொள்ளவே, "சரிதான்; அன்று நீயும் வேணுவும் கள்ளத்தனமாகச் சிரித்தது போலவாக்கும்!" என்றான் வாசு. "என்ன, என்ன?" என்று திகைத்தாள் கருணா. அவள் அப்படித் திகைத்துக் கேட்டது தான் அதிக ஆத்திரம் வந்தது வாசுவுக்கு. "அடடா! என்ன சாகசம்!" என்று பல்லைக் கடித்தான். அப்பொழுதும் கருணா பேந்தப் பேந்த விழித்தாள்.

அவன் நேரிடையாகக் கேள்வி கேட்கத் தொடங்கினான். கருணா அன்றையச் சம்பவத்தையே அடியோடு மறந்துவிட்டிருந்ததனால், ஒன்றுந் தோன்றாமல் தவித்தாள். "துக்ககரமான ஒரு விஷயத்தைப்பற்றி நான் சொல்லிக் கொண்டிருக்கையில்' மற்றவர்கள் அதைக் கவனத்தோடு கேட்டுக்கொண்டிருக்கையில், உனக்கும் அவனுக்கும் மட்டும் என்னடி கள்ளச் சிரிப்பு?" என்று கர்ஜித்தான் வாசு. அவனுடைய விவரிப்பில் நாள், நேரம், சந்தர்ப்பம், சிரித்தது ஆகிய அனைத்தும் அவளுக்கு நினைவு வந்தன. ஆனால் சிரித்தது எதற்காக என்பது மட்டும் நினைவுக்கு வரவில்லை. முதலில் சிரித்ததே நினைவில்லை என்று மறுத்தவள், பிறகு, "சிரித்தது உண்மை தான்; எதற்காக என்று நினைவில்லை" என்றதும் வாசுவின் ஆத்திரம் பன்மடங்காகியது. காரசாரமான அந்தச் சந்தர்ப்பத்திலே அசம்பாவிதமாக யாரோ வந்து சேர்ந்ததும் காரியம் அத்துடன் நின்றுவிட்டது.

வாசு அந்த அளவில் நில்லாது வேணுவிடமும், அவன் சந்தேகங்கொள்ளாத முறையில், கருணுவிடம் கேட்ட கேள்வியையே மிக நாசூக்காகக் கேட்டான். அவனும் கருணுவைப்போலவே முதலில் சம்பவமே நினைவில்லை என்ருன்; பிறகு சிரித்தது எதற்காக என்று நினைவில்லை என்ருன். சம்பந்தப்பட்ட இருவருடைய ஒற்றுமையான வாக்குமூலங்களும் வாசுவின் உள்ளத்தில் விழுந்த சந்தேக வித்தை உரமிட்டு நீர் வார்த்துப் பயிராக்கிவிட்டன. ஆயினும் பாடுபட்டு மனதை அடக்கிக் கொண்டான்.

அதன் பிறகும் வேணு, வாசுவின் வீட்டுக்கு வழக்கம்போல் வந்து போய்க்கொண்டு தான் இருந்தான். வழக்கம் போலக் கருணுவிடம் கலகலப்பாக நடந்துகொண்டுதான் வந்தான். ஆனல் கருணுமட்டும் கணவனின் விபரீதப் போக்கை உணர்ந்து மிகவும் ஜாக்கிரதையாக, அளவோடு பழகி வந்தாள். என்ருலும் குற்றங் காணத் துடிக்கும் வாசுவின் மனக் கண்கள் மேலும் மேலும் அவர்கள் போக்கிலே பலபல குற்றங்களைக் கற்பித்துக் கொண்டேதான் போயின.

மீண்டும் முன்போல ஒரு சந்தர்ப்பம். வாசு கருணுவைத் தாக்கினன். கருணு கூடியவரையில் நிதானத்தை இழக்காமல், தான் நிரபராதி என்றே வாதாடி வந்தாள். வாசு அவள் வாதத்திற்குச் செவி சாய்க்காமல் நாக்கில் நரம்பின்றி அவளை ஏசிப் பேசினன்.

சிறுவயது முதலே அளவு கடந்த ரோசத்தை அணிகலனகக் கொண்டு வளர்ந்த கருணுவின் பொறுமை சிதறிவிட்டது. எல்லைக் கோட்டை வாசு தாண்டினதும் அவள் எதிர்த்து நியாயத்தோடு வாதாடினள். அவள் வாதத்தில் உள்ள நியாயம் அவன் மனதில் இடம் பெறவில்லை. 'குதிரை கீழே தள்ளினதல்லாமல் குழி வேறு பறிப்பதுபோல எதிர்த்து வாதாடுகிருளே!' என்ற ஆத்திரந்தான் மேலோங்கிற்று.

அவன் நெஞ்சிலே நஞ்சு நிறைந்தது; கனல் மூண்டது. அதன் விளைவு?.........அவர்கள் பிரிய நேர்ந்தது. கருணு பிறந்தகம் சென்ருள்.

சில நாட்களுக்குப் பின் வேறு ஊருக்கு மாற்றலாகிப் போனன் வாசு. அடுத்த மூன்ரும் மாதத்திலே கருணு தாயானள்.

வற்ருத கண்ணீர், ஓயாத அழுகை, ஒழியாத புலம்பல்! பிறந்தகத்தினரின் ஆறுதல் மொழிகள் கருணுவின் உள்ளத்திற்குச் சாந்தி தரவில்லை. அவளை அவள் கணவனிடம் சேர்த்துவிடவேண்டும் என்று அவர்கள் பட்டபாடு பலன் தரவில்லை. அவன் இருக்கும் இடம் தெரிந்தால்தானே?

'பொல்லாப் பெண்ணுக்கு எல்லாம் துர்க்குறி' என்பது போலக் கருணுவின் துர்ப்பாக்கியம் அவள் பெற்ருேரை ஒருவர் பின் ஒருவராக மாய்த்தது. அண்ணன், அண்ணி இருவரிடமும் ஏங்கி நிற்கும் நிலை ஏற்பட்டபோது, அவள் துயரம் ஆயிரம் மடங்காயிற்று அவளோடு மட்டுமில்லை; ஒரு

குழந்தை வேறு. அண்ணன் ஓரளவு நல்லவன்தான். அண்ணி...?

காலம் சென்றது. கல்யாணம் வளர்ந்தான். ஒன்று இரண்டு என வருஷங்கள் ஐந்து ஓடியே போய்விட்டன. கல்யாணம் அக்கம் பக்கம் உள்ள குழந்தைகளையும், அவர்களுக்கும் தகப்பனரிடம் கிடைக்கும் சலுகைகளையும் பார்த்துப் பார்த்துத் தாயை நச்சரிக்கத் தொடங்கினன். அவள் அவனைக் கடவுளை வேண்டச் சொன்னாள். தானும் ஓயாது வேண்டினாள். கடவுள் கண் திறக்கவில்லை. என்றாவது திறப்பார் என்று அவளுக்கு ஒரு குருட்டு நம்பிக்கை. குழந்தைக்கு, பாவம், அது என்ன கண்டது?

★

வெறிபிடித்த நிலையிலே மனைவியைத் துறந்து வெளியேறிய வாசு, அந்த வெறியின் முதிர்ச்சியினால் பைத்தியம் கொண்டவன்போல் ஆகிவிட்டான். வேலையிலே அடிக்கடி பிழைகள் செய்து மேலதிகாரிகளிடம் திட்டு வாங்கினான். ஆகாரம், நித்திரை முதலியவற்றில் கூடக் கருத்தின்றிச் சதாகாலமும், 'மனைவி—துரோகி; நண்பன்—துரோகி' என்று மனத்தினூடே உருப்போட்டபடியே வந்துகொண்டிருந்தான். எனினும் இடையிடையே, 'உண்மையில் அவர்கள் நிரபராதிகள் தாமோ? நாம்தான் தவறாக அவர்களைக்கருதிவிட்டோமோ?' என்பனபோன்ற சிந்தனை எழும். உடனே அந்தச் சந்தர்ப்பம், சம்பவம், அடுத்து நடைபெற்ற நிகழ்ச்சிகள், அவர்களின் வாக்குமூலங்கள், கருணாவின் எதிர்ப்பு—ஆகியவை கோவையாக மனத்தில் எழுந்து அவன் சலனத்தைப் போக்கி, 'அவர்கள் துரோகிகளே!' என்ற தீர்மானத்தை உறுதிப்படுத்திவிடும். இன்னும் தீவிரமாக யோசிக்குங்கால், அவர்கள் நெடுநாளையத் துரோகிகள் என்ற எண்ணங்கூட ஏற்படும். அதன் பயனாய் பழைய சம்பவத்திற்கு முன்னால் அவர்கள் சகஜமாக நடந்துகொண்ட முறைகள் எல்லாங்கூடக் குற்றமுள்ளவைகளாகத் தோற்றும். இத்தனை நாசத்திற்கும் வித்து நான் தானே என்ற நினைவுமட்டும் எழாது.

ஐந்து வருஷங்களுக்குப் பிறகு ஒரு நாள், திடீரென்று வேணுவைச் சந்தித்தான் வாசு. "என்ன இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் ஊரைவிட்டுவந்து விட்டாயே! உன் உடம்பு ஏன் இப்படி இளைத்துத் துரும்பாய்ப் போய் விட்டது?" என்றெல்லாம் விசாரித்தான் வேணு. வாசு வாய் திறந்து ஏதும் பதில் சொல்லாமல் ஒருமுறை சூள் கொட்டினான். வேணுவுக்கு என்னவோபோல் இருந்தது. "ஏன் என்னவோபோல் இருக்கிறாய்?" என்று மீண்டும் கேட்டான் அவன்.

"ஒ...ன்...று...ம்...இல்லை" என்றான் வாசு.

"கருணா சௌக்கியமா? குழந்தை சௌக்கியமா?" என்று வேணு பரிவோடு விசாரித்ததும், வாசு மறுபுறம் திருப்பி உதட்டைக் கடித்துக்கொண்டான். 'குழந்தை!......யார்

குழந்தை? என்னுடையதா, அல்லது...' என்று மனசிலே பொருமினன்.

"என்ன வாசு இது? ஏன் மௌனம் சாதிக்கிருய்?"

"கருணு...போ...ய்...வி...ட்...டா...ள்...!"

இப்படிச் சொல்லிவிட்டு விர்ரென்று அங்கிருந்து போய்விட்டான் வாசு.

"ஆ!... போய்விட்டாளா?" என்று அப்படியே தலையிலே கை வைத்துக்கொண்டு அருகே இருந்த சுவரில் சாய்ந்தான் வேணு.

நாலைந்து நாட்களுக்குப் பின் மீளவும் வாசு வேணுவைச் சந்தித்தபோது, "இதேதடா சனியன்! இங்கும் வந்து விட்டான், என் குமுறலைக் கிளப்ப" என்று முணுமுணுத்துக் கொண்டே அவனைப் பாராததுபோல் போக முயன்ருன். வேணு விடவில்லை. வழிமறித்துச் சிறிது நேரம் பேசி, கருணுவுக்கு என்ன நேர்ந்தது, பிரசவத்திலே போய்விட்டாளா என்பன போன்ற கேள்விகளைக் கேட்டு அவன் பிராணனை வாங்கினன். அவனுக்கும் அதே ஊரில் மாற்றலாகியிருக்கிறது என்பதை அறிந்த போது, வாசு மிகவும் வேதனையடையந்தான். அவன் மனநிலை அறியாத வேணு அடிக்கடி அவனைச் சந்தித்துக் கருணுவைப் பற்றி வாய் ஓயாது பேசிக் கண்ணீருகுத்து 'அவள் பேசும் தெய்வம்' என்றெல்லாம் புகழ்ந்தான்.

ஒருநாள் மாலை வாசு வேறு சிலருடன் நடுத்தெருவிலே பேசிக் கொண்டிருக்கையில் வேணு அங்கே சென்ருன். வாசு பேசி முடிந்ததும் வேறு ஒருவர் ஏதோ ஒரு முக்கியமான காரியத்தைப்பற்றி உணர்ச்சி பொங்கப் பேசினர். அப்போது எல்லோரும் மெய்ம்மறந்த நிலையில் இருக்க, வேணுமட்டும் வாயை மூடிக்கொண்டு சிரித்தான். அதை வாசு மட்டும் பார்த்தான். 'எதுக்குச் சிரிக்கிருய்?' என்று கேட்டான். வேணு அங்கே நின்றவர்களுள் குள்ளமான ஒருவரைச் சுட்டிக் காட்டினன்.

குள்ள மனிதனைப் பார்த்ததும் வாசுவுக்குங் கூடச் சிரிப்பு வந்துவிட்டது. அந்த மனிதர் அரை அசடு போலும்! பேசிக்கொண்டிருந்தவரைப் பார்த்தபடி அவர் பேச்சுக்கும் முகபாவத்திற்கும் ஏற்பத் தம் முகத்தையும் பலவிதமான பாவங்களில் கோணலாக்கிக் கொண்டு கைகளையும் பல கோணங்களில் அசைத்து அபிநயம் பிடித்தார். உடலும் விகாரமாக வளைந்து கொடுத்தது. அத்தனை சுவாரசியமாகப் பேச்சை ரசிக்கிருர், அந்த மனிதர்!

"வாசு, இப்போதுதான் எனக்கு ஞாபகம் வருகிறது. அன்ெருருநாள் உன் வீட்டிலே நீ, நான், கருணு, மற்றும் சிலர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோமே! அப்போது அங்கே இருந்த ராமலிங்கம் இப்படித்தான் உன் பேச்சை ரசித்து அபிநயம் செய்தார். அதை யாருமே கவனிக்கவில்லை. முதலில் நான் பார்த்தேன். உடனே கருணுவுக்கு ஜாடை செய்து காண்பித்தேன். எங்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை. நீகூட அப்புறம் ஒருநாள் கேட்டாயே, ஏதுக்குச் சிரித்தாய் என்று; அப்போது எனக்கு நினைவு வரவில்லை. இப்

போது அதேபோன்ற காட்சியை மீண்டும் பார்த்ததும் சட்டென்று நினைப்பு வந்தது. கடவுள் சிருஷ்டியிலே எத்தனை விசித்திரம் பார்த்தாயா?...''

"நானே ஒரு விசித்திரந் தானே? இல்லாவிட்டால் இப்படிக் கண்மூடித்தனமாக, அநியாயமாக, முட்டாள் தனமாக....'' என்று மனசுக்குள் அடுக்கிக் கொண்டே போனான் வாசு. அவன் நெஞ்சு வறண்டது. இருதய ஓட்டமே நின்று விட்டாற்போல் இருந்தது.

"வேணு, நாளைக்கு ஆபீசுக்கு லீவுபோடு. என்னுடன் திருச்சிக்குப் புறப்படத் தயாராய் இரு.''

'வேணுஎன்ன ஏதென்று கேட்கவில்லை. இளைய தாரம்நிச்சயிக்கவதாவது ஏற்பாடாகியிருக்கும்...' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

வாசுவின் இஷ்டப்படி பிரயாணத்துக்குச் சித்தமானான்.

★

தெருவாசலில் தண்ணீர் லந்தெளித்துக் கோலம் போட்டுக்கொண்டிருந்தாள் கருணா. பக்கத்தில் கல்யாணம் நின்று அம்மா கோலமிடும் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தான். எதிர்வீட்டுக் கண்ணனும்வந்து கல்யாணத்தின் ரசனையில்பங்கு கொண்டான்.

தடதட வென்று வேகமாக ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. முதலில் வாசு இறங்கினான்; பிறகு வேணு இறங்கினான். முகஜாடையிலிருந்து கல்யாணத்தை அறிந்து கொண்ட வாசு அவனை வாரி எடுத்து அணைத்துக் கொண்டு முத்தமாரி பொழிந்தான். கருணாவினால் தன் கண்களையே நம்பமுடியவில்லை. உணர்ச்சிகளைப் பாடுபட்டு அடக்கிக் கொண்டு புன்முறுவல் செய்தாள்.

எல்லோரும் உள்ளே சென்றார்கள். தூங்கிக்கொண்டிருந்த சுந்தரராஜன் விழித்தெழுந்துஓடோடியும் வந்து மாப்பிள்ளையை வரவேற்றான். வீட்டில் குதூகல வெள்ளம் கரைபுரண்டோடிற்று.

தகப்பனாரின் அன்புப் பிடிப்பிலிருந்து மெல்ல நழுவிய கல்யாணம் உள்ளே ஓடிக் காபி தயாரித்துக் கொண்டிருந்த தாயிடம், "அப்பா தானே, அம்மா?'' என்றான். ஆமாண்டா கண்ணு. உன் பிரார்த்தனைக்கு இரங்கி சுவாமி அவரை அழைத்து வந்திருக்கிறார்'' என்று கொஞ்சினாள் கருணா.

கல்யாணத்தின் குழந்தையுள்ளம் களிப்பால் நிறைந்தது.

கருணா—வாசு இருவர்களின் வாழ்க்கை வானில் கவிந்திருந்த மூடுபனி விலகிற்று. அன்புக் கதிரவன் அவர்கள் வாழ்வில் ஒளி வீசினான். ★

'எல்லார்வி'
எழுதும்
சிறுவர் தொடர்கதை

**காகிதப் படகு**

**1—12—52** இதழில்
ஆரம்பமாகிறது.

*Printed and Published by PR. AL. M. N. Narayanan for Ponni Ltd., at Ponni Achakam, 16. Seni Amman Koil Street, Tondiarpet, Madras-21.*
*Editor: K. A... M. A., L. T.*


நேஷனல் பிக்சர்ஸ் முதல் முழக்கம்
கருணாநிதியின் புரட்சி முரசம்
கணேசன்- புதிய அறிமுகம்
பராசக்தி
சென்னை, பாரகன், அசோக், பாரத்,
மற்றும் தென்னாடெங்கும் இப்பொழுது நடைபெறுகிறது.

Regd. No. M. 4849 PONNI

அன்றலர்ந்த மலர்போல்
புதுமையாகவும் மோகன
காந்தியுடனும் விளங்குங்கள்.




# ஹமாம்
டாய்லட் ஸோப்பு
உபயோகியுங்கள்

ஹமாம் புதிய
வாசனை பொருந்தியது...
அதிக நாள் வரவும்
செய்கிறது!



தி டாடா ஆயில் மில்ஸ்
கம்பெனி லிமிடெட்

TATA PRODUCT

டாடா தயாரிப்பு

TS 6129